கிராம நலம்

ஜனவரி '61

13 ந. பை.

அடிகளாரின் அடிச்சுவட்டில்

''எல்லோரும் தங்களுடைய கடமைகளை மறந்து விட்டு, உரிமைகளுக்காக மட்டும் போராடுவார்களேயானால், அதனால் ஏற்படும் விளைவு தடுமாற்றமும் குழப்பமும் தான். உரிமைகளை வற்புறுத்திக் கொண்டேயிருப்பதை விட்டு விட்டு, ஒவ்வொருவரும் தங்களுடைய கடமைகளை மனப்பூர்வமாகச் செய்ய முன் வந்தால், மனித வாழ்விலே நீதியும் ஒழுங்கும் நிலைத்து நிற்கும்.''

கிராம நலம்

"கிராமங்கள் வாழ, கிராமப் பொருள் ஓங்க
திட்டங்கள் மேற்கொள்வோம் சேர்ந்து"

— காந்தி மணிக்குறள்.

மாடி 6	ஜனவரி 1961	படி 4

பொருளடக்கம்

	பக்கம்.
"கிராமிய நல் வாழ்வே தேசிய நல் வாழ்வு"—ஸ்ரீ ராஜேந்திர பிரசாத் ..	2
"குடியரசு கொண்டாடுவோம்" (பாட்டு)	3
சென்னை கவர்னர் உரை	4
புது வாழ்வுக்கு வழி வகுக்கும் திட்டம்	7
சிற்றூரைப் பார்! (பாட்டு)	8
மண்ணும் பொன்னும்—ஸ்ரீ கே. எஸ். சுப்பிரமணியம்	10
"முயற்சி திருவினை ஆக்கும்"	12
சிகிச்சை! (பாட்டு) .. .. — — — ..	13
பூலோக நரகம்—ஸ்ரீ மீ. ல. சபரிராஜன்	15
ராஜ்ய சமுதாய நல அபிவிருத்தி	17
பொங்குக பொங்கல்! (பாட்டு)	18
குடும்பக் கட்டுப்பாடு	19
பாண்டிநாட்டு நாடோடிப்பாடல்கள்—ஸ்ரீ செ. அன்னகாமு, பி.ஏ. எல்.டி ..	27
"நம்பினோர் கெடுவதில்லை"—ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி, கிராம அபிவிருத்திக் கமிஷனர் (வானொலிப் பேச்சு) ..	34

பகுதி–2

தொடக்கக் கல்வி—பஞ்சாயத்து ஸ்தாபனங்களின் கடமைகள்	(i—xii)

அறிவிப்பு—

ஸ்ரீ வெ. சாமிநாத சர்மா அவர்கள் எழுதும் "காந்தியடிகளும் கிராம வாழ்க்கையும்" என்ற தொடர் கட்டுரை அடுத்த இதழிலிருந்து ஆரம்பமாகும்.

ஆசிரியர்,
"கிராமநலம்"

'கிராம நல' இதழ் ஆலோசனைக் குழு

ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ்.,
பிரதமச் செயலாளர்.

ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி
கிராம அபிவிருத்திக் கமிஷனர்

ஸ்ரீ எஸ். கிருஷ்ணசாமி பிள்ளை
துணைக் காரியதரிசி [பஞ்சாயத்து]

ஸ்ரீ கே. சுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி [பயிற்சி]

ஸ்ரீ டி. என். சேஷன், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி [திட்டம்]

ஸ்ரீ எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.,
பொதுஜனத் தொடர்பு அதிகாரி-
ஆசிரியர்.

"கிராம நலம்" பத்திரிகையில் வெளியிட கதை, கட்டுரை, பாட்டு முதலியனவும் அவை சம்பந்தப்பட்ட கடிதங்கள் அனைத்தும் "ஆசிரியர், "கிராம நலம்", கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறை, சென்னை-9" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

கிராம நலம்–சந்தா விவரம்

ஆண்டு சந்தா ரூ. 1·50 ந.பை.
ஆறுமாத சந்தா 0·75 ந.பை.
தனிப் பிரதி 0·13 ந.பை.

சந்தா, மற்றும் "கிராம நலம்" பத்திரிகை சம்பந்தப்பட்ட எல்லா கடிதப்போக்குவரத்துகளும் 'பொது ஜனத் தொடர்பு அதிகாரி, கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை, சென்னை-9" என்ற முகவரிக்கு எழுதப்படவேண்டும். ஸ்டாம்புகள் பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது. வி. பி. பி. மூலம் பிரதிகள் அனுப்பப்படமாட்டாது.

"கிராமிய நல் வாழ்வே தேசீய நல் வாழ்வு"

[குடியரசுத் தலைவர் ஸ்ரீ ராஜேந்திரபிரசாத்]

"கோடிக்கணக்கான கிராம மக்களுக்கு நல்வாழ்வு தேடித் தரும் பஞ்சாயத்து ராஜ்யத் திட்டத்தை வெற்றி பெறச் செய்யக் கடமை உணர்வுடன் உறுதிமொழி ஏற்றுச் செயலாற்ற வேண்டியது மிக மிக இன்றியமையாததாகும்.

வேற்றுமைகளை மறந்து ஒரே லட்சிய நோக்கத்துடன் பணியாற்றினால், இந்த மகத்தான சோதனை வெற்றி பெற்றே தீரும்."

இக்கருத்தையும் நம்பிக்கையும் வெளியிட்ட ராஷ்டிரபதி ராஜேந்திர பிரசாத், அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு உள்ள மாபெரும் கடமைகளையும் வலியுறுத்திக் கூறினர்.

மைசூர் மாநிலத்தில் 1959 நவம்பர் முதல் 30,000 கிராமங்களில் அமுலிலிருக்கும் பஞ்சாயத்து ராஜ்யத் திட்டத்தை முறைப்படி ஆரம்பித்து வைத்தபொழுது ராஷ்டிரபதி இவ்வாறு கூறினர் :

"இந்தியா இன்னும் கிராமப் பொருளாதாரத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இந்திய ஜனத் தொகையில் சுமார் முக்கால் வாசிப் பேர் இன்னமும் கிராமங்களில் தான் வாழ்கின்றனர். ஆகவே கிராம க்ஷேமநலம் தான் உண்மையில் தேசிய க்ஷேம நலம். பஞ்சாயத்துக் கொள்கை பழமையானதுதான் என்றாலும் இன்றைய தேவைகளுக்கேற்ப அதனை உருவாக்க வேண்டியுள்ளது. இன்றையத் தேவைகள் சிக்கலானவையாக இருப்பதோடன்றி, பல மடங்காகப் பெருகும் தன்மையதாகவும் உள்ளன. இவ்வாறு சரிக்கட்டிக்கொண்டு செல்வதற்கு ஏதுவாக இருக்கவேண்டுமென்ற உத்தேசத்துடனும் பஞ்சாயத்து முறை அதிக அளவு தீவிரமாகவும் பயனுள்ள வகையிலும், திறமையுடனும் செயல்படுமாறு செய்யும் உத்தேசத்துடனும் அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டும் என்ற சிந்தனைப் போக்கு ஏற்பட்டது.

ஆகவே, இது நேரான நடவடிக்கையென்பதில் சந்தேகமிருக்க முடியாது. ஓரிரு ராஜ்யங்களின், முக்கியமாக ராஜஸ்தானின் எடுத்துக்காட்டு ஏற்கெனவே உங்கள் முன்பு உள்ளது.

அதிகாரப் பரவல் முறை

நமது அபிவிருத்தித் திட்டங்கள் பல்வேறு சீரமைப்புத் திட்டங்கள் ஆகியவற்றின் விளைவாக நகரப் பகுதிகளில் ஏற்பட்டுள்ளது போன்று அத்தனை வளர்ச்சி கிராமப் புறங்களில் ஏற்படவில்லை என்ற எண்ணம் நிலவுகிறது. ஆனால், திட்டங்களை வகுக்கும்போது, கிராமப்பகுதிகளின் நலன்களை உத்தேசித்தே வகுக்கப்படுகின்றன. எனினும் இவ்வித நிலை ஏற்படக் காரணம் என்ன ? உண்மை நோக்கத்திற்கும், கண்கூடான பலனுக்கும் இடையே உள்ள பாகுபாட்டிற்குப் பரிகாரங்கள் உள்ளன.

எல்லா அதிகாரங்களும் மந்திரிகளிடமும், சர்க்கார் காரியாலயத்திடமும், அதிகாரிகளிடமும் குவிந்து கிடப்பது வீண் காலதாமதமும், மக்கள் இவர்களை அணுக முடியாத நிலையும் ஏற்படக் காரணமாகின்றன. இதனால் கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டு நியாயமானதாகவோ, அன்று நியாயமற்றதாகவோ இருக்கலாம். ஆனால் இதற்குப் பரிகாரம் ஒரே மார்க்கம் தான் என்பதில் சந்தேகமில்லை. அதாவது ஒரு சில அதிகாரங்களைப் பிரதானமாக பஞ்சாயத்து ஆட்சி முறை அபிவிருத்தி, செயல்படுவது சம்பந்தமானவற்றை பரவலாக்கவேண்டும்.

திட்ட வெற்றியை மதிப்பிட வழி

கிராம மக்கள் அதிகப்பட்சமான பலனை அடைய வேண்டுமென்றால், எந்த அந்தஸ்திலிருந்த போதிலும் சரி, ஊழியர்கள் அனைவரும் ஒருமனத்துடன் கிராம வளர்ச்சிக்காகப் பாடுபடுவது மிக முக்கியமானது. கிராமங்களில் வாழ்க்கை நிலைமைகளை அபிவிருத்தி செய்து, சகல விதத்திலும் வளர்ச்சி ஏற்படச் செய்வதென்ற அவர்களது நோக்கு அவர்களை ஐக்கியப்படுத்தி நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபாடு கொள்ளச் செய்யவேண்டும். இந்த நல்ல நோக்கத்தில் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இது வீண் போகாது. பல கிராமங்களில் சுகாதாரத்தரம் குறைவாக இருக்கிறது. இது கிராம சேவைகளை ஓரளவு பாதிக்கிறது. கிராமங்களில் தொழில் புரிய ஆசிரியர்கள், டாக்டர்கள் கிடைப்பது கடினமாக உள்ளது. இதற்குக் காரணம் அங்கு போதிய வாழ்க்கை வசதிகள்

இல்லாததாகும். நகரங்களில் உள்ளதை விடக் கிராமங்கள் பின் தங்கியுள்ளன என்பது என்னவோ உண்மைதான். எனவே தான், கிராமப் பொருளாதா நல்வாழ்வுக்கு ஒரு காலவரையறை கட்டி சபதமேற்றுச் செயல்படுவது அவசியம். இந்தத் திட்டம் வெற்றியடைய இரண்டு அல்லது மூன்றாண்டு வரம்பு வைத்து ஒப்படைத்து சபதம் ஏற்றுப் பணியாற்றவேண்டும், இந்தக் காலப் போக்கில் கிராமங்களில் நிலைமை உயர்ந்தால், அது அதிகாரத்தைப் பரவல் முறையாக்கும். மகத்தான ஜனநாயக நடவடிக்கை வெற்றியைத் தரும். இல்லையேல், நமது முயற்சிகள் தான் குறைபாடு உடையவை என்று கொள்ள வேண்டும். திட்டவெற்றியை மதிப்பிட இதுவே சிறந்த வழி.

கிராமிய நல்வாழ்வே நமது தேசிய நல்வாழ்வாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும், அதிகாரிகளும் முற்றிலும் கடமை உணர்வுடன் பணியாற்ற வேண்டியது அவசியமாகும். 'கிராம மக்களின் நல் வாழ்வுக்கு சேவை செய்கிறோம் என்ற மனப்பான்மையுடன் இருக்கவேண்டும். அடுத்தபடியாக சட்டமன்றப் பிரதிநிதிகள் வசமும் அதிக பொறுப்பு இருக்கிறது. தங்களது தொகுதிகளில் உள்ள பஞ்சாயத்துக்கள் திறம்பட செயலாற்ற இவர்கள் சிறப்பான அக்கறை காட்டி உழைக்கவேண்டும். சிறிய உதாரணமாக இவர்கள் திகழவேண்டும்."

"குடியரசு கொண்டாடுவோம்"

(வி. வெங்கடநாராயணன்)

பாரதத்தின் புகழ்தனையே மகிழ்ந்து பாடுவோம் நம்
சாரதியாய் நின்றகாந்தி தன்னைப் போற்றுவோம்.

கங்கைகோசி பிரும்மபுத்ரா தபதி நர்மதை
துங்கபத்ரா கோதாவரி கிருஷ்ணா வடபெண்ணை
மங்களமாம் காவிரிதென் பெண்ணை பாலாறு
எங்கள்வையை நதிகள்பல பாயும் நன்னாடு (பார)

உலகத்திலே உயரமான மலைகள் கண்டீரோ
அலகிலாத வடிவுகொண்ட எம்இமயம்போல்
கலங்கள்காணும் கடல்கள்தெற்கு கிழக்கு மேற்கிலும்
தலங்கள்பல நாட்டினிலே காணக் காட்சியாய் (பார)

புத்தர்காந்தி போன்றபலர் பிறந்த திந் நாடு
எத்தனைத்துன்—பங்களையும் பொறுத்ததிந்நாடு
அத்தனையும் இன்பமாக அமைந்த நல்வாழ்வு
சுத்தமான குடியரசின் மக்கள் நீதியால் (பார)

அண்ணல்காந்தி கண்டகனவு நனவு ஆனதே
அறுபது அக்டோபர் இரண்டு அன்று நாள் முதல்
அன்பின்வழியாய் அமைந்த பஞ்சாயத்து யூனி யன்
அமைத்து சென்னை அரசியலார் வெற்றி கண்டதே
(பார)

அறுபத்தொன்று அக்டோபர்நாள் இரண்டு முடிவிலே
அகில சென்னை அரசியலார் அமைப்பு முழுவதும்
அமைந்திடுமாம் பஞ்சாயத்து யூனியன் யாவும்
அவைகள் செயல் ஆட்சியிலே அபிவிருத்தி காணும்
(பரா)

பர்மிய வர்த்தகக் குழுவினர் 18-11-60-ல் சென்னை மாநிலக் கவர்னர் ஸ்ரீ விஷ்ணுராம் மேதி அவர்களைச் சந்தித்தனர்.

"பொறுப்புணர்ச்சியுடனும், கண்ணியத்துடனும் கடமைகளை நிறைவேற்றுவோம்"

(சட்ட மன்றத்தைத் துவக்கி வைத்து சென்னை கவர்னர் அவர்கள் ஆற்றிய உரை)



கனம் சட்டமன்ற அங்கத்தினர்களே,

சென்னைச் சட்டமன்றத்தின் இக் கூட்டத் தொடரைத் துவக்கி வைக்கையில், உங்கள் அனைவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த சந்தர்ப்பத்தில், மாட்சிமை தங்கிய எலிசபெத் ராணி அவர்களின் இந்திய விஜயத்தையும், அவர்கள் நமது சென்னை நகருக்கு வரவிருப்பதையும் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன். பிரிட்டிஷ் ராணி அவர்களின் இந்த விஜயம் மிக முக்கியமான நிகழ்ச்சியாகும். ராணியாரின் வருகை குறித்து நாம் பெரு மகிழ்ச்சி யடைவதற்குக் காரணம், நாமே விரும்பித் தொடர்பு கொண்டுள்ள காமன் வெல்த் ாடுகளின் தலைவி என்ற முறையில் அவர்கள் வருகிறார்கள் என்பதால் மட்டுமல்ல ; அவருடைய நல்ல பண்புகளையும், மக்களிடத்தில் அவருக்குள்ள ஆழ்ந்த அன்பையும் பற்றி நாம் பெரிதும் கேள்விப்பட்டிருக்கிறோம். இந்த மாநில மக்களின் சார்பில் வருக, வருக என்று அவருக்கு நான் நல்வரவு கூறுகிறேன்.

பருவமழை சாதகமாய் உள்ளது

2. கடந்த ஆகஸ்டு மா சத்தில் நான் ஆற்றிய உரையில் பருவ மழை நமக்குச் சாதகமாய் இல்லையென்று அச்சம் தெரிவித்திருந்தேன் ஆனால், வடகிழக்குப் பருவ மழை காரணமாக நல்ல மழை பெய்திருப்பது நமது அதிர்ஷ்டந்தான். நவம்பர் மாதத்தில் பெய்த பலத்த மழையால் ஓரளவு வீடுகள், சாலைகள், நீர்ப்பாசனக் கட்டிடங்கள் ஆகியவை பல மாவட்டங்களிலும் சென்னை நகரிலும் சேதம் அடைந்தன. இவ்வாறு சேதமடைந்த பகுதிகள் எல்லா வற்றிலும் அரசாங்கம் தக்க நிவாரண வேலைகளைத் துவக்கி எந்பட்ட துன்பங்களை உடனடியாகப் போக்கியிருக்கிறார்கள். அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமையைச் சீக்கிரமே சீர்திருத்தப்பட பெரிதும் உதவியிருக்கிறது. பிரதம மந்திரி நேரு, வெளி நாட்டு முக்கியஸ்தர்கள் ஆகியவர்களிடமிருந்தும் மற்றும் பல நிலையங்களிடமிருந்தும் நிவாரண உதவி கிடைத்துள்ளது. தாராளமாக உதவி அளித்தவர்கள் எல்லோருக்கும் இந்த மாநில அரசாங்கத்தின் சார்பிலும் மக்கள் சார்பிலும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சென்னை நகர சாலைகள் பழுதடைந்து மோசமாயிருப்பதால், பெரிய சாலைகளை உடனடியாக சீர்திருத்த தேவையான நிதி வசதியை சென்னை நகராண்மைக் கழகத்தாருக்கு அரசினர் அளித்துள்ளார்கள்.

3. மாநிலம் முழுவதிலும் நல்ல மழை பெய்திருப்பதால், சாகுபடி அபிவிருத்தி அடைந்திருக்கிறது. வெள்ளத்தால் சேதம் ஏற்பட்ட சில இடங்களில் திரும்பவும் பயிர் செய்ய வேண்டி ஏற்பட்டது. இதற்கான விதைகள், உர வகைகள் வாங்குவதற்கு அரசாங்கத்தார் கடன்களும், உதவித் தொகைகளும் தாராளமாக வழங்கியிருக்கிறார்கள். இம் மாநில மார்க்கெட்டுகள் அனைத்திலும் உணவுத் தானியங்கள் போதிய அளவுக்கு இப்போது கிடைக்கின்றன. நல்ல மகசூல் கிடைக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுவதால், விலை வாசிகளும் குறையத் தொடங்கியுள்ளன. இதற்கிடையில் அறுவடைக்கு முன் விலைவாசிகள் கொஞ்சம் தூக்கலாய் இருப்பதால், சென்னை நகரிலும். மற்ற நகரங்களிலும் 520 நியாய விலைக்கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

மாநில மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்

4. திட்டக் கமிஷனுடன் கலந்து இம்மாநில மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் இப்போது உருவாக்கப்பட்டு வருகிறது. திட்ட முதலீடு சுமார் 291 கோடி ரூபாய் என்று தற்போதைக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 190 கோடி ரூபாய் மத்திய உதவியாகக் கிடைக்கும். நிதி வசதிக் குறைவால், இந்தச் சட்டமன்றம் அங்கீகரித்த திட்டத்தில் சிலவற்றைக் குறைக்க வேண்டி நேரிட்டது. ஆனால், முக்கிய அபிவிருத்தித் திட்டங்களைப் பொறுத்த மட்டில், நாம் குறித்திருந்த இலக்குகளில் பெரும்பாலானவை அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டன. திட்டத்தை

நாம் நிறைவேற்றும்போது, காலா வட்டத்தில் இந்த குறைக்கப்பட்ட சிலவற்றைக்கூடச் செய்ய விட முடியுமென்று, இரண்டாவது திட்ட அனுபவம் நமக்கு நம்பிக்கை அளிக்கிறது.

விவசாயத்துக்கு முதல் இடம்

5. மூன்றாவது திட்டத்தில் விவசாய உற்பத்திக்கு நாம் முதன்மையான இடம் அளித்திருக்கிறோம். தற்போதைய விளை பொருள் உற்பத்தி சுமார் 52 லட்சம் டன் அளவில் உள்ளது. மேலும், கூடுதலாக 15½ ட்சம் டன் உணவு உற்பத்தி செய்ய வேண்டுமென்று மூன்றாவது திட்டத்தில் நாம் திட்டமிட்டிருக்கிறோம். இந்த உயர்ந்த அளவு கிடைப்பதற்கு விசேஷ முயற்சி எடுத்துக் கொண்டால் மட்டுமே, இதைச் சாதிக்க முடியும். நெய்வேலியில் ஏற்படுத்த விருக்கும் ரசாயன உரத் தொழிற்சாலையும், மற்ற உர வகைகளை உற்பத்தி செய்வதற்கான புதிய தொழிற்சாலைகளும் மூன்றாவது திட்டக் காலத்தில் முழு உற்பத்தியைத் தொடங்கி விடும். குடியானவர்களுக்கு நைட்ரஜன் பாஸ்பர உர வகைகள் போதிய அளவு கிடைப்பதற்கு அப்போது இயலும். நடைமுறைத் திட்டத்தில் பெரிய பாசனத் திட்டங்களுக்காக 14½ கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருந்தது; மூன்றாவது திட்டத்தில் 27 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சிறிய பாசனத் திட்டங்களுக்காக 8 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. ஆனால் நடை முறைத் திட்டத்தில் இதற்கு 4 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டுள்ளது. பரம்பிக் குளம் திட்டம் மூன்றாவது திட்டக்காலத்தில் பூர்த்தி யாகும் என்று எதிர்ப்பார்க்கிறோம். நடுத்தரப் பாசனத் திட்டங்கள் சிலவற்றையும் நிறை வேற்ற உத்தேசித்திருக்கிறோம். தற்போதுள்ள பழைய பாசனத் திட்டங்களுக்குப் பெரிய அளவில் அபிவிருத்திகள் செய்யவும் இதில் ஏற்பாடு செய்யப்படும். இரண்டாவது திட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட மாநில விதைப் பண்ணைகள் அனைத்தையும் 1 கோடி ரூபாய் செலவில் நல்ல முறையில் இயங்க ஏற்பாடு செய்யலாம். மண் வளப்பாதுகாப்புப் பணிகளுக்காக 2½ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மூன்றாவது திட்டத்திற்காக மொத்தம் ஒதுக்கியுள்ள தொகை 291 கோடி ரூபாயில் பெரிய நீர்ப் பாசனத் திட்டங்கள், சமுதாய அபிவிருத்தி, கூட்டுறவு இவை போன்ற திட்டங்கள் உட்பட வேளாண்மைக்காக மட்டும் ஒதுக்கியுள்ள தொகை சுமார் 80 கோடி ரூபாய் ஆகும்.

6. மின்சார அபிவிருத்திக்காகவும் மூன்றாவது திட்டத்தில் முதன்மை அளிக்கப்பட்டு, சுமார் 101 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது திட்ட இறுதியில் சென்னை மின்சார இணைப்பின் மொத்த சக்தி 571 மெகாவாட்டுகளாய் இருக்கும். நெய் வேலியில் மத்திய அரசாங்கத்தார் உற்பத்தி செய்யப்போகும் 400 மெகா வாட்டுகள் மின்சார சக்தியும் சேர்த்து மூன்றாவது திட்ட இறுதியில் இது 1,441 மெகா வாட்டுகளாய் உயரும். இரண்டாவது திட்டத்தைப் போலவே, மூன்றாவது திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள மின்சாரத் திட்டங்கள் மூலம் மின்சார உற்பத்தி செய்வதற்கு இப்போது முதற்கொண்டே நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். மேட்டூர் மலைக் குடைவுத் திட்டத்தில் ஏற்கனவே வேலை துவங்கி விட்டது. குந்தாத் திட்டத்தின் இறுதிப் பகுதி வேலையும் துவங்கு யாகிவிட்டது. கானடா அரசாங்கத்தார் முதற் பகுதிக்கு உதவியது போலவே இதற்கும் உதவ முன் வந்துள்ளார்கள். கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மூன்றாவது திட்ட இறுதிக்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி கொடுக்க முடியும் என்று எதிர்பார்க்கிறோம். புதிய திட்டக் காலத்தில் மின்சாரம் அதிகமாக உற்பத்தியாகும் என்றாலும், பெருகி வரும் தொழில் தேவைகள் அனைத்திற்கும் மின்சார வசதி அளிக்க முடியும் என்று நாம் எதிர்பார்ப்பதற்கில்லை ஆகவே, அண்டை மாநிலங்களிலிருந்து மின்சார வசதி கிடைக்குமா என்பதையும் ஆராய்ந்து வருகிறோம். அன்றியும், நமது மாநிலத்தில் அணு மின்சார நிலையம் ஒன்றை ஏற்படுத்து வதற்கான ஏற்பாடுகளையும் நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

பெரிய தொழில்கள் வளர....

7. பெரிய தொழில்களைப் பொறுத்தமட்டில், நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரி அளவினை ஆண்டு ஒன்றுக்கு 35 லட்சம் டன்னிலிருந்து 45 லட்சம் டன்னாக உயர்த்துவதற்கு மத்திய அரசாங்கத் திட்டத்தில் வகை செய்திருக்கிறார்கள். இதற்கு வேண்டிய இயந்திரங்களைக் கொண்டே, ஆண்டு ஒன்றுக்கு 60 லட்சம் டன் அளவுக்கு நிலக்கரி உற்பத்தியை அதிகமாக்க முடியும். நாம் அனைவரும் ஆவலாக எதிர்பார்த்திருக்கும் புதிய உருக்கு ஆலைக்கு வேண்டிய நிலக்கரித் தேவைகளை இதன் மூலம் பூர்த்தி செய்ய முடியும். இப்போது உருக்கு ஆலை சம்பந்தமான பரிசோதனைகள் திருப்திகரமாய் முன்னேறி வருகின்றன. ஆனால், 1961-ல் நெய்வேலிச் சுரங்கத்திலிருந்து போதிய அளவு நிலக்கரியைத் தோண்டியெடுத்து, அதை சேலம் இரும்புக்கனியைக் காய்ச்சுவதற்கான முன்னோடித் திட்டம் ஒன்றில் பயன்படுத்திய பிறகுதான், இந்தப் பரிசோதனைகள் பூர்த்தியாகும். இந்தத் திட்டம் பொருளாதார ரீதியில் அனுகூலமாக இருக்கும் என்பதை சந்தேகத்துக்கிடமில்லாமல் இது வரையில் கிடைத்த புள்ளிவிவரங்கள் நிரூபித்துள்ளன. வழக்கமான ஊது உலை முறைப்படி உருக்கு உற்பத்தி செய்வதற்கு வேண்டிய உயர்தர நிலக்கரி நம் நாட்டில் இப்போது கிடைப்பது மிகவும் அரிதாய் இருக்கிறது. இந்த நிலையில், நெய்வேலிப் பழுப்பு நிலக்கரியை மற்ற நிலக்கரிக்குப் பதிலாகப் பயன்படுத்தலாம் என்று நிரூபிக்கப்பட்டவுடன் நமது உருக்கு ஆலைத் திட்டத்துக்கு அனுமதி கிடைத்து விடுமென்று நாம் நிச்சயமாய் எதிர்பார்க்கலாம். இந்த அடிப்படையில், மேற்படி பரிசோதனைகளைத்

தொடர்ந்து நடத்துவதற்கு நமது திட்டத்தில் 75 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதுடன், இதற்கெனத் தனி அதிகாரி ஒருவரையும் நியமித்துள்ளோம்.

8. நெய்வேலித் திட்டத்துடன் இணைந்துள்ள மின்சார நிலையம், உரத் தொழிற்சாலை, பிரிக்கெட்டிங் தொழிற்சாலை, களிமண் சுத்திகரிப்புத் தொழிற்சாலை போன்ற மற்ற திட்டங்களில் எல்லாம் வேலை திருப்திகரமாய் நடந்தேறி வருகிறது. உதகமண்டலத்தில் கச்சா பிலிம் தொழிற்சாலை சம்பந்த மாகவும், சென்னையில் டெலி பிரிண்டர் தொழிற்சாலை, அறுவைக் கருவிகள் தொழிற்சாலை இவைகளுக்கான வேலை துவங்கி விட்டது. ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 20 ஆயிரம் டன் உருக்கை உபயோகித்துக் கம்பி, தகடுகள் போன்ற பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைக்காக மாநிலத் திட்டத்தில் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. தனியார் துறையில், காகிதத் தொழிற்சாலை ஒன்றைப் புதிதாக அமைப்பதற்கு வேலை விரைவாக நடந்து வருகிறது. புதிய அலுமினியக் கம்பெனி ஒன்றை ஏற்படுத்தும் நிமித்தமாய் அவசியமான பங்கு மூலதனம் திரட்டப்பட்டு, அதற்கான வேலைகள் உடனே துவங்க உள்ளன. சர்க்கரைத் தொழில் துறையில், ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 2 லட்சம் டன் வெள்ளைச் சர்க்கரை தயாரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. தொழில் வளர்ச்சியை அதிகப்படுத்தும் நோக்கத்துடன், புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கும்பொழுது அவற்றிற்கான எல்லா உதவிகளையும் சென்னைத் தொழில் முதலீடு கார்ப்பொரேஷன் செய்யும்படி ஏற்பாடு செய்யபப்பட்டுள்ளது.

சிறு தொழில்களின் வளர்ச்சி

9. சிறு ரகத் தொழில்களைப் பொறுத்தவரையில், மாநிலத் திட்டத்தில் சுமார் 11 கோடி ரூபாய் அளவுக்குத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. பற்பல மாவட்டங்களில் ஏற்படுத்தவிருக்கும் 26 தொழில் பேட்டைகள், 100 தொழில் பணி மனைகள், பல சிறிய தொழிற்சாலைகள் ஆகியவற்றிற்கு இத்தொகை செலவிடப்படும்.

10. போக்குவரத்துத் துறையில், தூத்துக்குடியை ஓர் ஆழ்கடல் துறைமுகமாக ஆக்க உறுதியான முடிவு செய்யப்பெற்று, அதற்கென மூன்றாவது திட்டத்தில், மத்திய அரசினர் பகுதியில் நிதி ஒதுக்கல் செய்யப் பெற்றுள்ளது. மேலும் தென் பிராந்தியத்தில் புதிய இருப்புப்பாதைகள் போடும் திட்டம் பற்றி, இரெயில்வே அமைச்சிற்கு இந்த அரசாங்கம் செய்து கொண்ட வலுவான முறையீட்டின் பயனைத் தக்க பயன் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கிறோம்.

தொழிற் கல்வி பெருகிவளரத் திட்டம்

11. தொழிற் கல்வியை எடுத்துக்கொண்டால், பொறியியற் கல்லூரிகளில் மேலும் 610 மாணவர்களையும், பல தொழிற் பள்ளிகளில் மேலும் 700 மாணவர்களையும் சேர்த்துக் கொள்வதற்காகப் புதிய திட்டம் வகை செய்கிறது. இம்மாநிலத்தில் பிராந்தியப் பொறியியற் கல்லூரி ஒன்றை மத்திய அரசாங்கத்தார் ஏற்படுத்துவார்கள். பொதுக் கல்வியைப் பொறுத்தவரையில், 6 முதல் 11 வயது உள்ள சிறுவர்களுக்குக் கட்டாயக் கல்வி முறை அமுலுக்குக் கொண்டு வரப்படும். மதிய உணவுத் திட்டத்தின் மூலம் சுமார் 17 லட்சம் சிறுவர்களுக்கு உணவளிக்கப்படும். தொழிற்கல்வி உட்படக் கல்வித் துறைக்காக மொத்தம் சுமார் 32 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

12. 1961–62-ம் ஆண்டுக்குரிய வரவுச்செலவுத் திட்டத்தை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்வதுதான் சட்ட சபையில் இக்கூட்டத் தொடரின் முக்கிய அலுவலாகும். நடைமுதல் ஆண்டில் அவசரமான சில செலவினங்களுக்குரிய துணை மதிப்பீடுகளும் உங்கள் உடனடி ஆலோசனைக்குச் சமர்ப்பிக்கப்படும். கீழ்க்கண்ட மசோதாக்களும் உங்கள் ஆலோசனைக்கு வரும் :—

(அ) சீட்டு நிதிகளைக் கட்டுப்படுத்துதல், முறைப்படுத்துதல்—இவற்றை வகை செய்வதற்கான மசோதா ;

(ஆ) தொழில்களுக்கு அரசாங்க உதவியளிக்கும் நிபந்தனைகளைத் தளர்த்துவதற்காக, தொழில்களுக்கு அரசாங்க உதவியளிக்கும் சென்னைச் சட்டத்தைத் திருத்துவதற்கான மசோதா ;

(இ) சென்னைப் பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் ஷெட்யூலில் கண்டுள்ள சில இனங்களை எடுத்துவிடுவதற்காக அச்சட்டத்தின் 59-வது பிரிவின் கீழ் வெளியிட்டுள்ள அறிக்கையை உறுதிப்படுத்தக் கொண்டு வரப்படும் மசோதா.

13. இச்சட்டமன்றம் தனது அலுவலைக் கண்ணியத்துடனும் பொதுக் கடமையுணர்ச்சியுடனும் நிறைவேற்றும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்வதுடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

(19–1–61-ல் சட்ட மன்றத்தைத் துவக்கி வைத்து சென்னை கவர்னர் அவர்கள் நிகழ்த்திய உரை.)

புது வாழ்வுக்கு வழிவகுக்கும் திட்டம்

[லெப். கர்னல் பி. எல். ரெய்னு, குடும்பக் கட்டுப்பாடுத் திட்ட டைரெக்டர்,
சுகாதார சர்விசுகள்-டைரெக்டர் ஜெனரல் காரியாலயம் .]

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு அவசர நடவடிக்கையல்ல; ஒவ்வொரு குடும்பமும் தங்களுடைய விருப்பம்போல் மட்டான அளவில் குழந்தைகளைப் பெறுவதற்கு உரிமையளிக்கிற குடும்ப க்ஷேம நலத்துக்கான ஒரு சமூகக் கொள்கையாகும். குழந்தைகள் பிறப்பதைக் கட்டுப்படுத்துவது என்று சொல்லும்போது, அதை நாம் தவருன எண்ணத்துடன் பார்க்கக் கூடாது; நம்முடைய குழந்தைகளை நல்ல முறையில் வளர்ப்பதற்கு வகை செய்யும் ஒரு சிறந்த ஏற்பாடு என்று அதை நாம் கருத வேண்டும். ஒரு குழந்தைக்கும் மற்ருெரு குழந்தைக்குமிடையே போதிய அவகாசம் கொடுப்பதன் மூலம் தாயின் உடல்நலம் பாதுகாக்கப்படுகிறது; குடும்பத்தில் சந்தோஷமும் குழந்தைகள் தக்க முறையில் வளர்க்கப்படுவதற்கும் இது வகை செய்கிறது.

இந்தியாவில் மக்கள் தொகை அதிகரிப்பு விகிதம் மிகவும் பயங்கரமாக உயர்ந்துவருகிறது; இதைக் கட்டுப்படுத்துவதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகியிருக்கிறது. பொருளாதார அபிவிருத்தி விஷயத்திலும், மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவது ஒரு அத்யாவசிய அம்சமாகும். இந்த விஷயத்தில் எதிர்காலத் தோதுக்கள் ஊக்கமளிக்கக்கூடியவையாக இருக்கின்றன; இப்பிரச்னைக்குத் தீர்வு கண்டுவிட முடியும். ஆனல், பிறப்பு விகிதத்தைக் குறைப்பதற்கு இன்னும் அவகாசம் தேவைப்படும். எனினும், நம்பிக்கையுடனும் உறுதியுடனும் இம்முயற்சியில் முன்னேறிச் செல்ல வேண்டும்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் சம்பந்தமான ஆராய்ச்சி வேலைகளில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் "சேவை, போதனை, பயிற்சி, ஆராய்ச்சி" நடவடிக்கைகளுக்காக நான்கு அம்சத் திட்டமொன்றை உருவாக்குவதற்கானஸ்தாபனங்களை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1956-ம் வருஷம் செப்டம்பர் மாதம் முதல் தேதியன்று மத்தியக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட போர்டு அமைக்கப்பட்டது. படிப்படியாக ராஜ்ய போர்டுகளும் அமைக்கப்பட்டன. அடுத்த நடிவடிக்கை ஒவ்வொரு ராஜ்யத்திலும் ஜில்லாக் கமிட்டிகள் அமைப்பதாகும். யூனியன் சர்க்காரின் உதவியுடன் அக்கமிட்டிகள் இப்போது ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. பெரும்பாலான ராஜ்யங்களில் குடும்பக் கட்டுப்பாடுத் திட்ட அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இப்போது, ஜன விருத்தி ஆராய்ச்சி ஆலோசனைக் கமிட்டி, இந்திய வைத்திய ஆராய்ச்சிக் கௌன்சிலின் குடும்பக் கட்டுப்பாடுத் திட்ட விஞ்ஞான அம்சங்கள் பற்றிய கமிட்டி, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத் தகவல் அளிப்பு நடவடிக்கை—ஆராய்ச்சிக் கமிட்டி என மூன்று நிபுணர் கமிட்டிகள் இருக்கின்றன.

ஆராய்ச்சி நடவடிக்கைகள்

குடும்பக் கட்டுப்பாடுத் திட்ட போதனைத் துறையில், மக்களின் மனப்பான்மை, நம்பிக்கை ஆகியவற்றிற்குப் பொறுப்பாயுள்ள அம்சங்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்கு ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ராமநகரம், டில்லி ஆகியவிடங்களில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் மூலம் 70·5 சதவிகிதம் முதல் 75·8 சதவிகிதம் வரையுள்ள மக்கள் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை ஆதரிப்பதாகத் தெரிய வந்திருக்கிறது. பங்களூரில் நடத்தப்பட்ட ஆராய்ச்சி மூலம், 32·8 சதவிகிதம் ஆண்களும், 27·7 சதவிகிதம் பெண்களும் குடும்பக் கட்டுப்பாடு முறைகள் பற்றிக் கொஞ்சம் அறிந்திருப்பதாகத் தெரிய வந்திருக்கிறது. முதலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையைத் தொடர்ந்து கையாள்வதற்குப் போதிய அளவு உறுதியான ஊக்கம் இல்லை என்று இதர ஆராய்ச்சிகளிலிருந்து தெரியவந்திருக்கிறது.

எனவே, குடும்பக் கட்டுப்பாடு தகவலளிப்பு நடவடிக்கை ஆராய்ச்சித் திட்டம் வகுக்கப்பட்டது. தகவலளிப்பு ஆராய்ச்சி—பயிற்சிக்காக போர்டு தர்ம ஸ்தாபனம் 3,30,000 டாலர் வழங்கியிருக்கிறது.

இத்திட்டம் முக்கியமாய் ஒரு நடவடிக்கை ஆராய்ச்சித் திட்டமேயாகும். நன்கு பிரபலமடைந்துள்ள போதனை முறைகள் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட ஊழியர்கள் குடும்பங்களுடன் தனிப்பட்ட முறையிலும் கோஷ்டியாகவும் தொடர்பு கொண்டு வருகின்றனர். சுவரொட்டி விளம்பரங்களும் புத்தகங்களும், விளம்பர அட்டைகளும் ஏராளமாக வெளியிடப்பட்டுள்ளன. அனேக கண்காட்சிகள் நடத்தப் பட்டுள்ளன. குடும்பக் கட்டுப்பாடு பற்றிய ரேடியோ நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. இது சம்பந்த மான திரைப்படங்களும் "ஸ்லைடு"களும் தயாரிக்கப்பட் டுள்ளன. துண்டுப் படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்ட ஊழியர்கள்

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட போதனை கௌரவத் தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய தலைவர் கள் பிரிவுக்கு ஒருவர் வீதம் சீக்கிரமே நியமிக்கப் படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தலைவர் கள், கூட்டங்களில் பிரசங்கங்கள் நிகழ்த்துகின்றனர், கோஷ்டி விவாதங்களுக்கு ஏற்பாடு செய்ன்றனர், மக்களுக்கு இது பற்றி ஊக்கமளித்து வருகின்றனர். இத்தலைவர்களுக்காகக் குடும்பக் கட்டுப்பாடுத் திட்ட மறுப்பயிற்சி முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்ட ஊழியர்களுக்குப் பயிற்சி யளிப்பதற்காக பம்பாயிலும் ராமநகரத்திலும் இரண்டு பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. புதிதாக 16 பிராந்தியப் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

முதலில், கருத்தரிக்காத காலத்தில் கூடுவதுபற்றிய ஆராய்ச்சியுடன் வேலை ஆரம்பிக்கப்பட்டது. அதை யடுத்து நுரை மாத்திரைகள் கொடுக்கப்பட்டன. இப் போது எல்லா வகையான கருத்தடை முறைகளும் உபயோகித்துக் கொண்டு வரப்பட்டுள்ளன. எந்த முறை யைக் கையாளுவது என்பது அவரவர்களுடைய விருப்பத் தையே பொறுத்ததாகும்.

கருத்தடை சாதனங்களுக்கு கிராக்கி மிகவும் அதிகரித் திருக்கிறது; ஒரு சமயத்தில் இங்குள்ள சப்ளைகள் போதாமல் வெளிநாடுகளிலிருந்து ஏராளமாக இறக்குமதி செய்ய வேண்டியதாகவும் இருந்தது. கருத்தடை சாதனங்கள் இப்போது இந்தியாவில் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திட்ட முன்னேற்றம்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில், அதாவது 1956-ல் சுமார் 147 குடும்பக் கட்டுப்பாடு கிளினிக்குகளுடன் இத்துறையில் வேலை தொடங்கப் பட்டது. ஊழியர்களின் எண்ணிக்கையும் மிகவும் குறை வாகத்தான் இருந்தது. ஆனால், 1960-ம் வருஷம் செப் டெம்பர் மாதத்தில் இந்தக் கிளினிக்குகள் எண்ணிக்கை 1,444 ஆக அதிகரித்துவிட்டது. இவற்றில் 938 கிளினிக்கு கள் கிராமங்களில் உள்ளன. இவை தவிர, வேறுபல சுகாதார நிலையங்களிலும் வைத்தியக் கல்லூரிகளிலும்

(9-ம் பக்கம் பார்க்கவும்)

சிற்றூரைப் பார்!

(புலவர் –உலகநாதன்)

அன்புள்ள என் நண்பா !

நானும் நீயும்
ஆறுமணி நேரந்தான் வேலை செய்வோம் !
என்றாலும் பெறுகின்ற கூலி தன்னை
இரவுபகல் பாராது நிலத்தில் சென்று
தன்னுழைப்பைச் சிந்துகின்ற உழவ னோடு
சரிதானா எனக்கணக்குப் பார்க்கும் போது
என் நெஞ்சம் வேதனையால் துடிக்கும் ! நீயோ
இதுபோதா எனக் குறைகள் சுமத்து கின்றாய் !

உழைக்கின்றான் பகலெல்லாம்! உழைத்து விட்டே
ஒய்வென்று அவன்வந்து படுத்துத் தூங்கத்
தழைவேய்ந்த குடிலேதான் எனினும் நீட்டச்
சரியான இடந்தன்னைப் பெற்றுள் ளானா ?
மழைவானம் வெகுண்டாலும் ஒதுங்கி ஒட்டி
மண்குடிசைக் குள்ளேயே வாழ்க்கை கொள்ளும்
உழவனைப் பார் ! அவன்வாழ்வை உயர்த்த வேண்டி
உன்நெஞ்சம் சற்றேனும் நினைத்த துண்டா ?

கடல்சூழ்ந்த பெருஉலகை உழவன் கையே
காப்பாற்று கின்றதென 'வாயின் பந்தல்'
மடைதிறந்த வெள்ளமென மேடை மீது
மணிக்கணக்காய்ப் பேசுவதால் கிடைப்ப தென்ன?
அடித்துவிட்ட குழந்தையினை பின்னால் பைய
அணைத்துடலில் ஆறுதலைச் சொன்னால் தானே
விடுபட்ட உறவுவந்து சேரும் ? அன்றேல்
வேறாகிப் போகாதோ உறவின் பாசம் ?

சிறுகுழவி ஊதுகின்ற பலூன் போன்று
தினம்தினமும் 'நகரங்கள்' பெருத்துக் கொண்டும்
அறுபட்ட ஆட்டைப்போல் 'கிராமம்' எல்லாம்
அழிவின்மேல் ஊர்வதுவும் காணும் போது
பெரியதொரு ஆபத்தை நோக்கி நாமோ
பிழையென்று தெரிந்திருந்தும் செல்லு கின்றோம்!
சரிதானா இவ்வாழ்க்கை ? சரிதான் என்றால்
சமத்துவத்தைப் பற்றியென்ன பேச்சு வேண்டும் ?

சிற்றூரில் விளைகின்ற விளைவை எல்லாம்
சிற்றூரின் தேவைக்குப் போக வேதான்
மற்றுள்ள நகருக்குத் தருதல் என்ற
மாப்பெரிய திட்டத்தை எதிர்த்தல் தானா
கற்றவன்நீ செய்கின்ற தொண்டு ? நல்ல
கண்களிலே சுண்ணும்பைத் தடவ வேண்டாம் !
மற்றுனக்கு நானென்ன சொல்வேன் ? மீளும்
மடலெழுது ! இங்ஙனம் உன்

அன்புச்
"சேரன்."

கவர்னர் செய்தி

இந்த ஆண்டு டிசம்பர் 18-ல் குடும்பக் கட்டுப்பாடு நாள் கொண்டாடப் படுவதறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நாட்டில் தற்போதுள்ள நிலைமையில் குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை பொதுமக்களுக்கு உணர்த்துவதற்கு இந்த விழா பெரிதும் பயன்படும்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் இரண்டு விதமான அனுகூலங்கள் உண்டு. தேசியக் கண்ணோட்டத்தில், இத் திட்டம் மிகவும் அவசியம். ஏனெனில், மிதமீறிய ஜனப் பெருக்கமானது எல்லாவித முன்னேற்றங்களையும் தடைப்படுத்தி அபிவிருத்தித் திட்டங்களில் நோக்கத்தையே குலைத்து விடும். மேலும் மேலும் வசதிகள் ஏற்படுத்தி, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவற்கான மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கங்களும் தொடர்ச்சியான ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் பல அபிவிருத்தி வேலைகளை நிறைவேற்றி வருகின்றன. மக்கள் தொகை மிக விரைவாக அதிகரித்து வருவதைக் குறைக்க நடவடிக்கை எடுக்கா விட்டால், இந்த அபிவிருத்தி திட்ட பலன்களை முழுமையாக அடைய இயலாமல் போகும். எனவே எல்லாத் துறைகளிலும் முன்னேற்ற வேலைகள் திருப்திகரமான முறையில் நடைபெறும்படி செய்வதும், மிதமீறிய ஜனத் தொகை வளர்ச்சியைத் தடுப்பதும் அவசியமாகும். எனவே குடும்பக் கட்டுப்பாடு திட்டம், நமது பொது அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு பகுதி ஆகின்றன.

—விஷ்ணுராம் மேதி.

卐

முதலமைச்சர் செய்தி

சென்ற வருஷத்தைப் போலவே, இந்த ஆண்டிலும் டிசம்பர் 18-ம் நாளன்று நாடெங்கும் குடும்பக் கட்டுப்பாடு தினம் கொண்டாடப்படுவதறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். தேசிய அபிவிருத்தித் திட்டங்களையொட்டி, குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை அதிகம் வலியுறுத்திக்கூற வேண்டிய அவசியமில்லை. குடும்பக் கட்டுப்பாடு இயக்கம் வேரூன்றிவிட்டது. சென்னை மாநிலத்தில் மக்களில் பலர் குடும்பக் கட்டுப்பாடு முறைகளை மேற்கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். இத்திட்டத்தை குறிப்பாக கிராமங்களில் பிரபலப்படுத்த அரசாங்கம் மேற்கொண்டுள்ள முயற்சிகள் நல்ல பயன் அளிக்கும் என்று நம்புகிறேன்.

குடும்பக்கட்டுப்பாடு நாள் விழா வெற்றியடைய என் வாழ்த்துக்கள்.

—கு. காமராஜ்.

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமான சேவைகள் செய்யப்பட்டு வருகின்றன. மொத்தம் 2,862 நிலையங்களில் குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமான ஆலோசனைகள் கூறப்பட்டு வருகின்றன. கருத்தடை சாதனங்கள் இலவசமாகவும் சகாய விலைகளிலும் சப்ளை செய்யப்படுகின்றன. மொத்தம் சுமார் 3,200-க்கும் அதிகமான சிப்பந்திகளுக்கு இத் துறையில் பயிற்சியளிக்கப்பட்டிருக்கிறது.

கருத்தடை அறுவை முறை

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தில் கருத்தடை அறுவை முறையையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று மத்திய குடும்பக் கட்டுப்பாடுத் திட்ட போர்டு சிபாரிசு செய்திருக்கிறது. இந்த முறையைப் பிரபலப்படுத்துவதற்காக ஆஸ்பத்திரிகளில் அதிகப்படியாகச் சிப்பந்திகள் நியமிக்கப்பட்டுள்ளனர். கருத்தடை அறுவை செய்து கொள்ள வருகிற சர்க்கார் சிப்பந்திகளுக்கு விசேஷ ரஜா அளிக்கப்படுகிறது. கருத்தடை அறுவை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 1956-ல் 7,823 (2,333 ஆண்கள்) ஆக இருந்தது. 1959-ல் 35,722 (13,925 ஆண்கள்) ஆக அதிகரித்தது. 1956 முதல் 1960-ம் ஆகஸ்ட் மாதம் வரையில் மொத்தம் சுமார் 1,05,028 (39,654 ஆண்கள்) பேர் அறுவை முறைப்படி கருத்தடை செய்து கொண்டார்கள்.

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் ஜன விருத்தி ஆராய்ச்சி நடத்துவதற்காக முறையான உபகாரச் சம்பளத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. ஜன விருத்திப் பயிற்சி—ஆராய்ச்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நியூயார்க்கிலுள்ள மக்கள் பெருக்கக் கௌன்சில் இந்நிலையங்களுக்குச் சிறந்த உதவி அளித்து வருகிறது.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டமானது பிறப்பு விகிதத்தைக் குறைப்பதில் எந்த அளவுக்குப் பலனளித்திருக்கிறது என்பதைக் கண்டு பிடிப்பதற்கு இன்னும் பல வருஷங்கள் ஆகும். ஆனால், டில்லியில் நடத்தப்பட்ட ஒரு ஆராய்ச்சியின் மூலம், கருத்தடை சாதனங்களை உபயோகிக்காத காலத்தில் கருத்தரிப்பு விகிதம் 62 சத விகிதம் முதல் 66 சதவிகிதம் வரையிலும், கிளினிக் உதவி இல்லாமல் கருத்தடை சாதனங்களை உபயோகித்த காலத்தில் கருத்தரிப்பு விகிதம் 35·2 சதவிகிதமாகவும், கிளினிக்கில் ஆலோசனை பெற்று கருத்தடை சாதனங்களை உபயோகித்தகாலத்தில் கருத்தரிப்பு விகிதம் 10·0 சத விகிதம் முதல் 12·6 சதவிகிதம் வரையிலும் இருப்பதாகத் தெரிய வந்திருக்கிறது. கிளினிக்குகளில் ஆலோசனை பெற்று, அதன்படி கருத்தடை சாதனங்களை உபயோகிப்பதன் மூலம் கருத்தரிப்பு விகிதத்தை 80 சத விகிதம் வரையில் குறைக்க முடியும் என்று இதன் மூலம் தெரியவருகிறது.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் குடும்பக் கட்டுப்பாடுத் திட்ட நடவடிக்கைகள் இன்னும் அதிக விரிவாகவும் தீவிரமாகவும் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. மக்களுக்கு சுபிட்ச வாழ்வளிக்க வகை செய்யும் இத்திட்டத்தில் மக்கள் பெருமளவில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

மண்ணும் பொன்னும்

[திரு. கே. எஸ். சுப்பிரமணியம்]

["கனியும் கிழங்கும் தானியங்களும் கணக்கின்றி தரு நாடு" என்று இந்த நாட்டின் மண் வளத்தைப் போற்றிப் புகழ்கிறார் பாரதி. விலை மதிக்க முடியாத நாட்டுச் சொத்தாகிய அந்த மண் வளத்தை எப்படிப் பாதுகாக்க வேண்டும் என்பதைப்பற்றி ஆராய்கிறது இக்கட்டுரை........ —ஆசிரியர்.]

"மண்ணும், பொன்னும் உழவனுக்கு ஒன்றுதான்!" என்றதொரு முது மொழி, நம் தமிழ் நாட்டிலே, பழக்கத்திலிருந்து வருகிறது. சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால், "பொன்னைக் காட்டிலும், மண்தான் சிறந்தது! அது உழவனுக்கு மட்டுமல்ல, உலகிலே வாழும் எண்ணிலா ஜீவன்களுக்கும்!" என்பது புலனாகும். இயற்கையழகை மிகைப்படுத்திக் காண்பிப்பதற்கும், செல்வத்தின் அளவை உயர்த்திக் காண்பிப்பதற்கும் பொன் உதவும். ஆனால், மண்ணோ, மனிதன் உயிர் வாழ உதவுகிறது. மண்ணின் மீது வளரும் செடி கொடிகள் மனமுவந்து அளிக்கும், காய், கனி, கீரை, தானியம் இவைகளைக் கொண்டு மனிதன் உயிர் வாழ்கிறான். காற்று, நீர், உணவு, இவை மூன்றும்தான், மனிதன் உயிர் வாழ் சக்திக்கு அடிகோலுவன. இவையின்றி மனிதன் உயிர் வாழமுடியாது. எனவே பொன்னையும், மண்ணையும் ஒன்றுபடுத்துதல், மிகத்தவறு! பொன்னோ, மண்ணினின்றும் விளையும் பொருள்தானே! நல்லதொரு மகவை ஈன்றெடுக்கும் தாய் போன்று, அந்தப் பொன்னை ஈன்றெடுப்பதும் நிலம்தானே!

உழவனுக்குத் தெரிந்த உண்மை

நிலத்தை உழுது, பயிரிட்டுப் பலனடையும் உழவனுக்குத்தான் மண்ணின் மகிமை தெரியும். நிலத்தில் மாற்றி மாற்றி சாகுபடி செய்வதால், மண்ணின் சாரம் குறைந்து, விளைச்சல் குறைவதால், அதைத் தடுத்து அதிக பலன் பெறுவதற்காக எரு போடுவது, என்பதை சாதாரணமாக, பெருவாரியான உழவர்கள் அறிந்திருக்கிறார்கள். மண்ணரிப்பினாலும் நிலத்தின் சாரம் குறைந்து, அங்கு விளையும் பயிர்கள் சோடையாகவும், பலனற்றதாகவும் இருப்பதைப் பற்றி, சாதாரணமாக சென்னை ராஜ்யத்தில், ஒரு சில முற்போக்கான விவசாயிகளே, அறிந்துள்ளனர். மண்ணரிப்பை தடுப்பதற்காக, தக்க ஏற்பாடுகளும் செய்து கொள்கிறார்கள். மற்ற விவசாயிகள் மண் அரிப்பினால் ஏற்படும் தீமையை அறிந்தும், அதைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளை, அரசாங்கமே செய்ய முன் வந்தால்கூட, ஏனோ அதை ஏற்க தயங்குகிறார்கள்.

மண் அரிப்பு ஏற்படுவதே இயற்கையினால்தான். உழவனும் தனது கவனக்குறைவால் மண்ணரிப்பு ஏற்படுவதற்கு சாதகமாயிருக்கிறான். எல்லா இடங்களிலும், நிலம் சரி சமமாகயிருப்பதில்லை. ஒரு இடத்தில் சரிவாகவும், மற்ற இடத்தில் சமமாகவும் இருக்கிறது. வளம் பொருந்திய மண், நிலத்தின் மேற்புறத்தில் தானிருக்கிறது. நிலத்தின் அடிப்புறம் வளமற்ற மண்ணால் நிரம்பப்பட்டிருக்கிறது. வேகமாக வீசும் காற்றால், மேல் மண் அடித்துக் செல்லப்படுகிறது. அதேபோல் மழை பெய்து அதன் மூலம் ஏற்பட்ட சிற்றோடைகளாலும் மேல் மண் அரித்துச் செல்லப்படுகிறது. அடர்ந்து வளர்ந்த மரங்கள் நிரம்பிய வனங்களையழித்தலும் நில அரிப்பிற்கு சாதகமாகிறது. இவ்வாறு காற்றாலும், மழையாலும், வளமிக்க மேல் மண் அரித்துச் செல்லப்படுவதைத்தான் மண்ணரிப்பு என்று கூறுகிறோம். எஞ்சியிருக்கும் வளமற்ற மண்ணில், பயிரிட்ட உழவன், பலமிழந்து வளரும் பயிரைக் கண்டு ஏமாற்றமடைகிறான். வெறும் எரு போடுவதால் மட்டும் பலனடைந்துவிட முடியாது, மண்ணையும் பாதுகாத்துத்தான் ஆக வேண்டும் என்பதை அவன் அறிவதில்லை.

எல்லா வளங்களுக்கும் அடிப்படை

மண்ணின் வளம் குறைவதால், பயிரின் தரமும் குறைகிறது. பயிரின் தரம் குறைவதால் அதைக்கொண்டு வாழும் உயிரினங்களின் வளமும் குன்றுகிறது. இக்கொடுமையைத் தவிர்ப்பதற்காகத்தான் "மண் வளப் பாதுகாப்புத் திட்டம்" என்றதொரு புதிய விழிப்புணர்ச்சி நாட்டிலே தோன்றியிருக்கிறது. "வளமிக்க நாடு" என்றால், அந்த நாடு, இலக்கிய வளம், இயற்கை வளம், அரசியல் வளம், கலை வளம், பண வளம், மற்றும் இவைபோன்ற வளங்கள் நிரம்பி இருக்கவேண்டும். ஆனால், இவ்வளங்களுக்கெல்லாம் அடிப்படையான வளம் மண்வளம்தானே!

நிலங்களின் தன்மைகளுக்கு ஏற்றவாறும் ஆங்காங்கே பெய்யும் மழையின் அளவிற்குத் தகுந்தவாறும், மண்ணரிப்புத் தடுப்புத்திட்டம் தனது முறைகளைக் கையாண்டு

வருகிறது. மழை நிறையப் பெய்யுமிடத்தில் கையாளப்படும் முறை வேறு. மழை குறைவான இடத்தில் கையாளப்படும் முறை வேறு. அது போன்றே மலைப்பிரதேசத்தில் கையாளப்படும் முறைக்கும், சம வெளிப் பிரதேசத்தில் கையாளப்படும் முறைக்கும் சிறிது வேறுபாடு இருக்கிறது.

சமவெளிப் பிரதேசங்களில் வரப்புப் போட்டு, அதில் நீர் தேங்கி நிலம் உறிஞ்சும்படி செய்தலும், மலைப்பிரதேசங்களில், வரம்புக்கு மீறிய சரிவுகள் அதிகமாயிருப்பதால், அங்கு தொடர்ந்து மட்டம் வெட்டி, அதிலே மழைநீர் தங்கி, நிலம் உறிஞ்சும்படி செய்து பின் எஞ்சிய நீரை, செங்குத்தாக வெட்டப்பட்டிருக்கும் கால்வாய்களின் மூலமாக, பள்ளங்களின் மட்டத்திற்கு, செல்லும்படி செய்தலும் ஆகும். சமவெளிப் பகுதிகளில், மண்ணரிப்பதைத் தடுப்பதற்காக போடப்பட்டிருக்கும் வரப்புகளின் மீது, புல் விளையும்படி செய்வதன்மூலம், வரப்பு உடையாமல் பாதுகாக்கப்படுகிறது. கொள் போன்று அடர்த்தியாக வளரும் செடிகளைப் பயிரிடுவதின் மூலம், காற்றுலும், மழையாலும் ஏற்படும் மண்ணரிப்பை ஓரளவிற்குக் குறைக்கலாம்!

இன்று, மண்வளப் பாதுகாப்புத் திட்டம் . சென்னை ராஜ்யத்திலே, கோவை, சேலம், தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கல்பட்டு, மதுரை, நீலகிரி, முதலிய ஜில்லாக்களில் பெரிதும் பணியாற்றி வருகிறது. இன்றைய நடைமுறையிலே, மிகச் சொற்பமான விவசாயிகளே, மண்ணரிப்புத் தடுப்புத் திட்டமுறைகளை அனுசரிப்பதால் உண்டாகும் நன்மையைப் பற்றியும், அதை அனுசரிக்காததால் ஏற்படும் தீமையைப்பற்றியும் தெரிந்திருக்கிறார்கள். மற்ற சில விவசாயிகளோ, இத் திட்டத்தை அவர்கள் நிலத்தில் அனுசரிக்க, மண்வளப் பாதுகாப்பு உதவியாளர்கள் தரும் சம்மதப் பத்திரத்தில் கையெழுத்துப்போட மறுக்கவும், தயங்கவும் செய்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். மண் வளப் பாதுகாப்புத் திட்டத்தைப் பற்றி தெரிந்திருக்கும் விவசாயப் பெருமக்கள், மற்றவர்களுக்கு அதன் நன்மைகளை எடுத்து விளக்க வேண்டும்.

இத்துறையில் நல்லதொரு பிரச்சாரம் தேவை

"அமெரிக்காவில் மண்வளப் பாதுகாப்புத் திட்டம்" என்ற படக்காட்சி, சமீப காலத்தில், கிராமந்தோறும் காண்பிக்கப்பட்டது. அந்தமாதிரி படங்களை, ஒவ்வொரு விவசாயியும், பார்த்து பலன் பெற வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடும்போது எண்ணற்ற ஏழைகளுக்கு, இந்தத் திட்டம் கஞ்சி வார்க்கிறது என்பதையும் விவசாயப் பெருமக்கள் மறக்கலாகாது! எவ்வளவு பணத்தை அரசாங்கம் மண்ணரிப்புத் தடுப்புத் திட்டத்திற்காக செலவழித்தாலும், உழவர் பெருமக்கள் ஆதரவைக் கொண்டுதான் செலவழிக்கும் பணத்தின் பலனைப் பெறமுடியும்!

கதர் வாரவிழா, மரியாதை வார விழா, தீத்தடுப்பு வார விழா, மரம் நடு விழா, முதலியவற்றைக் கொண்டாடுதல் போல, மண் அரிப்புத் தடுப்புத் திட்ட வார விழாவும், சென்னை ராஜ்யமெங்கும், வருடந்தோறும் கொண்டாட ஏற்பாடு செய்ய வேண்டும். உழவர் திலகங்களின் முயற்சியும், அவர்களின் ஒத்துழைப்பும்தான் தேவை!

எனவே, உயிர்வாழ உதவும் மண்ணைக் காட்டிலும், அழகுப் பொருளான, மணமில்லாத பொன் ஒரு காலத்தும் சிறந்தது ஆகாது! மண்ணைப் பாதுகாத்து, நம் வளத்தைச் சிறப்புறச் செய்வது, நாட்டின் விலைமதிக்க முடியாத செல்வங்களான உழவர்களின் தலையாய கடமையாகும்!

சென்னை மாநில போர்ப் படையினர், மாலுமிகள், விமானப்படையினர் போர்டின் கூட்டம் மின்சாரத்துறை அமைச்சர் ஸ்ரீ வி. ராமையா அவர்கள் தலைமையில் 12-12-60 அன்று நடைபெற்றது.

சாதனைக் குறிப்புகள்—வாழ்க்கைச் சித்திரம்

"முயற்சி திருவினை ஆக்கும்"...

R.P.

[நெஞ்சில் உரமும் நேர்மைத் திறனும் கொண்டு மகத்தான சாதனை புரிந்த தனி மனிதன் ஒருவனின் சுவையான வாழ்க்கைச் சித்திரம் இது. நமது மாநிலத்திலும் இந்தக் கட்டுரையின் கதாநாயகன் போல் சாதனை புரிந்தவர்கள் இல்லாமலிருக்க முடியாது. அப்படிப்பட்டவர்களின் சாதனைக் குறிப்புகளை அனுப்பி வையுங்கள். மகிழ்ச்சியுடன் "கிராம நலத்தில்" பிரசுரிக்கிறோம். —ஆசிரியர்.]

வட இந்தியாவில் ஜோத்பூரை உதயப்பூருடன் இணைக்கும் பிரதான ரஸ்தாவின் நடுவே நயாகாவனிலிருந்து கிளைப் பாதையொன்று பிரிந்து செல்கிறது. இந்தப் பாதை அமைக்கப்பட்ட விதமே ஒரு பெரிய கதையாகும். கதர் தலைப்பாகையும், கதர் சட்டையும் அணிந்த 44 வயதான நபர் ஒருவர், கையில் மண்வெட்டி ஏந்தி இரவு பகல் என்று பாராமல் சதா காலமும் அந்தப் பாதையைச் செப்பனிடும் வேலையில் ஈடுபட்டிருப்பதை இன்றைக்கும், காணலாம். ஜோத்பூர் பகுதியில் பாலி ஜில்லாவில் உள்ள தேசூரி பஞ்சாயத்துப் பிரதேசத்தில் மகர்தலாபிலிருந்து நாயாகாவன் வரை ஏழு கிராமங்களை இணைக்கும் $3\frac{1}{2}$ மைல் நீளமுள்ள இந்த ரஸ்தா, இவருடைய வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே ஆகிவிட்டது. **ஜவான் மல்** என்ற பெயரைக் கொண்ட இவர் பிறருடைய உதவியின்றி, தன்னுடைய சொந்த முயற்சியைக்கொண்டே இந்தப் பாதையைக் கட்டி முடித்திருக்கிறார்.

கோலார் கிராமத்தில் அந்தணர் குடும்பமொன்றில் பிறந்த ஜவான்மல், அவருடைய தகப்பனார் பாம்பினால் கடிபட்டு இறந்து போகவே, விவசாயத் தொழிலைக் கைவிடும்படியாக நேரிட்டது. பிறகு அவர் பிழைப்பை நாடி ஹைதராபாத் நகரை அடைந்து அங்கு ஒரு வர்த்தகரின் வீட்டில் வேலைக்காரராக அமர்ந்தார்; அங்கு முப்பது ஆண்டு காலம் ஊழியம் செய்து கொஞ்சம் பணம் சேர்த்துக்கொண்டார். பிறகு ஒரு நாள் அவருடைய மனைவி இறந்துபோனார். அவர் விட்டுச் சென்ற ஒரே ஒரு பெண் குழந்தையும் கொஞ்ச காலம் கழித்து இறந்துவிட்டது. அதன் காரணமாக ஜவான் மல்லுக்கு வாழ்க்கையிலேயே வெறுப்புத் தட்டிவிட்டது. தான் சேமித்து வைத்திருந்த பணத்தையும், மனைவி விட்டுச் சென்ற நகைகளையும் எடுத்துக்கொண்டு அவர் தன்னந்தனியாக தம்முடைய கிராமத்துக்குத் திரும்பினார்.

அவர் நயாகாவன் வந்து சேர்ந்த சமயத்தில் பெரு மழை பெய்துகொண்டிருந்தது. கிராமம் முழுவதும் வெள்ளக்காடாகக் காட்சியளித்தது. மழையிலிருந்து ஒதுங்குவதற்குக்கூட இடமெதுவுமில்லை; முழங்காலளவு தேங்கியிருந்த ஜலத்தைக் கடந்து கிராமத்துக்குச் செல்வதே பெரும்பாடாகி விட்டது.

வாழ்க்கையில் வெறுப்புற்றிருந்த ஜவான் மல்லுக்கு இந்தத் தோற்றத்தைக் கண்டவுடன், தாம் பிறந்த கிராமத்தையும், அருகில் உள்ள வேறு சில கிராமங்களையும் இணைப்பதற்கான பாதையொன்றை அமைத்துக் கொடுத்து சமுதாயத்துக்குச் சேவை புரியவேண்டும் என்ற அவா ஏற்பட்டது. அந்தக் கருத்து அவர் மனதில் ஆழமாக வேரூன்றிவிட்டது. அதற்கு ஆகக்கூடிய பொருள் செலவையோ, கடின உழைப்பையோ சிறிதும் பாராமல் அதை எப்படியேனும் கட்டிமுடிக்கவேண்டுமென்றும் அவர் உறுதி பூண்டார்.

கிராமத்துக்கு வந்து சேர்ந்த ஜவான் மல்லைப் பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்ற அவருடைய சகோதரர்கள் இந்த யோசனைக்கு செவி சாய்க்கவேயில்லை. "இப்பகுதியில் இதுவரை எந்தவிதமான ரஸ்தாவும் இருந்ததில்லை; ஒரு தனி நபரோ, ஒரு சில நபர்களோ பாதை அமைக்கும் முயற்சியில் ஈடுபடுவது எத்தகைய பலனும் தராது" என்பதாக அவர்கள் கூறினார்கள். ஜவான் மல்லுடைய சந்தோஷத்தைக் காட்டிலும் அவருடைய சேமிப்புத் தொகையிலேயே குறியாக இருந்த அவர்கள், ஜவான் மல்லை மீண்டும் வாழ்க்கையில் ஈடுபடுத்த விரும்பினர். ஜவான் மல் அவர்களுடைய வார்த்தைகளைச் சிறிதும் பொருட்படுத்தாமல், அந்த ரஸ்தாவைக் கட்டாயம் அமைத்தேயாக வேண்டும், அதற்கு உதவுவதற்கு மற்றவர்கள் உதவி இல்லாவிட்டால் தாமே தன்னந்தனியாக நின்று அதைக் கட்டிமுடித்துவிடுவது என்றும் அவர் உறுதிகொண்டார்.

இந்த முயற்சியில் அந்தப் பகுதியைச் சேர்ந்த வட்டார அபிவிருத்தி அதிகாரியும், அவருடைய சிப்பந்திகளும் மட்டிலுமே உதவியளிக்க முன் வந்தனர். அவ்வதிகாரி, அவருடைய யோசனைக்கு ஆதரவு அளித்ததுடன், ஜவான் மல் அப்பணியில் ஈடுபட தொண்டர்களைத் திரட்டிக்

கொடுக்கும்பட்சத்தில் சிரமதானத்தின் மூலம் அந்த ரஸ்தாவை அமைப்பதற்கு அவருக்குச் சகல வகைகளிலும் உதவிபுரிவதாக வாக்குறுதியளித்தார்.

எதையும் தாங்கும் இதயம்—எழில்மிக்க சாதனை....

கிராமவாசிகள் ஜவான் மல்லுடைய யோசனையைக் கேட்டு எள்ளி நகையாடினர். அவருடைய யோசனைக்கு எதிர்ப்பு அதிகமாக அதிகமாக, அந்த ரஸ்தாவை அமைப்பதில் அவருடைய உறுதியும் பலமடைந்துவந்தது.

அந்த ரஸ்தாவை அமைப்பதற்கான செலவு மதிப்பீடுகளைத் தயாரித்துக் கொடுக்கும்படி அவர் வட்டார அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார். அவர்கள் அதற்கான மதிப்பீடுகளைத் தயாரித்துக்கொடுத்து, அவ்வேலையைச் செய்து முடிக்க10,000 ரூபாய் தேவைப்படுமென்று தெரிவித்தனர்.

இந்த யோசனைக்கு எல்லாப் பக்கங்களிலிருந்தும் விரோதமும், எதிர்ப்பும் அதிகரித்து வந்ததையும் சிறிதும் பொருட்படுத்தாமல், ஜவான்மல் தன்னந்தனியே அப்பணியில் ஈடுபட முடிவு செய்து, அவருடைய மனைவியின் நகை நட்டுகளையெல்லாம் 2,000 ரூபாய்க்கு விற்பனை செய்தார். அத்துடன் அவர் சேமித்துவைத்திருந்த 7,000 ரூபாயையும் சேர்த்துக் கொண்டார். பாக்கி 1,000 ரூபாய்க்கு அவருடைய நிலத்தை அடமானம் வைத்துக் கடன் எழுப்பினர். இவ்வாறாக அவர் அக்காரியத்துக்கு மொத்தம் 10,000 ரூபாயைத் திரட்டிவிட்டார். அதைத் தொடர்ந்து "ரஸ்தா அமைக்கும் வேலை" ஆரம்பமாகியது. அந்த வேலை அவர் நினைத்தது போல அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. ரஸ்தாவின் அமைப்பு விவரமே ஒரு பெரும் பிரச்னையாகவிருந்தது.

வட்டார அதிகாரிகள் யோசனைகூறியபடி ரஸ்தாவை அமைப்பதாக இருந்தால் சாகுபடி செய்யப்பட்டிருந்த நிலங்களுக்குக் குறுக்கே அதைப்போட வேண்டியிருந்தது. ஜவான்மல் அந்த வயல்களில் இறங்கி வெட்டத் தொடங்கியபோது, அந்த வயல்களின் சொந்தக்காரர்கள் வந்து அவரை ஈவிரக்கமின்றி அடித்து விட்டனர். ஜவான்மல், போலீஸின் உதவியை நாடினர். அவர் பிறருடைய வயல்களில் அத்துமீறிப் புகுந்தது சட்ட விரோதமாகையால் தாங்கள் அவருடைய முயற்சியில் எவ்வகையிலும் உதவ முடியாதென்று அவர்கள் தெரிவித்துவிட்டனர்.

அது தவிர வேறொரு சங்கடமும் ஏற்பட்டுவிட்டது. அவருடைய உறவினரொருவரின் வயல் வழியாகச் சென்ற வாய்க்கால் ஒன்று, ரஸ்தா அமைக்கும்போது பழுதடைந்துவிட்டது. அதைக் கண்டு, கிராமவாசிகளின் தூண்டுதல்களின் பேரில் அவ்வுறவினர் ஜவான்மல்லை செம்மையாக உதைத்துவிட்டார். இவ்வளவு பேரின் எதிர்ப்புக்கு முன்னால் அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர் நிலைவிழந்து கீழே விழுந்துவிட்டார். அது மட்டுமல்ல; அக்கிராமவாசிகள் அவரை சமூகத்திலிருந்தே விலக்கி வைத்தனர். இவ்வளவும் போதாதென்று, அச்சமயம்

(14-ம் பக்கம் பார்க்கவும்)

சிகிச்சை !

புலவர் மு. உலகநாதன்

உடலிலொரு சதைப் பகுதி விக்கம் கண்டால்
உடனேடி நாமதனை மருத்துவர்தம்
இடம் காட்டி அதையறுத்துச் சிகிச்சை செய்தே
இன்பத்தை வாழ்வில்தநாம் அடைதலைப்போல்

அடுத்தந்தந்தக் கொள்கையினை வாழ்விலும் நாம்
அனுசரிக்க வேண்டாமா ? சமூகப் போக்கைக்
கடுகளவு கண்டாலும் ஏற்றத்தாழ்வோ
கடும் நஞ்சாய் நாடெங்கும் பரவக் கண்டோம் !

என்னதான் உழைத்தாலும் முடிவில் ஏழை
என்னபயன் காண்கிறுன். என்று பார்த்தால்
அன்னவன்தன் வயிறெட்டி உடலும்தேய
அன்றுடக் கஞ்சிக்கும் பானை தன்னைத்

தன் மனைவி தடவிடவும், குழந்தை தாயைச்
சேர்ந்துகட்டிப்பசியென்றே அழவும் தானே
என்றுமவன் காண்கின்றுன் இதுதான் வாழ்க்கை
என்றவர்க்கு நாம்சொல்லும் சொல்லோ நேர்மை ?

எவரெவரோ உழைப்பவனின் உழைப்பை எல்லாம்
இதயத்தில் இரக்கமெனல் சிறிதும் இன்றித்
தவருன முறையினிலே உறிஞ்சு கின்றுர் !
தாகமவன் தாகத்தை தணிப்பதற்கே

சுவரிடிந்து வான்நோக்கும் அவன்தா குச்சோ
சொல்வதற்கு வாயின்றி கண்ணிர் சிந்தும் !
குவலயமோ இதுதலையின் விதியே என்று
கூறுவதால் அவன் பஞ்சம் தீர்ந்தா போகும் ?

இப்படித்தான் சிற்றூரின் வளப்பம் நன்னை
எங்கெங்கோ இருக்கின்ற நகரம் எல்லாம்
அப்படியே விழுங்குகின்ற பூதம் ஆகி
அதையேழை ஏழையிலுமோர் ஏழை ஆக்கும் !

கொப்போடும் பூவோடும் குறிஞ்சி பூத்தால்
கூர்ரம்பம் கொண்டறுத்தோ பூவெடுப்பார் !
இப்படியா அக்கிரமம் தன்னை நாமும்
இந்நாட்டில் தலைதூக்க விடுதல் வேண்டும் !

இன்றில்லை என்றுலும் இதற்கோர் மாற்றம்
என்றேனும் செயத்தானே வேண்டும் ? நாட்டில்
தன்னுயர்வை நோக்காதே இளைஞர் எல்லாம்
தகுந்தபடி கிராமத்தின் வளத்தில் நாட்டம்

சின்னதொரு நேரத்தில் செய்தால் கூடத்
தெருவெல்லாம் பொன்னுகக் கூடும் ! இந்த
நன்மைமிகு காரியத்தைச் செய்வோம் ஆனல்
நாட்டுக்குச் செய்ததொரு தொண்டைச் செய்தோம் !

(சென்னை 'காந்தி மன்றத்தில்' கோவை இராமகிருஷ்ண வித்யாலய மாணவர்களிடத்து திரு கோ. வேங்கடாசலபதி அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் கருத்து பாட்டாக வடித்துக் கொடுக்கப்பட்டுள்ளது)

ஐக்கிய நாடுகள் கூட்டத்திற்கு இந்தியாவின் பிரதி நிதிகளில் ஒருவராகச் சென்று திரும்பிய தொழில், வர்த்தகத்துறை அமைச்சர் ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன் அவர்களுக்கு விமான நிலையத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

பெய்த கனத்த மழையின் விளைவாக அவர் அமைத்திருந்த பாதையில் ஒரு பகுதி அழிக்கப்பட்டுவிட்டது. ரஸ்தா அமைப்பதில் உதவுவதற்காக, பக்கத்து கிராமங்களிலிருந்து வந்திருந்த 300 தொழிலாளர்களும், அவருடைய பணம் எல்லாம் கரைந்தவுடன் அவரைக் கைவிட்டு ஓடி விட்டனர்.

தளராத உறுதியும் தரங்குறையாப் பணியும்....

அப்பொழுதும் கூட ஜவான் மல் தம்முடைய உறுதியை இழக்கவில்லை ; அவர் அப்பணியில் தொடர்ந்து ஈடுபடலானார். பழுதடைந்த பகுதிகளைத் தாமே சீர்படுத்தினார்; ரஸ்தா அமைக்கும் வேலையில் படிப்படியாக முன்னேற்றமும் அடைந்து வந்தார்.

இந்தச் சமயத்தில் அப்பிரதேசத்துக்குப் புதிதாகப் பஞ்சாயத்து ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. முன்னவர்களைக் காட்டிலும் விரிவான மனப்பான்மை பெற்றிருந்த அப்பஞ்சாயத்தின் அங்கத்தினர்களும், பஞ்சாயத்து சமிதியும் ஜவான்மல்லுடைய சமூக சேவைக்கும், அப்பணியில் ஏற்பட்ட பெரும் இன்னல்களைக் கருதாமல் அவர் அதில் ஈடுபட்டு வந்ததற்கும் அவரைப் பாராட்டியதோடு, அப்பணியில் அவருக்கு உதவ முன்வந்து, முறைப்படி சட்டரீதியாக சமுதாயத்தின் பொது நலனுக்கென்று அவருக்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்தும் கொடுத்தனர். அதன் பிறகு அவ்வேலை நன்கு முன்னேறியது. ரஸ்தா பூர்த்தியானவுடன் பஞ்சாயத்து சமிதி அவரைக் கௌரவித்ததோடு, அந்த ரஸ்தாவுக்கு ஜவான்மல் ரஸ்தா என்றும் பெயரிட்டனர்.

சுற்றுப்புறக் கிராமங்களைச் சேர்ந்தவர்களும் அவருடைய சேவையில் மனங்கவரப் பெற்று, அவர்களுடைய மனப்போக்கை மாற்றிக்கொண்டனர். அப்பணியை அவர் வெறும் பொழுது போக்காகக் கருதாமல், வாழ்க்கையின் பிரதான லட்சியமாகக் கொண்டு அவர் தம்மை அர்ப்பணித்துக்கொண்டதைக் கண்டு அவர்கள் மனம் நெகிழ்ந்து, தாங்கள் அவருக்கு விளைவித்த இன்னல்களுக்குப் பரிகாரம் காண விரும்பினர். அவருடைய மூன்று சகோதரர்களும் கூட மனம் மாறி, ஒன்று சேர்ந்து 3000 ரூபாயைத் திரட்டி அவரிடம் கொடுத்தனர்.

மத்திய சமுதாய அபிவிருத்தி கூட்டுறவு மந்திரி, ஸ்ரீ எஸ். கே. டே. இந்த சாதனைகளைப் பாராட்டி ஜவான் மல்லுக்கு எழுதிய கடிதத்தில் " நீங்கள் ஒரு அதியற்புத சாதனையைப் புரிந்திருக்கிறீர். உங்களுடைய பஞ்சாயத்து சமிதி மக்கள் மட்டிலுமின்றி, இந்நாட்டில் பிரஜைகள் அனைவரும், உங்களுடைய சாதனையைக் கண்டு பெருமிதம் கொள்வார்கள். இதற்காக நான் உங்களுக்கு என் பாராட்டைத் தெரிவித்துக் கொள்வதுடன், உங்களுடைய சாதனை, உங்களுடைய சமிதியைச் சேர்ந்த இதர மக்களுக்கு ஆர்வத்தை உண்டாக்கி அவர்களுடைய மனப்போக்கில் ஒரு புரட்சியை ஏற்படுத்தும் என்று நம்புகிறேன் " என்று குறிப்பிட்டுள்ளார்.

நயாகாவ்னையும், மகர்தலாபையும் இணைக்கும் ரஸ்தாவை பஸ்ஸுகளும் கூடச் சென்று வரக்கூடியபடியாக சரளை பரவி கெட்டிப்படுத்தவேண்டுமென்பதுதான் ஜவான்மல்லுக்கு இருந்து வரும் ஒரே அபிலாஷையாகும்.

சிறு கதை

பூலோக நரகம்

திரு. மீ. லி. சபரிராஜன்.

[" நாம் சுகமாயிருக்கிருேமா, இல்லேயா என்பதைப்பற்றி நினைக்கக்கூட நேரமில்லாமல் வேலேயில் ஈடுபட்டிருப்பவன் பாக்கியவான்" என்றுர் ஞானி டால்ஸ்டாய். "உழைக்காதவனுக்கு உணவு கொடுக்கக்கூடாது." இது மகாத்மா காந்தியின் திருவாக்கு. 'உழைப்பே சொர்க்கம்' என்ற அரிய கருத்தை வலியுறுத்தும் அற்புதமான நினைவுச் சித்திரம் இது : ஆசிரியர்.]

வட்டிக்கடை ராமசாமிப் பிள்ளை அன்று தூக்கமாத்திரை நான்கை உள்ளே தள்ளியுங்கூடக் கல்லேப் போலவே உட்கார்ந்திருந்தார்.

கடியாரம் மணி அடித்துக்கொண்டே போயிற்று. ஒரு மணி ஆயிற்று.

" சும்மா உட்கார்ந்திருப்பதற்கு, படுத்துத்தான் வைப்போமே ! " என்று படுத்தார்.

சற்று நேரம் கழித்து அவருக்கு எப்படியோ தூக்கம் வந்துவிட்டது.

ஒரு கனவு கண்டார். சாதாரணமான கனவா ? மகா பயங்கரமான கனவு !—

மாரடைப்பால் செத்துப்போனுர். மேலுலகத்துக்குப் போனுர். அங்கு ஒரு தேவ தூதன் அவரை எதிர் கொண்டழைத்து, " வருக ! " என்ருன்.

" எவ்வளவு பணம் வேண்டும்.—மூன்று வட்டி " என்றுர் ராமசாமிப் பிள்ளை ! அவரையுமறியாமலே அவர் வாய் அப்படிக் கேட்டது.

தேவதூதன் சிரித்துவிட்டு, " இது வானுலகம். இங்கு உம்முடைய தொழிலே நடத்த முடியாது " என்ருன்

" ஓஹோ, அப்படியா ! " என்று சொல்லிவிட்டு ராமசாமிப் பிள்ளை சற்று யோசித்தார். பின்பு, " பெண்டாட்டி பிள்ளைகளிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லே. இரும்புப் பெட்டிச் சாவியையும் எடுத்து வரவில்லே. இப்படித் திடீரென்று என்னைக் கொண்டுவரலாமா ? " என்று அதிருப்திபட்டார் ராமசாமிப் பிள்ளை.

" கடிதம் போட்டுவிட்டு வரும் வழக்கம் கிடையாதே!" என்ருன் தேவதூதன்.

" சரி,—இப்போது என்னை எங்கு அழைத்துச் செல்கிறீர் ? "

" எங்கு கொண்டுபோகச் சொல்லுகிறீரோ அங்கு கொண்டுபோகிறேன் ".

" இதோ பாரும், நான் பூலோகத்தில் சுகமாயிருந்தவன். இங்கும் அப்படியே இருக்க விரும்புகிறேன். தனியாய் ஒரு பங்களா கொடுக்க வேண்டும். நினைத்த நேரத்துக்குச் சாப்பாடு கிடைக்க வேண்டும். ஒரு ரேடியோ வேண்டும்—வேலே எதுவும் இருக்கக்கூடாது."

" அப்படியே ! " என்ருன் தேவதூதன்.

நான்கு வெண்குதிரைகள் பூட்டிய ஓர் அழகிய இரதத்தில் ராமசாமிப் பிள்ளையை ஏற்றிக்கொண்டு சென்ருன் தேவதூதன். சற்றுத் தொலேவுக்கப்பால், பொன்மயமாக விளங்கிய ஓரிடத்தை அடைந்தான். அங்கு வனப்புமிக்க ஒரு மாளிகை முன் இரதத்தை நிறுத்தினுன். ராமசாமிப் பிள்ளையை உள்ளே அழைத்து சென்ருன். அங்கு ரேடியோ மாத்திரமல்ல;— . . . . பூலோகத்தில் செல்வர்கள் உபயோகிக்கும் பற்பல விதமான சுகபோகப் பொருள்களும் இருந்தன. நன்கு அலங்கரிக்கப்பட்ட ஒரு அறையில், சப்ரகூட மஞ்சத்தில் ஒரு பஞ்சணை போடப்பட்டிருந்தது.

" எனக்கேற்ற இடம் ; நான் இங்கு இன்பமாக வாழமுடியும் " என்றுர் ராமசாமிப் பிள்ளை மகிழ்ச்சியுடன்.

" நினைத்த நேரத்தில் நினைத்த உணவு இங்கு தங்களுக்குக் கிடைக்கும் " என்ருன் தேவதூதன்.

" நன்றி ; வணக்கம் " என்றுர் பிள்ளை.

" எப்போதாவது என் உதவி தேவையாயிருந்தால் நினையுங்கள் ; நான் வருவேன் "

" அப்படியே செய்கிறேன் ! " என்று சொல்லி விட்டுக் கைகூப்பி வணங்கினுர் பிள்ளை.

தேவதூதன் அவ்விடத்தைவிட்டு அகன்ருன்.

ராமசாமிப் பிள்ளை பஞ்சணையில் படுத்தார். ரேடியோ வைத் திருப்பிவிட்டார். அறுசுவை உண்டியை உண்டார். பொழுது இன்பமாய்க் கழிந்தது.....

மாதங்கள் ஒன்றன்பின்னென்ருய் ஓடிமறைந்தன. ஓராண்டாயிற்று. வந்த புதிதில் இருந்த உற்சாகம் இப்போது அவருக்கு இல்லே.

இரண்டு ஆண்டுகளாயின. அவருடைய மகிழ்ச்சி மறைந்தது.

மூன்று ஆண்டுகளாயின. அங்கிருக்க அவருக்குப் பிடிக்கவில்லே.—வாழ்வு மாறுதலற்றதாயிருந்தது. செய்ததையே நாள்தோறும் செய்துகொண்டேயிருப்பதில் அவருக்கு அலுப்பு உண்டாயிற்று. மனிதன் எவ்வளவு நேரம்தான் படுத்துக்கொண்டேயிருக்க முடியும் ? உணவை அவர் வெறுத்தார். சில சமயம் எதுவும் சாப்பிடாமலே இருந்துவிடுவார். காலே எழுந்தால் மாலே

எப்போது வரும் என்ற கவலைதான் அவருக்கு உண்டாகும். ஒரு வினாடி கழிவது ஒரு யுகம் போலிருக்கும். ஆமை வேகத்தில் பொழுது கழிவது போலிருந்தது. காலதேவன் அவரைக் கொல்லுவதுபேலக் காணப்பட்டான். சலிப்பு மிகுதியால் வாந்தியும், தலைவலியும் அவருக்கு அடிக்கடி ஏற்பட்டன. அவர் நினைத்தார். "எல்லாம் இருக்கின்றன ; ஆனால் ஏதோ ஒன்று இல்லை. அது என்ன ? "

யோசித்து யோசித்துப் பார்த்தார், முடிவில் கண்டு கொண்டார். அந்த மாளிகை, சுற்றிலுமிருந்த பொருள்கள், எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்து அவருக்கு எரிச்சல் உண்டாயிற்று. உடனே தேவதூதனை நினைத்தார். அவனும் வந்தான்.

" என்ன வேண்டும் ? என்று கேட்டான்.

இராமசாமிப் பிள்ளை தமதருகேயிருந்த ஒரு மேஜைமீது ஒரு குத்துக் குத்தி, "எனக்கு ஏதாவது வேலை வேண்டும் " என்றார்.

" ஆ, அதுதான் இங்கு கிடையாது !" என்றான் தேவதூதன்.

இராமசாமிப் பிள்ளை ஆத்திரத்துடன், " இது என்ன நரகமாகவல்லவா இருக்கிறது ! " என்றார்.

" பின் இதை என்னவென்று நினைத்தீர் ? " என்று நிதானமாய்க் கேட்டான் தேவதூதன்.

இதைக்கேட்டு இராமசாமிப் பிள்ளை திகைத்து மலைத்துப் போனார். அந்தத் திகைப்பிலிருந்து மீள்வதற்குச் சற்று நேரமாயிற்று. பின்பு அவர் தேவதூதனை நோக்கி இரு கைகளையும் குவித்து, "என்னை இந்த வேதனையிலிருந்து விடுவிக்க வேண்டும் " என்றார்.

தேவதூதன் சிரித்தான், " வேலையே இல்லாமலிருந்தால் சுகமாயிருக்கலாமென்று நினைக்கிறார்கள். வேலையில்தான் சுகம் இருக்கிறது என்பது பூலோக, மக்களுக்குத் தெரியவில்லை," என்றான்.

" ஆம், உண்மை ; அதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் பூலோகத்தில் இருந்தபோது ஒரு நிமிஷங்கூட நான் சும்மா இருந்ததில்லை " என்றார் இராமசாமிப் பிள்ளை.

தேவதூதன் முகத்தில் ஒரு முறுவல் தோன்றியது. பெருஞ்சிரிப்பைக் கஷ்டத்துடன் அடக்கிக்கொண்டவன் போலக் காணப்பட்டான். ஒரு சில வினாடிகளுக்குப் பிறகு அவன் சொன்னான். " எனக்கும் தெரியுமே அது ! பாங்குகளுக்கும் பங்கு மார்க்கட்டுகளுக்குமாக எந்நேரமும் காரில் சுற்றியலைந்தவண்ணமாயிருப்பீர்கள். அதுதானே ! " என்று சொல்லிவிட்டு வாய்விட்டுச் சிரித்தான்.

இராமசாமிப் பிள்ளைக்கு என்ன சொல்லுவதென்று தெரியவில்லை. மௌனமாயிருந்தார்.

தேவதூதன் தொடர்ந்தான் : "உண்மையான சுகமும் மகிழ்ச்சியும் ஆனந்தமும் வேண்டுமானால்". . . . .

..ஆ, பாழாய்ப்போன ஒரு கொசு இந்தச் சமயத்தில் இராமசாமிப் பிள்ளையின் மூக்கில் புகுந்ததால் அவர் தூக்கம் கலைந்தது. கண்ணை விழித்துச் சுற்றுமுற்றும் பார்த்தார். தாம் இருப்பது பூலோகமா, மேலுலகமா என்று யோசித்தார். அருகில் தூக்க மாத்திரைப் புட்டி இருந்தது.—கடியாரம் மணி மூன்று அடித்தது. பக்கத்தில் அவருடைய அருமைப் புதல்வனும் மனைவியும் படுத்திருந்தார்கள் அப்போதுங்கூட அவருக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. எதிரேயிருந்த இரும்புப் பெட்டியைப் பார்த்தபோதுதான் தாம் கண்டது கனவு என்பது தெளிவாக விளங்கியது—இனி தூக்கம் வராது. எழுந்தார். நிலவு பட்டப்பகல் போல் காய்ந்து கொண்டிருந்தது. எங்கும் அமைதியாயிருந்தது. எழுந்து உலாவினார்—தேவதூதன் சொன்ன அந்த வேலை என்னவயிருக்கும் என்று யோசித்தார் அடாடா, அது தெரிந்துக்கொள்ளும் வரை தூங்கியிருக்கலாகாதா ?—கீழே இறங்கினார் தோட்டத்துப் பக்கமாக உலாவினார். ஒரு மூலையில் தோட்டக்காரன் ஒரு துண்டை விரித்துக் கீழே படுத்திருப்பதைக் கண்டார். ஆனந்தமாகக் குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்தான் அவன். பெரு மூச்சு விட்டார். மறுபடியும் யோசித்தார். திடீரென்று அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. அங்கு ஒருபுறம் கிடந்த மண்வெட்டியை எடுத்துக்கொண்டார். அங்கு ஒரு புறம் அடர்ந்து வளர்ந்திருந்த புல்லையும் முட்செடிகளையும் வெட்டத் தொடங்கினார்.

மேல்மூச்சு கீழ் மூச்சு வாங்கிற்று. அப்போது நல்ல கோடைக்காலம். காற்றே இல்லை. உடம்பில் வியர்வை பெருகிக் கொட்டிற்று. அவ்வப்போது யாராவது பார்க்கிறார்களாவென்று திருட்டுத்தனமாய்ப் பார்த்துக்கொண்டார். ஏறக்குறைய ஒரு முக்கால் மணி நேரம் வரை அவ்வேலையில் ஈடுபட்டிருந்த பிறகு, மண் வெட்டியைக் கீழே போட்டார். உடம்பு அலுப்பால் ஏங்கிற்று. உட்கார்ந்தார். ஏதோ ஒரு பெருஞ்சுமை உடம்பிலிருந்து இறங்கி விட்டது போலிருந்தது.. கண்கள் மெதுவாக மூடத் தொடங்கின. தூக்கம் வந்துவிட்டது. போய்ப் படுத்தார்.

காலையில் ஏழு மணிக்குத்தான் எழுந்தார். உடம்பில் ஒரு புதிய தெம்பு உண்டாகி விட்டது போலிருந்தது. ஜன்னல் வழியாக வெளியுலகைப் பார்த்தார். அது இன்ப மயமாய்க் காட்சியளித்தது "பூலோகம் சொர்க்க லோகம் போலல்லவா இருக்கிறது !" என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக்கொண்டார்.....

"அன்றாட உணவுக்கு அன்றாடம் மனிதன் உழைத்தாக வேண்டும்"

மகாத்மா காந்தி

ராஜ்ய சமுதாய நல அபிவிருத்தி

மந்திரிகள் மகாநாடு—புதிய பஞ்சாயத்து அமைப்பு பற்றிய பிரச்சினைகள்

புது டில்லியில் டிசம்பர் மாத ஆரம்பத்தில் இரண்டு முக்கியமான மகாநாடுகள் நடைபெற்றன. அவற்றில் ஒன்று, ராஜ்ய சமுதாய நல அபிவிருத்தி மந்திரிகள் மகாநாடு. மற்றென்று அபிவிருத்திக் கமிஷனர்கள் மகாநாடு.

ராஜ்ய சமுதாய நல அபிவிருத்தி மந்திரிகளின் முதலாவது மகாநாடு, சமுதாய நல அபிவிருத்தித் திட்ட வரலாற்றிலேயே ஒரு முக்கியமான சம்பவமாகும். அபிவிருத்திக் கமிஷனர்கள் முதலாவது மகாநாடு மட்டும் 1952-ல் நடைபெற்றது. இம் மகாநாட்டை பிரதம மந்திரி, **ஸ்ரீ ஜவஹர்லால் நேரு** ஆரம்பித்து வைத்தார். அதுபோலவே ராஜ்ய சமுதாய நல அபிவிருத்தி மந்திரிகளின் முதலாவது மகாநாட்டையும் பிரதம மந்திரியே ஆரம்பித்துவைத்தார்.

புதிய பஞ்சாயத்து அமைப்பானது இந்தியாவில் இப்போது நிகழ்கிற மிகவும் புரட்சிகரமான ஒரு விஷயம் என்றும், ஏனென்றல் இந்நாட்டின் அமைப்பையே மாற்றிவிடக்கூடிய எல்லா சக்திகளும் அதில் அடங்கியிருக்கின்றன என்றும் பிரதம மந்திரி குறிப்பிட்டார். நமது நாட்டில் ஏற்பட்டு வருகிற அபிவிருத்திகளில், வெறும் யந்திர சாதனம் அல்லது நிதியைவிட மனிதர்களின் தன்மை அதிக முக்கியமான அம்சமாகும் என்பதைப் பிரதம மந்திரி வலியுறுத்தினர். யந்திரங்களை உபயோகிப்பதனல் மாத்திரம் முன்னேற்றத்தைக் கொண்டுவந்துவிடமுடியாது, யந்திரங்களை உபயோகிப்பதன் பலனுக, மனேபாவத்தில் ஏற்படுகிற மாறுதலின் மூலமே நாம் முன்னேற்றத்தைக் காண முடியும்.

சமுதாய நல அபிவிருத்தி இயக்க நிறைவேற்ற வேலையில் ஈடுபட்டுள்ள அனைவரும், கிராம மக்களின் மனேபாவத்தில் ஒரு மாறுதலை ஏற்படுத்த வேண்டும் என்ற உறுதியுடன் செயலாற்ற வேண்டும் என்பதை அவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று பிரதம மந்திரி வலியுறுத்தினர். சோஷலிஸ சமூக அமைப்பை விட வேறு எந்தவித அமைப்பும் இந்தியாவுக்குப் பொருத்தமாக இருக்காது என்று தாம் உறுதியான நம்பிக்கை கொண்டிருப்பதுபோல, அவர்களும் தன்னம்பிக்கையுடன் கிராம மக்களுடன் பேசினல்தான், இந்த லட்சியத்தைச் செயல் முறைக்குக் கொண்டுவர முடியும் என்று பிரதம மந்திரி கூறினர்.

அதற்கு முன்பு, யூனியன் சமுதாய நல அபிவிருத்தி—கூட்டுறவு மந்திரி, **ஸ்ரீ எஸ். கே. டே.** பிரதம மந்திரியை வரவேற்றுப் பேசுகையில், புதிய பஞ்சாயத்து அமைப்பை அமுலுக்குக் கொண்டுவந்துள்ளதன் மூலம் அனேக பிரச்சினைகள் எழுந்துள்ளன என்றும், அவற்றிற்குத் தீர்வு கண்டாகவேண்டியிருக்கிறதென்றும் அவர் கூறினர்.

சென்ற எட்டு வருஷ காலத்தில் சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்தினல் ஏற்பட்டுள்ள முன்னேற்றம்பற்றி, ஸ்ரீ டே குறிப்பிடுகையில், உற்பத்தித் துறையில், முக்கியமாய் விவசாய உற்பத்திமேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பலன் கொடுக்க ஆரம்பித்துள்ளன என்று கூறினர். திருந்திய விவசாய முறைகளை அனேகமாய் கிராமவாசிகள் எல்லோருமே விரும்புகின்றனர் என்று அவர் கூறினர்.

பொருளாதார அபிவிருத்தி பரவலாக இருக்கும்படி செய்வதே புதிய பஞ்சாயத்து அமைப்பின் நோக்கமாகும் என்று ஸ்ரீ டே எடுத்துரைத்தார். எனவே தொழில்கள் கிராமப் பிரதேசங்களில் பரவலாக அமைக்கப்பட வேண்டும் என்றும், பொருளாதாரத் துறையில், “சககாரி சமாஜங்கள்” அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினர். உத்தியோக ரீதியான ஸ்தாபனம் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு உபயோகப் படும்படி பார்த்துக்கொள்வதற்குச் சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது மகா நாட்டின் பொதுவான அபிப்பிராயமாகும். ராஜ்ய சர்க்கார்கள் கிராமத் தொழில்கள் திட்டம் விஷயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிராமத் தொழில்களுக்கு விசேஷ நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று மகாநாடு சிபாரிசு செய்தது.

சமுதாயத்தில் பொருளாதார நிலைமையில் நலிந்துள்ள பிரிவினர்களின் க்ஷேம நலனை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் மகாநாடு உணர்ந்து, திட்ட அனுகூலங்கள் கிராமவாசிகளுக்குச் சம ரீதியில் கிடைக்கும்படி பார்த்துக்கொள்வதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மகாநாடு யோசனை கூறியது. இக் காரியத்துக்காக, பஞ்சாயத்து சமிதிகள் விசேஷ நிதிகளை ஒதுக்கிவைக்க வேண்டும் என்று சிபாரிசு செய்யப்பட்டது.

திட்டமிடுவதற்கும் அபிவிருத்தி வேலைக்கும் ஒரு தொகுதியை ஒரு யூனிட்டாகக் கொள்ளவேண்டும் என்ற யோசனையை மகாநாடு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டது. ஆனல், கல்வி, கிராமத் தொழில்கள் ஆகியவை சம்பந்தமான விஷயங்களில் பஞ்சாயத்து சமிதிகளிடம் ஒப்படைக்கப்படவிருக்கும் அதிகாரங்கள் பற்றி ராஜ்ய சர்க்கார்களே முடிவு செய்துகொள்ளும்படி விட்டுவிட வேண்டும் என்று மகாநாடு கருத்துத் தெரிவித்தது.

பொங்கல், நல்ல பொங்கல்!

"அழகனுர்"

பொங்கல் நல்ல பொங்கல்,
பெருமை மிக்க பொங்கல்!
மங்க ளங்கள் சேர
வரவு செய்யும் பொங்கல்
இஞ்சி மஞ்சள் வாழை
இலைக ளோடு நல்ல
வஞ்சி யர்கள் கூடி
மகிழ்ந்து பொங்கும் பொங்கல்
ஒளியை வீசி வானில்
ஒளிரு கின்ற வெய்யோன்
துளிர்க்கும் இன்ப நெஞ்சாய்
திரும்பு கின்ற பொங்கல்
உழுது உழுது நாளும்
உற்ற பெருமை கூறி
விழுதை யொத்த சுற்றம்
விரும்பிப் போற்றும் பொங்கல்.
கன்று காளைச் செல்வம்
காணும் இன்ப ஆற்றில்
நின்று போற்றும் நல்ல
நினைவை ஏற்கும் பொங்கல்!

பொங்கல் பொங்குக!

(சீராளன், காந்திநிகேதன்)

தைபிறக்க வழிபிறக்க,
மெய்சிறக்க அருள் சுரக்க,
அன்புதவழ அருந்தமிழன்
பண்பு கமழ பாடு ஓங்கப்
பொங்குக சர்க்கரைப் பொங்கல் பொங்குக!!
தங்குக இன்பம் தரணி எங்கனும்!!

நிலம் விளைய நடை தழைய,
நலம் விழைய உளங் குழைய,
கலை யுயர மனை மக்கள்
நிலை யுயர, நாடு ஓங்க,
நன்று பொங்குக நற்சுவைப் பொங்கல்!
என்றுந் தங்குக இல்லற இன்பம்!!

வாழ்த்துரை!

உதயை—மு. வீரையன்

எங்கணும் இன்பம் எய்திட வேண்டி
ஏரினைப் பற்றிய கையால்
திங்களை ஒத்ததும் மங்கையர் மேனி
தீண்டியே பொங்கலை ஏற்று

கங்குலை ஓட்டும் செங்கதிர் மற்றும்
கார்நினைத் துண்ணுவோர் இன்பம்
பொங்கிட நாமும் புன்னகைப் பூத்துப்
பொங்கலின் வாழ்த்துரைப் போமே!

உடலுழைப்பேறி உன்னத நாடாய்
உயர்ந்திட உழைத்திடு வோர்கள்
கடலினில் கரைத்த காயமாய் உள்ளார்
கட்டுமோ தேன், ஈ ஒன்று

இடமிலை யினிமேல் இப்படி வாழ
என்றிள நடைபயில் வோர்கள்
புடமென போட்ட பொன்னென திகழ
பொங்கலின் வாழ்துரைப் போமே!

செந்தமிழ் காத்து சிறந்திட வேண்டும்
சீர்மிகு சான்றோர் போன்றே
வெந்திடும் மக்கள் வேதனைப் புண்ணை
விரைந்துமே நீக்கிடும் வண்ணம்

சிந்திடும் வியர்வை நினைவினை யூட்டி
சிரித்திடும் நெற்கதிர் முத்தை
தந்திடும் இயற்கை எழிலினை எண்ணி
தரணியில் வாழ்த்துரைப் போமே!

கார்முகில் கண்டு கான்மயில் ஆடி
களிநடம் புரியா துண்டோ
சீர்தரும் வசந்தம் மேவிட பூக்கள்
சிரித்துமொட் டவிழ்த்திடல் கண்டீர்!

சீர்தனைக் கண்ட களைப் பயிர் நீண்டு
நிமிர்ந்திடும் செழுமையைப் போல
போர்தனை விட்டே புவனமே வாழ
பொங்கலின் வாழ்த்துரைப் போமே!

குடும்பக் கட்டுப்பாடு

[சென்னை மாநிலத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் சாதனைகள் பற்றி விளக்குகிறது இக் கட்டுரை.—ஆசிரியர்.]

சென்னை அரசாங்கத்தின் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் மாநிலத்தில் எல்லா குடும்பக் கட்டுப்பாடு ஆஸ்பத்திரி களிலும் (கிளினிக்) வெற்றிகரமாக அமுலாக்கப்பட்டு வருகின்றது. சென்னை நகரில் 7 அரசாங்க மருத்துவ மனைகளிலும், எல்லா மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலும் பெரும்பாலான தாலுகாத் தலைமை மருத் துவ மனைகளிலும் அரசாங்கக் குடும்பக் கட்டுப்பாடு பகுதி கள் இயங்கி வருகின்றன. அத்துடன் எல்லா ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் தாய்மார்களுக்கும் தந்தை யருக்கும், குடும்பக் கட்டுப்பாடு பற்றிய ஆலோசனைகள் அளிக்கப்படுகின்றன. தாய்மை மருத்துவம், சிசு நலம் சம்பந்தமான நிலையங்களுக்கும், நகராட்சி மருத்துவமனை களுக்கும், வருகிற தாய்மார்களுக்கும் தந்தையருக்கும் வேறுவிஷயங்களில் ஆலோசனை அளிக்கும்போதே குடும்பக் கட்டுப்பாடுபற்றிய ஆலோசனையும் அந்தந்த நிலையங் களில் அளிக்கும்படி அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. தாய்மார்களுக்கும், தந்தையருக்கும் தேவையான ஆலோசனை அளிப்பதற்காகக் குடும்பக் கட்டுப்பாடு பயிற்சி பெற்றவர்களை எல்லா நிலையங்களிலும் அரசாங்கம் நிய மித்துள்ளது. கருத்தடைச் சாதனங்களையும் பெற விரும்பு பும் தாய்மார்களுக்கும் தந்தையருக்கும் அவற்றை இலவசமாகவும், குறைந்த விலையிலும் அரசாங்கம் வழங்குகிறது.

நகரங்களிலுள்ள குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சைப் பிரிவு களில் பெண்கள் பிரிவுக்கு பெண் மருத்துவ அதிகாரி, முழு நேர அலுவலராக பணியாற்றுகிறார். ஆண்கள் பிரிவுக்குப் பகுதி நேர வைத்திய அதிகாரிகள் இருந்து வருகின்றனர்.

கிராமக் குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சைப் பிரிவுகளில், குடும்பக்கட்டுப்பாடு பயிற்சி பெற்ற ஒரு ஸ்டாப் நர்ஸ் பணியாற்றுகிறார். ஆரம்ப சுகாதார நிலையங்களின் சுகா தாரப் பார்வையாளர்கள் குடும்பக் கட்டுப்பாட்டில் பயிற்சி யளிக்கப்பட்ட அங்கு குடும்பக் கட்டுப்பாடு பிரச்சார வேலைப் பொறுப்பு அவர்களிடம் விடப்படுகிறது. இத்துடன், தாலுகா அரசாங்க தலைமை ஆஸ்பத்திரிகளில் பணி யாற்றும் மருந்து கலக்கும் அலுவலர்களுக்கு ஆஸ்பத்தி திரிக்கு ஒருவர் வீதமாக குடும்பக் கட்டுப்பாடு பயிற்சி அளிக் கப்பட்டு, அப்பகுதியில் ஆண்களிடையே குடும்பக் கட்டுப்பாடு, பிரச்சார வேலை அவர்களிடம் விடப்பட்டுள்ளது.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டத்தில், தந்தையர் களுடன் தொடர்பு கொள்ள சுகாதார இன்ஸ்பெக்டர்கள் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள்.

சென்னை நகர பகுதியைப் பொறுத்தவரை, சென்னை நகரம் 6 பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு பிரதான நிலையமும், 7 அல்லது 8 உப நிலையங்களும் ஒரு முழு நேர பெண் வைத்திய அதிகாரியின் பொறுப் பில் உள்ளன. ஒவ்வொரு நிலையத்திலும் உப நிலையத் திலும் பயிற்சி பெற்ற சமூக ஊழியர் அல்லது பயிற்சி பெற்ற ஸ்டாப் நர்ஸ், குடும்பக் கட்டுப்பாடு வேலைக்குப் பொறுப்பாக இருக்கிறார். தாய்மார்களுக்காக 44 அறிவிப்பு நிலையங்கள் உள்ளன. தந்தையருக்காக 32 அறிவிப்பு நிலையங்கள் பணியாற்றி வருகின்றன. தந்தை யருக்கான ஒவ்வொரு நிலையத்திலும் குடும்பக்கட்டுப்பாடு ஆலோசனை கூறுவதற்காக ஒரு ஆண் போதகரும், ஒரு பிரச்சாரகரும் இருக்கிறார்கள். முதல் முப்பத்திரண்டு தந்தை அறிவிப்பு நிலையங்களின் பணியையும் ஒரு வைத்திய அதிகாரி மேற்பார்வை செய்கிறார்.

மாநிலத்தில் குடும்பக் கட்டுப்பாடு வேலைத் திட்டங்களைக் கவனிக்க ஒரு முழு நேர குடும்பக் கட்டுப்பாடு அதிகாரி இருக்கிறார். சென்னை வைத்தியத் துறை நெறியாளர் மேற்பார்வையில் அவர் பணியாற்றுகிறார்.

இரண்டாவது திட்ட காலத்தில் நகரப் புறங்களில் 59 குடும்பக் கட்டுப்பாடு நிலையங்களையும் (கிளினிக்குகள்) கிராமப் பகுதிகளில் 152 குடும்பக்கட்டுப்பாடு நிலையங்களையும் துவக்க வேண்டுமென்பது லட்சிய அளவாகக் கொள்ளப் பட்டது. ஸ்தல ஸ்தாபனங்களும், தனியார் ஸ்தாபனங் களும் நிறுவியவை உள்பட இதுவரை, நகரப் பகுதிகளில் 26 நிலையங்களும் கிராமப் பகுதிகளில் 81 நிலையங்களும் ஏற்பட்டுள்ளன. இத்துடன் சென்னையில் தாய்மார்களுக்கு அறிவிப்பு நிலையங்கள் 44ம் தந்தையர்க்கு அறிவிப்பு நிலையங்கள் 32ம் செயல்படுகின்றன. தாய்மார்களுக்கான அறிவிப்பு நிலையங்கள் (ஞாயிற்றுக்கிழமையும், விடுமுறை நாட்களும் நீங்கலாக) தினம் காலை 8 மணியிலிருந்து மாலை 4–30 மணி வரை வேலை செய்கின்றன. தந்தையர் களுக்கான அறிவிப்பு நிலையங்கள் மாலை 6லிருந்து 8 மணி வரை வேலை செய்கின்றன. அரசாங்கக் குடும்பக் கட்டுப்பாடு கிளினிக்குகள் அனைத்தும் அலுவல் நாட்களில் காலை 8 மணியிலிருந்து மாலை 4 மணி வரை வேலை செய்கின்றன.

கிராமப் பகுதிகளில் மேற்கொண்டு 8 குடும்பக் கட்டுப்பாடு நிலையங்களை ஏற்படுத்துவதற்கான இடங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுவிட்டன. ஆனால் அலுவலர்கள் இல்லாத காரணத்தினால், இது வரை அவை துவக்கப்படவில்லை. அனுமதிக்கப்பட்டுள்ள நிலையங்கள் வேலை செய்யத் தொடங்கி, அவை திருப்திகரமாக வேலை செய்ய ஆரம்பித்த பின்பே, மேற்கொண்டு நிலையங்களைத் தொடங்குவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

குடும்பக் கட்டுப்பாடு வேலைத் திட்டம் சம்பந்தமாக 1956–57-லிருந்து 1959–60 வரை ஏற்பட்டுள்ள மொத்தச் செலவு சுமார் 7 லட்சம் ரூபாய் ஆகும். இதில் மத்திய அரசினர் பங்கு ரூ. 5.93 லட்சமும், மாநில அரசாங்கத்தின் பங்கு ரூ. 1·10 லட்சமும் ஆகும்.

1960–61-க்கு மத்திய அரசாங்கம் உதவுவது ரூ. 6.31 லட்சம். ஐம்பத்தொன்பது நகர நிலையங்களும் 152 கிராம நிலையங்களும் பணியாற்றத் தொடங்கினல் ஏற்படக்கூடிய செலவு சுமார் ரூ. 12.40 லட்சமாகும்.

தந்தையருக்கும், தாய்மார்களுக்கும் எல்லா குடும்பக் கட்டுப்பாடு முறைகளும் விளக்கப்படுகின்றன. தாய்மார்களும் தந்தையரும் விரும்பினல், அவர்களுக்கு கருத்தடைக் கருவிகள் அநேகமாக இலவசமாகவே வழங்கப்படுகின்றன. 1960–61-ல் ரூ. 63,288 பெருமான கருத்தடைச் சாதனங்கள் வழங்கப்பட்டன.

தாய்மார்களுக்கும் தந்தையருக்கும் கருத்தடை சாதனங்கள் வழங்கும் விதிகளை இந்திய அரசாங்கம் அண்மையில் தளர்த்தியுள்ளது. மாதம் ரூ. 300-க்கு குறைந்த வருமானமுள்ள தாய்மார்களுக்கும் தந்தையருக்கும் இலவசமாக இவைகளை வழங்குமாறு மத்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சாத்தியமான இடங்களில் எல்லாம், குடும்பக் கட்டுப்பாடுக்கு அறுவை சிகிச்சை முறை வலியுறுத்தப்படுகிறது. அரசாங்க ஆஸ்பத்திரிகளில் இந்த ஆபரேஷன் செய்து கொள்ள விரும்பும் தந்தையருக்கும் தாய்மார்களுக்கும் எல்லா வசதிகளும் அளிக்கப்படுகின்றன.

சென்னை மாநிலத்தில் குடும்பக் கட்டுப்பாடு விஷயமாக ஆலோசனையும் விளக்கமும் கூறப்பட்ட தாய்மார்கள், தந்தையர்கள் புள்ளி விவரம் வருமாறு :—

1958-லிருந்து 1960 செப்டம்பர் 30 வரையில், மாநிலத்தில், சென்னை நகர் உள்பட எல்லா இடங்களினுமாக சேர்ந்து மொத்தம் 71,000-க்கு மேற்பட்ட தந்தையருக்கும் சுமார் 4 லட்சத்துக்கு மேற்பட்ட தாய்மார்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடு முறைகள் பற்றி போதிக்கப்பட்டிருக்கிறது.

குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை முறைகளைப் பரப்புவதற்காக சென்னை மாநிலத்தில் முனைப்பான வேலைகள் நடைபெறுகின்றன. எல்லா அரசாங்க மருத்துவ மனைகளிலும், இந்த சந்தான பூர்த்தி அறுவை சிகிச்சை இலவசமாக எல்லாருக்கும் செய்யப்படுகின்றது. மாத வருமானம் 200 ரூபாய் அல்லது அதற்குக் கீழும் உள்ளவர்கள் இச்சிகிச்சையை அரசாங்க மருத்துவ மனையில் செய்துகொண்டால், மருத்துவ மனையில் தங்கியிருப்பதற்கான கட்டணம், பேறு காலச் செலவு, இரத்தம் பிளாஸ்மா கிரயம், உயர்ந்த மருந்துகளின் கிரயம் முதலியன அவர்களிடமிருந்து வசூலிக்கப்படமாட்டாது. சால்பின் ஜக்டமி சிகிச்சை செய்து கொள்ள விரும்புகிற தாய்மார்கள் வீட்டிலிருந்து மறுத்துவ மனைக்குப் போய்வர இலவச ஆம்புலன்ஸ் வண்டி தரப்படும்.

கருத்தரித்த மகளிர் பிரசவத்துக்குப்பின் சால்பின் ஜக்டமி சிகிச்சை செய்து கொள்ள விருப்பம் தெரிவித்தால் பேறுகாலத்திற்கு உரிய நாளுக்குச் சில நாட்கள் முன்னதாகவே பேறுகால மருத்துவ மனையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

சென்னை நகரில் வாசெக்டமி சிகிச்சை செய்பவர்களுக்கு உதவித் தொகை அளிக்கப்படுகிறது. நகரின் வேறு இடங்களில் அமைந்துள்ள 6 நர்சிங் விடுதிகளைத் தேர்ந்தெடுத்து அரசாங்கம் அவைகளுக்கு இதற்கான அனுமதி அளித்துள்ளது. இதன்படி உயிருடன் இருக்கிற 3 குழந்தைகள் அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளுடைய தந்தையர், இச்சிகிச்சையைத் தனியார் நர்சிங் விடுதியில் செய்து கொள்ள விரும்பினால் இலவச சிகிச்சை வசதி செய்து கொடுக்கப்படும். இத்திட்டத்தின்படி செய்யப்படும் ஒவ்வொரு அறுவை சிகிச்சைக்காகவும் சர்ஜனுக்கு 25 ரூபாய் தரப்படுகிறது.

“குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை முறைகளைப் பரப்புவதற்குரிய தீவிரத் திட்டம்” என்னும் புதிய திட்டம் சென்னை நகரத்திலும், மாநிலம் முழுவதிலும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி 3 குழந்தைகள் அல்லது அதற்கு மேலுள்ள தாய்மார்களும், தந்தையரும் (தாய்மார்கள் 24 வயது முடிவைப் பெற்றவர்களாயும், தந்தையர்கள் 50 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும்) அரசாங்க மருத்துவ மனைகளில் சந்தான பூர்த்தி அறுவை சிகிச்சை செய்து கொண்டால் ஒவ்வொருவருக்கும் 30 ரூபாய் அளிக்கப்படும். சிகிச்சைக்குப் பிறகு சில நாள் ஓய்வு எடுத்துக் கொள்வதால் ஊதியக் குறைவு ஏற்பட்டதற்கோ, மருத்துவ மனைகளுக்குச் சென்று வரும் பயணச் செலவிற்கோ மற்றும் இதர செலவுகளுக்கோ, இந்த ஈட்டுப்பணம் தரப்படுகிறது. அறுவை சிகிச்சையினைத் தந்தை தாய் இருவரும் செய்ய வேண்டியதில்லை. யாராவது ஒருவர்தான் செய்துகொள்ள வேண்டும். அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் அரசாங்க அலுவலர்களுக்கு ஓய்வுக்காக ஆறு நாட்களுக்கு மேற்படாமல் விசேஷ லீவு கொடுக்கப்படும். இந்தத் திட்டம் அமுலுக்கு வந்த பிறகு வாசெக்டமி அறுவை சிகிச்சைக்கு வருவோர் தொகை கணிசமாக அதிகரித்திருக்கிறது. அரசாங்க மருத்துவ மனைகளில் வாசெக்டமி சிகிச்சை செய்து கொள்ள முன் வருவோரின் தொகை மிகவும் அதிகமாகிவிட்டது. தற்போதுள்ள வசதிகளைக் கொண்டு தினம் அறுவை சிகிச்சைக்கு வரும்

அனைவரையும் ஆபரேஷன் செய்வதென்பது இயலாததாகி விட்டது. எனவே நகரில் கீழ்க்கண்ட அரசாங்க மருத்துவ மனையில் மூன்று முழு நேர அறுவை சிகிச்சை நிலையங்களும், ஒரு பகுதி நேர அறுவை சிகிச்சை நிலையமும் நிறுவப்பட்டுள்ளன :—

முழு நேரம்.—

1. அரசாங்க பொது மருத்துவமனை, சென்னை.

2. அரசாங்க ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.

3. அரசாங்க இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை.

பகுதி நேரம்.—

4. கீழ்ப்பாக்கம் மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை.

நகரில் கீழ்க்கண்ட அரசாங்கத் தாய்மை மருத்துவ மனைகளில் சால்பின் ஜக்டமி சிகிச்சை செய்யப்படுகின்றது.

1. மகளிர் சிசு நல அரசாங்க மருத்துவமனை, சென்னை.

2. அரசாங்க கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனை, சென்னை.

3. அரசாங்க ராஜா சர். ராமசாமி முதலியார் மருத்துவ மனை, சென்னை.

வெளியூர்களில் இந்தத் திட்டத்தின்படி சந்தான பூர்த்தி அறுவை சிகிச்சைகள் செய்யும் வேலைகளை மேற்கொள்ள 44 அரசாங்க மருத்துவ மனைகள் சென்னை அரசாங்கத்தின் ஒப்புதலைப் பெற்றுள்ளன.

சென்னை மாநிலத்தில் சந்தான பூர்த்தி அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் விவரமாவது :

1956-லிருந்து 1960 செப்டம்பர் முடிவு வரை மாநிலம் முழுதிலும் மொத்தம் 4,948 ஆண்கள் வாசக்டமி சிகிச்சையும், 8,042 பெண்கள் சால்பின் ஜக்டமி சிகிச்சையும் செய்து கொண்டுள்ளனர். ஆக மொத்தம் சந்தான பூர்த்தி செய்து கொண்டிருப்பவர்கள் தொகை 12,990.

தீவிரக் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் 1959 நவம்பரில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து மூன்றாண்டுகளில், வாசெக்டமி 6,000 பேர்களுக்கும், சால்பின் ஜக்டமி 14,000 பேருக்கு ஆக மொத்தம் 20,000 பேருக்கு அறுவை சிகிச்செய்யவேண்டும் என்று லட்சிய அளவு நிர்ணயிக்கப்பட்டது. முதலாண்டில் 1960 அக்டோபர் வரையில் வாசெக்டமி 1,303 பேர்களுக்கும், சால்பின் ஜக்டமி 1,189 பேர்களுக்கும் ஆக மொத்தம் 2,492 பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

பயிற்சி

சென்னையிலுள்ள, பெண்கள் குழந்தைகளுக்கான அரசாங்க ஆஸ்பத்திரியில் குடும்பக் கட்டுப்பாடு பயிற்சி நிலையம் 12—8—1957-ல்தொடங்கப்பட்டது. தொடர்ச்சியாக பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மாநிலத்தில் தற்போது பயிற்சி பெற்றுள்ள மருத்துவ அதிகாரிகள் தொகை 171 ; நர்சுகள் 173 ; சமூக நல ஊழியர்கள் 44; சுகாதாரப் பார்வையாளர்கள் 185 ; மருத்துவத் துறையைச்சேராதவர் 182 ; பெண்கள் நல அமைப்பாளர்கள் ஆகும்.

விளக்கப்பணி.

தாய் தந்தையர் அனைவருக்கும் அவர்களின் நலத்திற்காகவும், அவர்களது குழந்தைகளின் நலன்களுக்காகவும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மேற்கொள்ள வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்திக் குடும்பக் கட்டுப்பாடு அலுவலாளர்கள் வீடு வீடாகச் சென்று பிரசாரம் புரிகிறார்கள். மருத்துவ நிலையங்களுக்கும், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் வந்து செல்லும் தாய் தந்தையர்க்கும் இதைப்பற்றி அறிவுரை கூறப்படுகிறது. சென்னை அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள குடும்பக் கட்டுப்பாடு புத்தகம் அவர்களுக்கு விற்கப்படுகிறது. ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் அச்சிடப்பட்ட 5 லட்சம் பிரதிகளில் 3,45,795 பிரதிகள் விற்றுள்ளன. 25 நயா பைசாவாக இருந்த இப்புத்தகத்தின் விலையை கிராமப் பகுதிகளில் 12 நயா பைசாவாக குறைத்து விற்க அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

பொருட்காட்சிகள்

இம்மாநிலத்தில் மாபெரும் பொருட்காட்சிகள், மருத்துவமனை தினக் கொண்டாட்டங்கள், மரியாதை வாரக் கொண்டாட்டங்கள் எல்லாவற்றிலும் குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இவைகளை ஏராளமான தாய் தந்தையர்கள் வந்து பார்க்கிறார்கள். அவர்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் முக்கியத்துவம், குடும்பம் கட்டுப்பாடு விளக்கப் படங்கள், மாதிரிகள், ஆகியவற்றின் துணையுடன் விளக்கப்படுகிறது. அதிக அளவில் அவர்கள் குடும்பக் கட்டுப்பாடு புத்தகத்தையும் வாங்கி செல்லுகிறார்கள்.

சென்னை நகரிலும் சுற்றுப்புறங்களில் 1957–ம் ஆண்டிலிருந்து இதுவரை 8 பெரிய பொருட்காட்சிகள் நடத்தப்பட்டிருக்கின்றன. அவை அனைத்திலும் குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவற்றின் பயனாக குடும்ப கட்டுப்பாடு குறித்துப் பொதுமக்களுக்கு அக்கறை ஏற்படச் செய்ய முடிந்தது.

பயிற்சி முகாம்கள்

காந்தி கிராமம், சின்னாளப்பட்டி ஆகிய இடங்களில் ஔவை கிராமாந்தர மருந்துவ சேவா சங்கத்தின் ஆதரவில், தந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் தேர்ந்த போதகர்களால் 3 அல்லது 4 நாட்கள் குடும்பக் கட்டுப்பாடு குறித்துப் பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது. இம்மாதிரி பயிற்சி வகுப்புகளை மாநிலத்தில் மற்றப் பகுதிகளிலும் நடத்த உத்தேசிக்கப்பட்டு வருகின்றது. இவற்றின் மூலம் குறைந்த காலத்தில் தாய் தந்தையர் குடும்பக் கட்டுப்பாட்டில் சிறந்த அறிவு பெற இயலும். மேலும், இத் துறையில் பயிற்சியளிக்க நடமாடும் பிரச்சாரக் குழு ஒன்றை நிவறுவும் உத்தேசிக்கப்பட்டு வருகின்றது.

திரைப்படம்

குடும்பக் கட்டுப்பாடு பற்றி ஒரு சிறு திரைப் படத்தைச் சென்னை அரசாங்கம் தயாரித்துள்ளது. இது 3,000 அ

நீளமுள்ளது ; 33 நிமிடங்கள் ஓடக் கூடியது. மூன்று குடும்பங்களைச் சுற்றிப் பின்னப்பட்ட இச்சித்திரம், ஒவ்வொருவரின் நன்மைக்காகவும் குடும்பக் கட்டுப்பாடு எவ்வளவு இன்றியமையாதது என்பதை விளக்குகின்றது. குடும்பக் கட்டுப்பாட்டை மேற்கொள்ள அரசாங்கம் மக்களுக்குச் செய்துள்ள வசதிகள் முதலியவற்றை விளக்கும் இது போன்ற திரைப்படம் ஒன்றும் தமிழில் தயாரிக்கப்பட்டு வருகிறது ; அது விரைவில் பொதுமக்களுக்குத் திரையிடப்படும்.

கூட்டங்கள்

குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் எல்லாவற்றிலும் தாய்மார்கள் கூட்டம், தந்தையர் கூட்டம் இவை தனித்தனியே நடத்தப்படுகின்றன. அச் சமயங்களில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர் மற்றவர்க்கு அது எவ்வளவு எளிமையானது, சௌகரியமானது என்றும், அதன் நன்மைகளையும் விளக்கிச் சொல்லுகிறார். இத்தகைய கூட்டங்கள், தாய் தந்தையருக்கு அறுவைச் சிகிச்சை முறையின் எளிமை, தீங்கற்ற தன்மை இவற்றை யுணர்த்தி அவர்களையும் இணங்க வைக்க உதவியாய் இருக்கின்றன.

மாநில அரசாங்கத்தில் பின்வரும் குடும்பக் கட்டுப்பாடு புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன—

1. குடும்பக் கட்டுப்பாடு புத்தகம் தமிழிலும் ஆங்கிலத்திலும் நகரங்களில் இதன் விலை 25 ந.பை. ; கிராமங்களில் 12 ந.பை.
2. சொந்த அனுபவங்களின் அறிக்கை—தமிழிலும், ஆங்கிலத்திலும்.
3. ஓரங்க நாடகம்—தமிழ்.
4. வாசக்டமி அறுவைச் சிகிச்சைக்கு முன்னும் பின்னும் அனுசரிக்க வேண்டிய அறிவுரைகளை விளக்கும் வெளியீடு.
5. அறுவை முறைகளை பிரபலப்படுவதும் முனைப்பான திட்டத்தை மாணவர்களுக்கு விளக்கும் வெளியீடு.
6. அறுவைச் சிகிச்சை முறைகளுக்கு அரசாங்க மருத்துவ நிலையங்கள் முதலானவற்றில் செய்யப்பட்டிருக்கும் வசதிகளை விளக்கும் வெளியீடு.
7. குடும்பக் கட்டுப்பாடு தினங்களை (18—12—1959, 18—12—1960) யொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலர்கள்—தமிழிலும், ஆங்கிலத்திலும்.
8. குடும்பக் கட்டுப்பாடு காலண்டர். .... 2 லிருந்து 8 வரை உள்ள பிரசுரங்கள் இனமாக வழங்கப்படும். இவைகளைத் தவிர, இந்தியாவிலும், குறிப்பிட்ட சில ஐரோப்பிய நாடுகளிலும் ஒரு குடும்பத்தின் அளவு, உட்கொள்ளும் உணவின் அளவு, தனி மனித வருமானம் இவற்றை ஒப்பிட்டுக் காட்டும் 7 வகையான விளக்கப்படங்களும், குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் அமைந்துள்ள இடங்களைக் காட்டும் மாவட்டப் படங்களும் அச்சிடப்பட்டு இம் மாநிலத்திலுள்ள ஒவ்வொரு குடும்பக் கட்டுப்பாடு நிலையத்திற்கும் அளிக்கப்பட்டுள்ளன.

கருத்தரிக்காத நாள் கண்டறிவதற்குரிய மணிமாலைகள், 2,500 வாங்கப்பட்டன. அவை தாய் தந்தைகளுக்குக் குடும்பக் கட்டுப்பாடு நிலையங்களில் வழங்கப்பட்டு வருகின்றன.

புது டில்லியிலுள்ள சுகாதாரத் துறை டைரக்டர் ஜெனரலிடமிருந்து வரப்பெற்ற சுவரொட்டிகளும், துண்டுப் பிரசுரங்களும் எல்லாக் குடும்பக் கட்டுப்பாடு நிலையங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், தாய் தந்தையர்க்கும் விநியோகிக்கப்பட்டன.

சினிமா சிலேடுகள்

குடும்பக் கட்டுப்பாட்டை அனுசரிக்கும் மகிழ்ச்சியான குடும்பத்தையும், அதற்கு மாறுபாடாகக் குடும்பக் கட்டுப்பாட்டை அனுசரிக்காததால் அல்லல்படும் குடும்பத்தையும் எடுத்துக் காட்டும் இருவகை சினிமா சிலேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவை இம்மாநிலத்திலுள்ள எல்லா தியேட்டர்களிலும் காட்டப்படும்.

நடமாடும் பிரசாரக் குழு

முக்கியமாகக் கிராமப்புறங்களில் மக்களை நேரடியாக அணுகிக் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய அறிவைப் போதிய சாதனங்களுடன் விளக்கிக் கூறும் நடமாடும் பிரச்சாரக் குழுவின் அனுமதிக்கு இந்திய அரசாங்கம் கேட்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி

சென்னையிலுள்ள பெண்கள், குழந்தைகள் அரசாங்க மருத்துவ மனையின் பிள்ளைப் பேறு, குழந்தை மருத்துவ நிலைய டைரக்டர் டாக்டர் எம். கே. கே. மேனனை வழிகாட்டியாகக் கொண்டு கருக்கால ஆராய்ச்சி நடத்தப்படுகிறது.

கூட்டங்கள்

மாநிலக் குடும்பக் கட்டுப்பாடு போர்டு 1956-ம் வருஷம் ஜூலை மாதம் 18-ம் தேதியில் அமைக்கப்பட்டது. அதன் இணைப்புக் கமிட்டி 1957-ம் வருஷம் மே மாதம் 7-ம் தேதியில் அமைக்கப்பட்டது.

மாநிலக் குடும்பக் கட்டுப்பாடு போர்டு அடிக்கடி கூடி, குடும்பக் கட்டுப்பாட்டில் மாநிலம் இதுவரை அடைந்துள்ள முன்னேற்றங்களை ஆராய்வதுடன், மேலும் முன்னேற்றம் அடைவதற்கான ஆலோசனைகளையும் நல்குகின்றது.

குடும்பக் கட்டுப்பாடு இணைப்புக் கமிட்டி மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சென்னை நகரில் கூடி, குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களை, வெற்றிகரமாகச் செயல்படுத்த ஆலோசனைகளைக் கூறி உதவியளிக்கின்றது.



1–2. சென்னையில் குடும்பக் கட்டுப்பாடு தினம் 18—12—60 அன்று கொண்டாடப்பட்டது.

3–7. குடும்பக் கட்டுப்பாடு முறைகள் தந்தையர்களுக்கும் தாய்மார்களுக்கும் விளக்கிக் கூறப்படுகின்றன.

R.P.

அகில இந்திய கதர், கிராமக் கைத்தொழில் பொருட்காட்சி மத்திய அரசாங்கத் தொழில், வர்த்தகத்துறை அமைச்சர் ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரி அவர்களால் 24—12—60 அன்று திறந்து வைக்கப்பட்டது.



கதர், கிராமக் கைத்தொழில்
பொருட்காட்சியில் குழந்தை
கள் அரங்கை நிதி அமைச்சர்
ஸ்ரீ சி. சுப்பிரமணியம்
26–12–60 ல்
திறந்து வைத்தார்.

R.P.

1-2. விண்ணமங்கலத்தில் 17-12-60ல் சென்னை கவர்னர் கம்பளி தயாரிக்கும் நிலையத்தை திறந்து வைத்தார். 3. சலவைத் தொழிலாளர் மன்றத்தினர் 26-12-60ல் முதல் அமைச்சரை சந்தித்தனா.



4. ஸ்ரீ சாதனா, அரசாங்க உஷார் விடுதியினால் வெள்ள நிவாரண நிதிக்காக ரூ. 2,306 அளிக்கப்பட்டது. 5. 23-12-60ல் இலங்கைப் பிரதமர் முதல் அமைச்சரை சந்தித்தார்.

பாண்டி நாட்டு நாடோடிப் பாடல்கள்

[திரு செ. அன்னகாமு, பி. ஏ., எல். டி., காந்தி கிராமம்]

நாட்டுப் பாடல்கள் எளியவை ; பகட்டில்லாதவை—பரிசுத்தமானவை ; பொய்க்கலப்பற்றவை ; நேரானவை ; உள்ளத்தை ஈர்க்கும் இனிமையும் இசையொலியும் நிறைந்தவை ; "செழுமை மிக்க மனோபாவமும் கற்பிக்கப்படாத கட்டுப்பாடற்ற கற்பனையும்" நிறைந்த களஞ்சியங்கள் அவை ; தீங்கற்ற கலைக்கருவூலங்களென்றே அவற்றைக் கூறலாம். அதன் வேர்கள் ஆழத்தில் சென்று மனித சமுதாயத்தின் ஆத்மாவைத் தொடுகின்றன. மனித் சமுதாயத்தின் ஆரம்ப காலந்தொட்டு, மக்களின்—பாமர மக்களின்–உணர்ச்சிப் பெருக்காகக் கொந்தளித்தோடும் நதிப் பிரவாகமே நாட்டுப் பாடல்கள். நாட்டுப்பாடல்கள் நாட்டுப் புறத்தையே ஒளிபெறச் செய்து, அங்குள்ள உயிரினங்களுக்கு வியப்பூட்டி அவற்றைத் தம் வயமாக்குகின்றன. அவற்றின் சுவையைப் பாம்பும் அறிகிறது. பாம்பு பிடாரனின் மகுடி ஓசை நாகப் பாம்பிற்குப் பித்தேற்றுகிறது. ஆயர்களின் தீங்குழலோசை கன்று காலிகளைத் தம்மையே மறக்கச் செய்கிறது. தாயின் தாலாட்டைக் கேட்டுக் குழந்தை சொக்கி விடுகிறது. வண்டிக்காரனின் பாட்டு வண்டியிழுக்கும் மாடுகளின் மனத்தைக் கவருகிறது. நெருங்கிய உறவினரை இழந்து அழுபவர்களின் உருக்கமான ஒப்பாரிப் பாட்டுக்கள், அவற்றைச் செவியுறுபவர்களை யெல்லாம் துக்கத்திலாழ்த்துகின்றன. உழவர்களும் உழத்தியர்களும் இதர தொழிலாளிகளும் பாடும் பாடல்கள் அவர்களின் தொழிலிலுள்ள அலுப்பை மாற்றி மறக்கச் செய்கின்றன. காந்தம் இரும்பை இழுப்பது போல, காந்த சக்தி கொண்ட சொற்களையும் நெருப்புச் சுவையையுமுடைய பாடல்கள் உயிர்குலங்களைத் தம் வயப்படுத்துவதில் ஆச்சரியமொன்றுமில்லை.

கிராமங்கள்—நாகரிகத்தின் தொட்டில்

நாட்டுப் பாடல்களைப் பாடிய கவிஞர்களைத் தோற்றுவித்த கிராமங்களே, நம் நாட்டின் நாகரீகத்தை, பண்பை உயிரை ஓம்பி வளர்த்த தாய்மார்கள். கிராமங்களே நமக்கு அமுதூட்டும் அன்னையாகவும், மக்கள் குலம் வளர அதைத் தொட்டிலிட்டு அமுத கீதம் பாடும் செவிலியாகவும், அழகு பொலியும் ஆட்டங்களைக் காட்டி மகிழ்விக்கும் தோழியாகவும் விளங்குகின்றன. முற்காலத்தில் இக்கிராமங்களில், இப்போது நாம் படிப்பெனக் கருதும் எழுத்தறிவு மிகக் குறைவு தான். ஆனால் இயற்கை அன்னையின் கல்விச்சாலையிலிருந்து, அவைகள் குறிப்பாலுணர்ந்து, கற்பிக்கப்படாமல் கற்றவை அனந்தம். அவ்வாறு கல்லாத உள்ளத்திலிருந்து தான், கவிதை ஊற்றெடுத்துக் கிளம்புகின்றது.

ஏழை எளியவர்களின் உள்ளங்கள் தெய்வ பக்தி நிறைந்தவை. கடின உழைப்பும், கடுமையான சோதனைகளும் அவர்களின் வாழ்வில் ஒரு துறவு மனப்பான்மையை எற்படுத்தியுள்ளன. உழவர்களும் தொழிலாளிகளும் உலகம் உய்யும் பொருட்டு தம் நலத்தைத் தியாகம் செய்து சொட்டும் வியர்வைத் துளிகள் ஒவ்வொன்றும் புனிதமானவை.

மதுரை மாவட்டத்தில் வளம் நிறைந்த கம்பம் பள்ளத்தாக்கில் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் நாட்டுப் பாடல்கள் ஏராளமாக உள்ளன. அங்கு நிலம் செழித்திருக்கிறது. அங்கு வதியும் வேளாளர்பெருமக்கள் ஓரளவு சுதந்திரத்துடன் வாழ்கின்றனர். அதனால், அங்குள்ள பாடல்கள் செழுமையும் இனிமையும் உயிரும் உள்ளனவாக இருப்பதை உணரலாம்.

பக்திப் பாடல்கள்

நாட்டுப் புறங்களில் உழைக்கும் உழைப்பாளிகளைச் சூழ உள்ள இயற்கையே தெய்வ வடிவாகத் திகழ்கிறது. அது அன்புருவான தாய் வடிவிலும், பயங்கரமான பத்திரகாளியின் உருவிலும், வல்லமை மிக்க பேயவனாகவும் தோற்றமளிக்கிறது.

கிராமங்களில் காளியம்மனும், மாரியம்மனும் வணங்கி பெறுகின்றனர்.

1 முந்தி முந்தி விநாயகரே
முருகா சரஸ் வதியே
கந்தனுக்கு முன் பிறந்த
கணபதியே முன நடவாய் !

2 எடு கொடுத்தவரே
எழுத்தாணி தந்தவரே
பாடங் கொடுத்தவரே
பாதுகாக்க வேணுமய்யா

3 மந்தையிலே மாரியாயி
மலே மேலே மாயவரே
இந்திரரே சூரியரே
இப்ப வர வேணுமய்யா!

4 மலேயாள பகவதியே
மந்திரங்கள் கற்றவளே
மந்திரங்கள் கற்றவளே
அந்திர மா வந்திரமா !

5 சாமி யிருப்பாராம்
சங்கரனூர் கோவிலிலே
எங்கும் இருப்பாராம்
எம் பெருமாள் கோயிலிலே

6 முத்தாலம்மா பாதம்
முத்தமிட்ட காந்தாரி
பட்டாலம்மா மாரியம்மா
பாதுகாக்க வேணுமம்மா !

7 காளியம்மா மாரியம்மா
கண்ணனூர் துக்கையம்மா
துக்கைப் பிடாரியம்மா
துணையிருக்க வேணுமம்மா !

மழையை அழைத்தல்

மழையே அமுதமாகும். அது நாம் உண்பதற்கான உணவை உண்டாக்குவதோடு, அதுவும் உணவாக அமைகிறது. "வானம் சுருங்கின் தானம் சுருங்கும்." அத்துடன் தவமும் உயிர்க்குலங்களும் சுருங்கிவிடும். மழையே உலகின் உயிர்நிலே. விவசாயிகளுக்கு அதுவே உயிர், உணவு, கடவுள்.

மழையை நம்பி அவர்கள் விதை விதைக்கிறார்கள். பூமி வானத்தைப் பார்த்து ஏங்கி யிருக்கிறது. (வானம் பார்த்த பூமி யென்பது புன்செய் நிலங்களுக்கு வழங்கும் மறு பெயராகும்). ஆனால் மழை தக்க தருணத்தில் பெய்யாது பொய்க்கிறது. மழை வருவது போல் மேகஞ் சூழ்கிறது ; மழை பெய்வதில்லே. விவசாயிகளின் மனம் கலங்குகிறது ; அது பாட்டாக வெளிப்படுகிறது :

" இந்த மழையை நம்பி
இருங்குச் சோளம் நான் விதைச்சேன்
வந்த மழை போகுதில்லோ
வருண பகவானே ! "

ஆனால் மழை எப்படியும் வந்தே தீரவேண்டும். சில சமயங்களில் வனத்திற்குப் போய், தேவதைகளே வருந்தி, கிராம மக்கள் மழையை அழைப்பதுமுண்டு ; அவர்களின் நம்பிக்கையின் வலிமையால் மழை வந்து விடுவதுமுண்டு. மழையை வேண்டிப் பாடப்படும் பாடல்களில் சில வருமாறு :—

சந்திரரே சூரியரே
சாமி பகவானே
இந்திரரே வாசுதேவா
இப்ப மழை பெய்ய வேணும் !

மந்தயிலே மாரியாயி
மலேமேலே மாயவரே
இந்திரரே சூரியரே
இப்ப மழை பெய்ய வேணும் !

மட்டமலே அய்யனுரே
மாவூத்து வேலவரே
மழையை இறக்கிவிடு
மானுடங்க கையெடுக்க !

மலேயாள பகவதியே
மனங்குளிந்த கூத்தனுச்சி
மழையை இறக்கி விடு
மானுடங்க கையெடுக்க !

நாட்டுச் சிறப்பு

" தள்ளா விளேயுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு "

என்பது பொய்யா மொழி. மதுரை மாவட்டத்தின் சிறப்பையும், அதிலுள்ள சில ஊர்களின் செழிப்பையும் குறிக்கும் நாட்டுப் பாடல்கள், மேற்கண்ட குறளுக்கு விரிவுரையாக வுள்ளன.

1. வெள்ளிமலே விராலிமலே
விற கெடுக்கும் நாக மலே
பஞ்சங் தாங்கும் மதுரைக் கோட்டை
படி போடும் மீனுக்ஷி

2. அக்கடிக்கும் தேக்கு மரம்
அலே மோதும் கோம்பைத் தண்ணி
நீரோடி நெல் விளேயும்
நீதியுள்ள பாண்டி நாடு !

கொடைக்கானல் மலே, சுருளி மலேகளின் வளங்குறித்துப் பேசும் இரு பாடல்கள் :

துந்தி நிழல் தட்டுறதும்
தூவானம் தூவுறதும்
நாதசுரம் ஊதுவதும்
நம்ம கொடைக்கானலிலே !

இஞ்சி படரு மலே
எலுமிச்சை காய்க்கு மலே
மஞ்சி படரு மலே
மகத்தான சுருளிமலே !

நாடோடியாகப் பாடப்படும் பவளக்கொடி மாலையிலிருந்து தென் மதுரையின் சிறப்பைக் குறிக்கும் சில அடிகள் :

"வாழை வடக்கீனும் வான் கரும்பு மேற்கீனும்
கரும்பும் இளநீரும் கண் திறந்து மடைபாயும்
கட்டுக் கலங்காணும் கதிருழக்கு நெற்காணும்
அரிதாள் அறுத்துவர மறுநாள் பயிராகும்,
அரிதாளின் கீழாக ஐங்கலந் தேன் உடு கட்டும்
ஆனை கட்டும் தாளும் வானமுட்டும் போரும்
மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெலென்று
ஆனை கட்டிப் போரடிக்கும் அழகானதென்மதுரை"

தேச வளம்

தேங்காயைத் கீறி
வயலுக்கே உரம் போட்டு
தேங்காய்த் தண்ணீர் பாயும்
செல்வ மகன் செந்நெலுக்கு !

செந் நெல் விளையும்
சிறு சம்பா போரேனும்
பொன்னு நதி பாயும்
பூமான் மருகோனே !

நல்ல நிலம் பொன் விளையும்
நைப்பவளம் கொப்பு விடும் !
தஞ்சமென்று தவந்த வரைத்
தாமதிப்பார் பாலகனே !

சம்பா விளையும்
தனிச்சம்பா போரேறும் !
முத்து விளையும்
மிளகு சம்பா போரேறும் !

கட்டுக் கலங்காணும்
கதிருழக்கு நெற்காணும் !
முடி குருணி யாகுமின்னு-மீனாள்
முறி யெழுதி விட்டாளாம் !

மாடுகட்டிப் போரடிச்சா
மாளாது செந்நெலென்று
ஆனை கட்டிப் போரடிப்பா
அணிமதுரை மீனாட்சி !

(ஆராரோ)

குழந்தை—பிறப்பு வளர்ப்பு

குழந்தையைப் பெற்ற தாய்க்கு எத்துணை மகிழ்ச்சி ! எவ்வளவு பெருமிதம் ! குழந்தை அவளுடைய இன்பக் கனவுகளின் உரு ! அவளுடைய பிரார்த்தனையின், தவத்தின் பலன் ! ஆண்டவனின் அருள் பிரசாதம் ! தன் குடும்ப விளக்கு ! சந்ததியின் தூண் !

பண்புடைய மக்களை, அறிய வேண்டுவன அறிதற்குரிய மக்களை தம்மினும் அறிவுடைய மக்களை, சான்றோனாக விளங்கக்கூடிய மக்களைப்பெற தாயும் தகப்பனும் நினைத்த நினைவுகள் எத்தனை ! நோற்ற நோன்புகள் எத்தனை ! செய்த தருமங்கள் எத்தனை, செய்த தவங்கள், தரிசித்த தலங்கள், ஏற்றிய விளக்குகள் எத்தனை எத்தனையோ ! இதை அவர்கள் வெளியிட்டுச் சொல்வதில்லை. ஆனால் கவிஞர்கள், உள்ளுணர்ச்சிகளையெல்லாம் கருத்தும் கற்பனையும் நிறைந்த சொல்லோவியங்களாக்கி விடுவார்கள். குழந்தையைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டும் தாய் தன்னை மறந்து விடுகிறாள். ஒரு கணம் அவள் கவிஞருகவே ஆகிவிடுகிறாள். அவளுடைய கற்பனை சிறகுகளை விரித்து எண்ண உலகில் பறக்கிறது. அவளுடைய உள்ளத்தின் ஆழத்தில் அடைப்பட்டுக் கிடந்த உணர்ச்சிகளெல்லாம் நயமான கவிதைகளாக வெளி வருகின்றன.

தாய் செய்த தவம்

தன் கண்ணின் மணியான மாணிக்கத்தை அடைய தாய் செய்த தவத்தையும், தரிசித்த தலங்களையும், நோற்ற நோன்பையும், ஆடிய தீர்த்தங்களையும் விரிவாகக் கூறும் பாடல்களில் சில வருமாறு.

ஆராரோ ஆராரோ
ஆராரோ ஆராரோ,

1. கண்ணுமணி பொன்னுமணி
கந்தருட வேலுமணி
வேலுமணி வேணுமின்னு
வெகுநாத் தவசிருந்தேன் !

2. ஆத்து மணலிலே—உன்னைப் பெற்று
அருந்தவசு செய்யயிலே
மைந்தனில்லே இன்னு சொல்லி—வேலவர்
மடிப்பிச்சை தந்தாரோ !

3. ஆத்து மணல் குவித்து
அருந்தவசு செய்யயிலே
பார்த்திருந்து பரமசிவன்
பாலகனைத் தந்தாரோ !

4. வெள்ளி முழுகி
வெகு நாள் தவசிருந்து
அள்ளி மிளகு தின்னு
ஐந்நூறு நாள் தவசிருந்து

5. வெந்த மாவைத் தின்னு
விரத மழியு மின்னு
பச்சை மாவைத் தின்னு
பகவானைத் தெண்டனிட்டு

6. சாம்பசிவன் பூசை செய்து
தரணியில் பெத்த கண்ணே
ஈசன் கொடுத்த
இலஞ்சியமே கண்ணுறங்கு !

7. தோட்டம் திறந்து
தொன்னே தைத்துப் பூவெடுத்து

கையாலே பூ வெடுத்தா
காம்பழுகிப் போகுமின்னு

விரலாலே பூவெடுத்தா
வேரழுகிப் போகுமின்னு

8. பொன்னூசி கொண்டு
பூத்த மலரெடுத்து

வெள்ளூசி கொண்டு
வெடித்த மலரெடுத்து

செடி செடியாப் பூ வெடுத்து
செண்டு செண்டாய் மாலே கட்டி

வாடாமெ சாத்திஞரோ—உங்களப்பா
வடபழனி யாண்டவர்க்கு !

கோணுமே சாத்திஞரோ
அகிலாண்ட ஈஸ்வரிக்கு !

9. ஆற்றைத் திரை போட்டு
அக்கரையில் கோட்டை கட்டி

காற்றைப் பிடித்தடைக்கும்
காசிராசர் வம்மிசமோ !

10. கோர்ட்டுத் திறந்து
குரிச்சியிலே உக்காந்து

சர்ச்சியோடே வாதாடும்
சமத்தருட வம்மிசமோ !

11. எங்க குலம் மங்காமல்
எதிர்க்குலத்தார் ஏசாமல்

தங்கமணிப் பொக்கிசத்தை
தாளுள வந்த கண்ணே !

12. பாட்டஞர் ஆண்ட
பதினெட்டு ராச்சியத்தை

வச்சாள வேணு மின்னு
வரம் பெத்து வந்த கண்ணே !

13. செம்பால் எழுத்தாணி
சேரக் குறுத்தோலே கொண்டு

வண்ணக் குறுத்தோலே கொண்டு
வாசிக்க வந்த கண்ணே

14. தங்கக் கலப்பை கொண்டு
தடம் பதியா மாடு கொண்டு

வெள்ளி விதையெடுத்து
விதை விதைக்கப் பிறந்த கண்ணே !

15. மாஞ மதுரையிலே
மாடு விற்கும் சந்தையிலே

மாடு மதிச்சு—உன் மாமன்
வாங்கி வந்தார் பால் பசுவு !

16. வாங்கி வந்த பால் பசுவு—என் கண்ணே
வாலெல்லாம் தங்க நிறம் !

கொண்டு வந்த பால் பசுவு—என் கண்ணே
கொம்பெல்லாம் தங்க நிறம் !

17. அணேச்சுப் பால் கறக்க—என் கண்ணே
அணேகயிறும் பொன்ஞலே

பிடிச்சுப் பால் கறக்க—என் கண்ணே
பிடி கயிறும் பொன்ஞலே !

18. உக்காந்து பால் கறக்க—என் கண்ணே
முக்காலி பொன்ஞலே !

குடிக்கக் கிணறு வெட்டி—என் கண்ணே
கொப்பளிக்கத் தெப்பம் வெட்டி

19. உக்காந்து மோர்கடைய—என் கண்ணே
முக்காலி பொன்ஞலே

சாய்ந்திருந்து மோர்கடைய—என் கண்ணே
சாய் பலகை பொன்ஞலே

மலே மேலே பசுவாம்
மருடமணி ஓசையிட

பொழுதிறங்க வாபசுவே-என் கண்ணே
பொன்னுமகன் பால் குடிக்க !

அந்திபட வா பசுவே-என் கண்ணே
அருமை மகன் பால் குடிக்க !

(ஆராரோ

காதல் தித்திக்கும் அத்தான்..

காதலுக்கு கண்ணில்லே என்பர்: ஒரு பெண்ணுக்குத் தனது அத்தை மகன் மேல் அளவு கடந்த பிரியம். அவள் அதை நயமாக வெளியிடுகிருள் :

1. செடி யோரம் கிணறு வெட்டி
செவலேக் காளே ரெண்டும் பூட்டி
அத்தை மகன் இறைக்கும் தண்ணி
அத்தனேயும் சக்கரையே !

2. மலே யோரங் கிணறு வெட்டி
மயிலேக் காளே ரெண்டும் பூட்டி
அத்தை மகன் இறைக்கும் தண்ணி
அத்தனேயும் சக்கரையே !

3. சாலேயிலே கிணறு வெட்டி
சாய்ந்த பக்கம் பூட்டிறக்கி
அத்தை மகன் இறைக்கும் தண்ணி
அத்தனேயும் சக்கரையே !

காதலனும் காதலியும் யாரும் அறியாமல் இரவுக் இரவே தனி வழி நடக்கத் தீர்மானிக்கிருர்கள். வழியி லுள்ள சிரமங்களே காதலன் எடுத்துரைக்கிருன். அத் துடன் வழியில் நடந்தவற்றையும் பாட்டு வர்ணிக்கிறது !

ஆண் : ஈட்டி இடைஞ்சலிலே
இடி விழுந்த கானலிலே

பாறை இடைஞ்சலிலே
பயமு மெத்த ஆகுமடி !

பெண் : இருட்டை இருட்டடிக்க
இந்திரனே பேயடிக்க
சாம வழி நடக்கச்
சம்ம தமே எந்தனுக்கு !

ஆண் : கையோடு கை கோர்த்துக்
கானல் வழி நடக்கையிலே
மெய் சோர்ந்து விழுந்த தென்ன
மென் குயிலே கண்ணுட்டி !

பெண் : கையோடு கை கோத்துக்
கானல் வழி நடக்கையிலே
கண்டேன் உன தழகை
கட்டழகா ! சோர்ந்து விட்டேன் !

உயிர்ப்பிச்சை அளிக்கும் உழவுத்தொழில்

ஏழைகளுக்குக் கடவுள் சோருகவும், ரொட்டியாகவுந் தான் தரிசனம் கொடுக்கிறர். இவற்றையுண்டுபண்ணும் தொழிலாளிகள் பண்பிலே தெய்வமாய், பார்வையிலே பாட்டாளிகளாய் இருக்கின்றனர்.

" உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை " அதுவே எல்லாத் தொழில்களுக்கும் மேலானது ; மூலமானது. உழவனின் உழவு கோலே தார்வேந்தனின் செங்கோலை நடத்துங்கோல். விவசாயம் செவ்வனே நடைப்பெற்ருல் நாட்டில் எவ்விதக் குறைவுமிராது. பருவமழை காலங்களில் நடக்கும் நாற்றறிப்பு நடவு, களையெடுத்தல், கதிரறுத்தல், கதிர் சுமத்தல், கதிரடித்தல் முதலிய வேலைகளைச் செய்யும்பொழுது தொழிலாளர்கள் பாடிக் கொண்டே வேலையில் ஈடுபடுவார்கள். பாட்டு வேலையிலுள்ள சிரமத்தை மாற்றும் ; வேலையின் வேகத்தை அதிகரிக்கும், மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

நடவு

நன்செய் நிலத்தை உழுது தொளிக்கலக்கிய பின், பரம் படித்துக் குழை மிதிப்பர். தொளி அமுகிச் சேறும் சகதியுமாக இருக்கும். நாற்றங்காலிலிருந்து நாற்றை வயலுக்குக் கொண்டு வந்து " விளம்பி " விடுவார்கள்.

" சேருடு கோல மொடு வீறு பெறத் தோன்றிச்
செங்கயல் நெடுங்கண் சின்மொழிக் கடைசியர்.."

மங்கலமாகக் குலவையிட்டுக் கொண்டு சேற்றில் இறங்கி, நாற்று முடியை இடக்கையில் வைத்துக்கொண்டு, ஒவ்வொரு நாற்ருக வலக்கையில் எடுத்துச் சேற்றில் ஊன்றுவர். அப்பொழுது பாட்டு ஆரம்பமாகும்.

1. சம்பா விதை போட்டு
சரியான நாத்து விட்டு
பம்பாயி சீலைக்காரி
பக்குவமா நட்டு வாடி

2. மண்வெட்டி தோளிலிட்டு
மடைதிறக்கப் போறவரே
மடையைத் திறந்துவிடு
மங்கையர்கள் நாத்து நட !

பயிர் வளர்கிறது. அத்துடன் களையும் வளர்கிறது. ஆண்களும் பெண்களும் களைகளைக் களைந்தெறியும் வேலையில் ஈடுபடுவர். வேலை பாட்டுடன் நடக்கிறது.

1. கானக் கரிசலிலே
களை யெடுக்கும் பெண் மயிலே
நீலக் கருங் குயிலே
நிக்கட்டுமா போகட்டுமா !

2. ஒருநாள் ஒருபொழுது
உங்க முகம் பாராமே
ஓடைக்கரை மண்ணெடுத்து
உருவாரம் செஞ்சு பார்த்தேன்

3. படுத்தாப் பல நினைவு
பாய் நிறையுங் கண்ணீரு
உறக்கச் சடவிலே நான்
உலுப்பிவிட்டேன் கண்ணீரை !

4. ஈனுத நாருரிச்சி
மலராத பூ முடிஞ்சு
செப்பிலே அடைச்ச பூவை
சிந்திட்டேயே வீதியிலே !

5. பாலு வேண்டாம் தயிரு வேண்டாம்
பழனிச் சம்பா நெல்லு வேண்டாம்
எருமைத் தயிரு வேண்டாம்
ஏத்திவிடு கப்பலிலே !

6. ரெங்கூனுக்கே போறேனின்னு
தங்குமிடம் சொல்லிராதே !
தங்கம் படும் பாதரவை
தந்தியிலே சொல்லியிரு !

கதிரறுப்புப் பாட்டுக்கள்

கதிரறுப்பு சுறுசுறுப்பான வேலை. இதில் பல ஆண்களும் பெண்களும் ஈடுபடுபவர். வரிசையாக வயலில் இறங்கி நிரை நிரையாக நின்று கதிரை அரிவாளால் கோதிச் சரக் சரக்கென்று அறுப்பர் ; அரிவாளில் கட்டியிருக்கும் சலங்கை மணி சல சலக்கும் ; நிமிர்ந்து கதிரை வீசிப் பின்புறமாகச் சல் சல்லென்று போடுவர். வேலைக்கேற்ற மெட்டில் பாட்டுப் பாடுவர். வேலையில் அத்தனை கலை யழகிருக்கும்.

1. கோடைக் (காலக்) கதிரறுப்பாம்
கொடிக்காலோரம் சேர்த்தறுப்பாம்
நாளை (நல்ல) கதிரறுப்பாம்
நானும் வரக் கூடாதம்மா !

2. கண்ணாடி (நல்ல) வளைவி போட்டு
கதிரறுக்கும் பெண் மயிலே
கண்ணாடி மின்னுதடி
கதிரறுப்புப் பிந்துதடி !

3. வெள்ளி (நல்ல) பிடியறுவா
விடலைப் புள்ளை கையறுவா
சொல்லி (நல்ல) அடிச்சறுவா
சுழட்டுதடி நெற்கதிரை !

4. இரும்பிலே அடிச்சருவா
இருபுறமும் தந்தப்பிடி
கதிரறுக்கும் போதினிலே
கண்டவங்க மயங்கிடுவார் !

5. கதிரறுத்துக் கிறுகிறுத்து
கண்ணிரெண்டும் சோரப்போட்டு
சின்னக் கட்டுக் கட்டச் சொல்லி
சிமிட்டுராளாம் மேமுழியை !

6. நெல்லு (நல்ல) கதிரறுத்து
நேரம் பார்த்துக் கட்டுக் கட்டி
தூக்கி விடு கொத்தனாரே
தூரந் தொலை போறகட்டு !

7. நெல்லு (நல்ல) கதிரறுத்து
நெளி நெளியாக் கட்டுக் கட்டி
கட்டுக் கொண்டு போகையிலே
கண் சிமிட்டுராளாம் அத்தை மகள் !

8. கதிர் எடுத்து அடிக்கையிலே
கைவளையல் கலகலங்க
மரக்கா எடுக்கையிலே
மன்னவரும் மலைச்சிட்டாராம் !

9. எறினாராம் வண்டியிலே
இறங்கினாராம் சந்தையிலே
கைநிறையப் பணமும் வாங்கி
கால்நடையா வந்திட்டாராம் !

ஏற்றம்

"ஏற்றப்பாட்டிற்கு எதிர்ப்பாட்டில்லை" என்பர். பாட்டில் இசை நயமிராது, ஆனால் சொல் வளமும் கற்பனையும் நிறைந்திருக்கும். கல்லாத மனிதர்கள் பாடும் இப்பாடல்களைப்போல் கற்றறிந்த கவிஞர்கள் கூட பாடுவது அருமையாகும். "மூங்கில் இலைமேலே" என்ற ஏற்றப்பாட்டின் அடி, கம்பனைத் திகைக்க வைத்து விட்டதாம் ! திகைப்பிலேயே இரவு கழிந்தது. காலையில் ஏற்றக்காரன் .

மூங்கில் இலைமேலே
தூங்கும் பனிநீரே
தூங்கும் பனிநீரை
வாங்கும் கதிரோனே !

என்றானாம். கம்பன் ஆச்சரியத்தில் ஆழ்ந்து போய் விட்டார் என்று கர்ண பரம்பரைச் செய்தி யொன்றுண்டு. கீழ் வரும் ஏற்றப் பாடலில் கவி நயமும், கற்பனையும் நிறைந்திருப்பதைக் காணலாம்.

ஈச்ச மணல் ஓடை !
இருபுறமும் சம்போடை !
தாழை மணல் ஓடை !
தனிப்புறம் சம்போடை !
சம்போடைக் காட்டில்
சமத்தி கொலுவிருக்க !
ஈப்புகுந்தால் இறகொடியும்
இண்டைப் பிணங்காடு !
கொசுப் புகுந்தால் இறகொடியும்
கொங்கர் இளங்காடு !
பனிப்பெய்தால் நெல் விளையும்
பாரப் பிணக்காடு !
கரடி அடர்ந்த வனம்
காட்டானை தூங்குவனம் !
சிறுத்தை அடர்ந்தவனம் !
சிறுபுலிகள் தூங்கும் வனம் !
ஓடி நிலம் பாய
ஒருபதியாலொண்ணு !

லாவணிப் பாட்டு ; மதன் தகனம்—ரதி புலம்பல்

மையினால் இட்ட பொட்டு
நெய்யா யுருகவில்லை
பந்தப் பிரிக்கவில்லை !
வந்தசனம் போகவில்லை !
பலகாரம் சுட்ட சட்டி
பாதி மணம் போகவில்லை !
இட்டலி சுட்ட சட்டி
எடுத்துக் கவுத்தவில்லை !
கோலம் அழியவில்லை !
கொட்டுக்காரன் போகவில்லை

தாக்கும் துயர் இனியபாட்டாக..

வாழ்க்கையில் எத்தனையோ சோதனைகள், இடைஞ்சல்கள் ஏமாற்றங்கள்-கிராமவாசிகள் வாழ்க்கையில், விசேடமாக உழவன் வீட்டில் சோதனைகள் பல : இந்த முடிவில்லாத துன்பங்களை நயமாக்கி இனிய பண்ணில் தென்பாங்கு அல்லது தேன்பாகு ஆக நாட்டுப்புற மக்கள் வெளியிடுகின்றனர். அக்கவியை தெம்மாங்கு என்று சிலர் கூறுவர். துன்பங்கள் சுவையுள்ள கவிதைகளைக் கொண்டு வருமானால் அவற்றை விலை கொடுத்துக்கூட வாங்கலாமல்லவா ?

மனைவி படும் துயரம்..

கரையிலோர் ஆலமரம்
கவலையில்லை யின்னிருந்தேன்
கரை யிடிஞ்சு மரஞ் சாய
கவலை மெத்தத் தோணுதிப்போ !

சில் லென்று பூத்த
சிறு நெருஞ்சிக் காட்டுடே
நில்லென்று சொல்லி
நிலை நிறுத்திப் போனீரோ !

ஆற்றங் கரை யோரம்
அன்னத்தை மேய விட்டேன்
அன்ன மென்றும் பாராமல்
அம்பு கொண்டு எய்தார்கள் !

குளத்தங் கரை யோரம்
குயிலை நான் மேய விட்டேன்
குயிலின்றும் பாராமல்
குண்டு கொண்டு எய்தார்கள் !

தலையை வகுந்து
தாழம் பூச் சூடி
தலையிலே உள்ளெழுத்தை
தாயார் அறியவில்லை !

உச்சி வகுந்து
பிச்சி பூச்சூடி
உச்சியிலே உள்ளெழுத்தை
உள்ளவர்கள் அறியலையே !

அழகு விழாக்கள் :

கிராமச் சூழ்நிலை காரணமாகவும், சந்தர்ப்பங்கள் காரணமாகவும், கிராமங்களில் பல விழாக்களை கொண்டாடும் வாய்ப்பு ஏற்படுகிறது. அவற்றை மக்கள் இறை வழிபாடாகக் கொள்ளுகின்றனர். அறுவடைக்குப் பின் அடுத்த பயிரிடும் பருவம் ஆரம்பமாகும் வரை கிராமத்தில் விழாக்கள் கொண்டாடுவார்கள். இயற்கையின் மூலம் தாம் பெற்ற நன்மைகள் அத்தனைக்கும் நன்றி தெரிவிக்கும் முறையில் அவ்விழாக்கள் அமையும்.

முடிவுரை

நாட்டு பாடல்கள்—இல்லை, காட்டுப் பாடல்கள்—ஏட்டில் எழுதாக் கவிதைகள்—கடல் போன்று விரிந்தவை என்ற உண்மையை வாசகர்கள் உணர்வார்கள்.

தாலாட்டுப் பாட்டுகள், விளையாட்டுப் பாடல்கள், தொழில் பாட்டுகள், கலியாட்டப் பாட்டுகள், கதைப் பாட்டுகள், ஆதிவாசிகளின் பாடல்கள் போன்ற ஒவ்வொரு துறையிலும் ஆராய்ச்சிக்கு பரந்த இடமுள்ளது. ஒவ்வொன்றிலும் தனித்தனியே ஒரு நூலாக வெளிவந்து தமிழன்னையை அலங்கரிக்கும் நன்னாள் புலர வேண்டும்.

மங்களம்

(கதைப் பாட்டின் முடிவில் பாடுவது)

கதையும் முடிஞ்சிருச்சு !
காரணமும் தீர்ந்திருச்சு
நாடு நல்ல செழிக்கணுமே
நல்ல மழை பெய்யணுமே !
தேசம் செழிக்கணுமே !
செல்ல மழை பெய்யணுமே !
ஊரு செழிக்கணுமே !
உத்த மழை பெய்யணுமே !
பூமி செழிக்கணுமே !
பொன்னு மழை பெய்யணுமே !—நான்
படித்த கதையிலேயே
பழுதே இருந்திட்டாலும்
கொண்டு மனம் பொறுத்து—உங்க
குழந்தை போல காக்கவேணும் !

பாட்டைக் கேட்டு இன்புறும் ஆற்றல் பசுவுக்கும் பாம்புக்கும் குழந்தைக்கும் உண்டென்று சொல்வார்கள்.

“ காட்டில் விலங்கறியும், கைக்குழந்தை தானறியும்
பாட்டின் சுவையதனைப் பாம்பறியும் என்றுரைப்பர்”

என்பது பாரதியார் பாட்டு. பாட்டோடு கவிதைச் சுவையை அறியும் ஆற்றலும் மனிதனுக்கு இருக்கிறது. இந்த நாட்டில் கவிதையை எழுதுவார் இல்லை : பாடுவார் இருந்தனர். அதனால் நாவலர் என்று அவர்களைக் கூறினார்கள். கவிதையை வாயாரப்பாடியும் கேட்டும் இன்புறும் வழக்கத்தை நெடுங்காலமாக மனித சமுதாயத்தினிடம் காண்கிறோம். பிறந்த குழந்தைக்கு தாலாட்டிசைத்து, வளர்த்து, பாட்டிசைத்துச் சோறூட்டி, விளையாட்டுக் காட்டி, இசைபாடல் பாடி, மணம் செய்து, இறந்தால் ஒப்பாரி பாடி உணர்ச்சியைக் காட்டும் தாய்மார் நிறைந்தது தமிழ் நாடு. பாட்டால் வளரும் வாழ்க்கை இதுவென்றே சொல்லிவிடலாம்.

(ஆசிரியரின் “எட்டில் எழுதாக் கவிதைகள்” என்ற புத்தகத்திலிருந்து தொகுத்தது).

"நம்பினர் கெடுவதில்லை"

[ஸ்ரீ. கோ. வேங்கடாசலபதி, *கிராம அபிவிருத்திக் கமிஷனர்.*]

[''ராட்டை அதனளவில பிரமாதமானது அல்ல என்றே இருந்தாலும் அதற்கு இருப்பதாக நான் கூறும் பெருமையெல்லாம் என் கற்பனையில் தான் இருக்கின்றன என்று இருப்பினும், அப்பொழுதும் எனக்காவது அது என் காமதேனுவாக இருந்துவரும் என்றுகிறது. ராட்டையில் ஒவ்வொரு முறையும் நூலே இழுக்கும்போதெல்லாம் இந்தியாவின் ஏழைகளேயே நான் எண்ணுகிறேன்' ஏழைகளிடத்தில் கொள்ளும் புனிதமான, தீவிரமான அன்பு எங்கே இருக்கிறதோ, அங்கே கடவுளும் இருக்கிருர் என்று நான் நம்புவதால், ராட்டையில் நான் நூற்கும் ஒவ்வோர் இழை நூலிலும கடவுளே நான் காண்கிறேன்." மகாத்மாவின் இந்த வேத வாக்கினே மிக அழகாக விளக்கிக் கூறியுள்ளார் கிராம அபிவிருத்திக் கமிஷனர் அவர்கள் கீழ்க்கண்ட பேச்சில்.............. —*ஆசிரியர்.*]

கிராமங்களுடைய அபிவிருத்திதான் இந்தியாவின் அபிவிருத்தி என்ற உண்மையை நன்குணர்ந்த இந்திய சர்க்காரும், ராஜ்ய சர்க்கார்களும் கிராமங்களின் அபிவிருத்திக்கு முதலிடம் கொடுத்திருக்கிருர்கள். கிராமங்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களே வகுத்து அமுலாக்குவதற்காகக் கிராமப் பஞ்சாயத்துக்களேயும், வட்டாரப் பஞ்சாயத்துக் கவுன்சில்களேயும் தோற்றுவித்து அவைகளுக்கு நிதி வசதியும், நிர்வாகப் பொறுப்பும் சட்ட ரீதியாகக் கொடுத்திருக்கிருர்கள்.

கிராம மக்களும் தங்களுடைய முன்னேற்றத்திற்கான திட்டங்களேப் பற்றிக் கலந்து பேசி என்னென்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி ஆலோசித்து வருகிருர்கள்.

நேரில்கண்ட அனுபவம்

பஞ்சாயத்து அலுவல்கள் எப்படி நடந்து வருகின்றன என்பதை நேரில் கண்டு அறிந்துகொள்ளுவதற்காகச் சென்ற வாரம் கோயம்புத்தூர் ஜில்லா சென்றிருந்தேன். கிராம முன்னேற்றத்திற்காக வேலே செய்துவரும் ஊழியர்களேயும், கிராமப் பஞ்சாயத்துத் தலேவர்களேயும், சந்தித்து, அவர்கள் செய்யவிருக்கும் வேலே விவரங்களேப் பற்றி அவர்களிடம் சாவகாசமாகப் பேசும் அரிய வாய்ப்பு கிடைத்தது. பஞ்சாயத்து மூலம் விவசாய அபிவிருத்திக்காக அவர்கள் தயாரித்துள்ள திட்டங்களேப் பற்றி விளக்கிருர்கள். கிராமத்தில் பயிர் செய்யத் தகுந்த நிலம் எத்தனே எக்கர், இப்பொழுதுள்ள பாசன வசதி எத்தனே எக்கருக்குப் போதுமானதாயிருக்கிறது, குளம் குட்டைகளேச் சீர்படுத்துவதின் மூலம் பாசன வசதிகளே எவ்வளவு அதிகம் ஆக்கலாம், கிராமங்களில் உள்ள நிலத்திற்கு வேண்டிய உரம் எவ்வளவு இது சமயம் கிடைத்துவருகிறது, விவசாய நிபுணர்கள் சொல்லும் அளவு உரம் வைக்க வேண்டுமானுல் இன்னும் எத்தனே எக்கருக்கு எத்தனே வண்டி உரம் அதிகமாக வேண்டியதிருக்கும்' இந்த உரங்களேச் செடி, கொடி, தழைகளின் மூலம் எவ்வளவு பெற இயலும், தொழு உரம் ஆடு மாடுகளின் சாணத்தின் மூலம் எத்தனே வண்டிகள் கிடைக்கும், உரக் குழியில் வெட்டுவதின் மூலம் கம்போஸ்ட் செய்வதால் உரத்தின் தரமும் அளவும் எவ்வளவு அதிகமாக கிடைக்கும், மேலும், நல்ல பொறுக்கு விதைகள் கிராமத்திற்குப் போதுமான அளவு கிடைப்பதற்கு என்ன செய்யலாம், கிராம விதைப் பண்ணேகளே யாரைக்கொண்டு எப்படி ஆரம்பிப்பது, விவசாய இலாகா சொல்லிவரும் புது முறை விவசாயக் கருவிகளே அதிகமாக கிராமங்களுக்குக் கிடைப்பதற்கு என்ன செய்யலாம்? கிராம விதைப் பண்ணேகளே யாரைக் கொண்டு எப்படி ஆரம்பிப்பது? அதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்பது போன்ற விவசாய அபிவிருத்திக்கான விஷயங்களே எவ்வளவு நுணுக்கமாக ஆராய்ந்து வருகிருர்கள் என்பதை அந்தக் கிராமத் தலேவர்கள் மூலம் கேட்டபோது, நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். "நல்ல காலம் வருகுது" என்று பாரதியாரின் வாக்கு என் நினேவுக்கு வந்தது. அடுத்தபடியாக, சிறு தொழில்கள் மூலம் கிராமத்தின் பொருளாதாரத்தை எப்படி உயர்த்துவது என்பது பற்றி அவர்கள் கூடி ஆலோசித்த விஷயங்கள் உண்மையிலேயே என்னேத் திகைக்க வைத்தன. அப்படி திகைக்க வைத்த விஷயங்கள்தான் என்ன என்பதைத் தெளிவாகச் சொல்லிவிடுங்களேன் என்பீர்களோ? அந்தக் கிராமத்துத் தலேவர் சொன்னதைவிட என்னுல் தெளிவாகச் சொல்ல முடியாததாகையால் அவர் பேசியதை அப்படியே சொல்லுவது நல்லதல்லவா! அவர் சொன்னுர் :—

"எங்களுடைய கிராமத்தின் பொருளாதார நிலேயை மேம்படுத்துவதற்காக சில புள்ளி விவரங்களேச் சேகரித்தோம்.

எங்கள் ஊரில் 212 வீடுகள். ஜனத் தொகை 961. மொத்த நிலம் 592 ஏக்கர்களில் 3,000 மூட்டை நெல் உற்பத்தியாகிறது. 400 மூட்டை கேழ்வரகு, 2,500 மூட்டை மணிலாக்கொட்டை விளைகிறது. இதைப் பணமாக அளவிட்டுச் சொல்லவேண்டுமென்றால், ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபாய் ஆகிறது. வருஷத்தில் 8 மாதங்கள் நாங்கள் கஷ்டப்பட்டு உழுது, விதைத்து உற்பத்தி செய்கிறோம். இதைத் தவிர வேறு வருமானம் இல்லை. ஊரில் ஆகும் செலவினங்களையும் கணக்கிட்டோம். உணவு, துணிமணிகள், வெற்றிலை பாக்கு, பொடி, புகையிலை, பஸ் சார்ஜ், டூரிங் சினிமாக்காரர்களுக்குக் கொடுப்பது, பிள்ளைகளுக்குப் புத்தகம், சிலேட்டு, சர்க்காருக்குக் கொடுக்கும் நிலவரி இத்துடன் குடும்பங்களில் நடக்கும் நல்லது பொல்லாதது என்று ஊருக்காகும் அத்தனைச் செலவுகளும், இந்த ஊர் வருமானமாகிய ஒரு லட்சத்து பத்தாயிரத்திலிருந்துதான் கொடுக்க வேண்டியிருக்கிறது. மேலும் என்னென்ன வகைக்கு எவ்வளவு பணம் செலவாகிறது என்ற விபரமும் சேகரித்தோம். உணவுக்கு அடுத்தபடியாக செலவு ஆனது துணிமணிகளுக்குத்தான். குடும்பம் ஒன்றுக்கு சராசரி வருஷத்திற்கு 100 ரூபாய் செலவு ஆகிறது. எங்கள் ஊரிலுள்ள 212 குடும்பங்களுக்கும் மொத்தம் துணி மணிகளுக்காக மட்டும் சுமார் ரூ. 21,000 செலவு ஆகிறது. செலவு வகைகளில் உணவுக்கு அடுத்தபடியாக அதிகம் செலவு ஆவது இந்தத் துணிமணி செலவு என்பது தெரிந்தது. இந்தச் செலவை செய்யாமலும் இருக்க முடியாது. இதை எப்படிச் சமாளிப்பது என்பதைப் பற்றி யோசித்தோம். இந்தச் சமயத்தில் அவனுசிப் பக்கமிருந்து எங்கள் ஊருக்கு வந்திருந்த அந்த வாலிபர் சொன்னது எங்களுக்குப் புதிய ஊக்கமும், உற்சாகமும் தருவதாக இருந்தது. அவர் சொன்னதாவது :—"எங்கள் கிராமத்தில் 75 குடும்பங்கள் கை ராட்டையில் நூற்கிறார்கள். நூற்புக் கூலி மூலம் சென்ற வருஷம் எங்கள் கிராமத்தில் சுமார் ரூ. 7,500 வருமானம் வந்திருக்கிறது. பணம் வேண்டுமானாலும் கிடைக்கிறது. இந்தத் தொகைக்குத் துணியாக வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளலாம்." இந்த நண்பர் சொன்னதிலிருந்து ராட்டை மூலம் குடும்பத்திற்குக் குறைந்தது ரூ. 100 கிடைக்கும் என்று தெரிந்தவுடன் எங்கள் ஊரிலும் உடனடியாக 50 ராட்டைகளுக்கு ஏற்பாடு செய்யத் தீர்மானித்தோம். மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் எங்கள் ஊரிலேயே எங்களுக்கு வேண்டிய துணிகளை, அதாவது சுமார் ரூ. 25,000 பெறுமான துணிகளைத் தயார் செய்துகொள்ள முடியும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்." பழைய கைராட்டையைவிட இப்போது புதிதாக வந்துள்ள அம்பர் ராட்டையின் மூலம் எவ்வளவு அதிகமாகக் குறைந்த காலத்தில் அதிகத் துணி உற்பத்தி பண்ணுவதற்கு அந்த அம்பர் ராட்டை ஏதுவாயிருக்கும் என்பதைப் பற்றியும் சர்க்கார் இந்தத் திட்டத்திற்கு நிதி உதவி செய்கின்ற விவரங்கள் பற்றியும் அவர்களுக்கு எடுத்துரைத்தேன். அந்த இடத்திலேயே அவர் போட்டுப் பார்த்த கணக்குப்படி அம்பர் ராட்டையாக இருந்தால் அந்த ஊரில் உள்ள வேலையில்லாத நபர்களைக் கொண்டு 2 மாதங்களில் சுமார் ரூ. 50,000 பெறுமான துணி உற்பத்தி செய்ய முடியும் என்பதை அவர்களே கணக்குப் போட்டுச் சொன்னார்கள். அதாவது அந்தக் கிராமத்தார் அந்த ஒரு கிராமத்திற்கு மட்டுமல்ல, அதைப் போல இன்னொரு கிராமத்திற்கும் தேவையான துணியை உற்பத்தி செய்ய முடியும் என்று தெரிந்தது.

விவசாய வேலை இல்லாத காலங்களில் நூற்றல் தொழில் கிராமங்கள் தோறும் பரவுமாகில் கிராமங்களுக்கு வேண்டிய துணிமணிகள் மட்டுமல்ல, நகரங்களுக்கு வேண்டிய அழகிய ஆடைகளையும் கிராம வாசிகளால் தயார் செய்ய முடியும் என்ற உண்மையைத் தெரிந்துகொள்வதற்கு மேதாவிலாசம் எதுவும் வேண்டியதில்லை.

கிராமங்களுடைய வரவு செலவு புள்ளி விவரங்கள், சமுதாய நல அபிவிருத்தி வேலைகள் நடைபெறும் வட்டாரங்கள் சிலவற்றில் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆயிரம் பேர்கள்—(200 குடும்பங்கள்) உள்ள ஒரு ஊரில் குறைந்த பட்சம் துணிமணிகளுக்காக ரூ. 20,000 செலவு ஆகி வருகிறது என்றால் ரூ. 20,000 பெறுமான தானியங்கள் அந்தக் கிராமத்தை விட்டு வெளியே செல்கிறது என்று பொருள். இந்த ரூ. 20,000 பெறுமான துணிகளை ஒவ்வொரு கிராமத்திலும் உற்பத்தி செய்ய முடியும் என்பதைச் சமீபத்தில் கதர் இலாகா வெளியிட்டுள்ள ஒரு பிரசுரத்தில் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூர் ஜில்லாவில் உள்ள அவினாசி, வெள்ளக்கோயில், தாராபுரம், பல்லடம் முதலிய பிராந்தியங்களில் ரூ. 20,000 மட்டுமல்ல, ரூ. 30,000 ரூ. 40,000 பெறுமான துணிகளுக்கு வேண்டிய நூலை உற்பத்தி செய்து வருகிறார்கள். வேலையில்லாத காலங்களில் வேலை கொடுப்பதற்குக் கிராமத்தார்களுடைய உழைப்பு வீணாக வெளியே செல்லாமல் இருப்பதற்கு உள்ள ஒரு தொழில் கதர் என்பதை கிராம அபிவிருத்தி வேலைகளில் நிறைய அனுபவம் உள்ளவர்கள் சுலபமாகப் புரிந்துகொள்ளக் கூடிய ஒரு விஷயமே ஆகும். இது வரை நாம் போட்ட கணக்குப்படி பார்த்தால் கிராமங்களில் நபர் ஒன்றுக்கு ரூ. 20 பெறுமான துணி உபயோகிக்கிறார்கள். தமிழ் நாட்டில் 3 கோடி தமிழர்கள் இருக்கிறார்கள் என்றால் 60 கோடி ரூபாய் பெறுமான துணி வேண்டும். இந்த 60 கோடி ரூபாய் பெறுமான துணியை தமிழ்நாட்டில் உள்ள 15,000 பஞ்சாயத்துக்களின் மூலம் உற்பத்திசெய்ய முடியும் என்பதில் ஐயமில்லை. இன்று தமிழ் நாட்டில் சுமார் 3 கோடி ரூபாய் பெறுமான துணி உற்பத்தி ஆகிறது. இன்று சுமார் 3 லக்ஷம் நூற்போர்கள் கைராட்டையால் நூற்று 3 கோடி ரூபாய் பெறுமான துணியை உற்பத்தி செய்து வருகிறார்கள். தமிழ் நாட்டில் நடைபெறும் கதர் வேலையைப் பற்றித் தெரியாதவர்களுக்கு இது ஒரு புதுமையாகத் தோன்றலாம். நல்லவேளையாக இம்மாதம் 24-ம் தேதி முதல் சென்னையிலுள்ள தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் சென்னை

ராஜ்ய கதர் போர்டார் ஒரு பொருட்காட்சியை நடத்த போகிறார்கள். அந்தப் பொருட்காட்சியில் சிறப்பாக கிராமக் கைத்தொழில்கள் மூலம் கிராமத்தின் செல் வத்தை எப்படிப் பெருக்க முடியும் என்ற விவரங்களை நிதரிசனமாக எடுத்துக்காட்ட ஏற்பாடு செய்து வருகிறு கள். இந்தப் பொருட்காட்சியில் பருத்தி சாகுபடி செய்யும் கிராம விவசாயி கண்ணைப் பறிக்கும் அழகான, வித வித மான துணிகளை எப்படி உற்பத்தி செய்துகொள்ள முடியும் என்பதையும் நிரூபித்துக் காட்டப் போகிறார்கள். தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்த தேசத்தின் பல்வேறுபாகங் களில் நடைபெறும் இந்தக் கதர்த் தொழிலைப்பற்றிய விவ ரங்களை அங்கு எடுத்துக்காட்ட வெவ்வேறு ராஜ்யங்களில் கதர் உற்பத்தி செய்யும் ஸ்தாபனங்களையும் இந்த பொருட் காட்சியில் வந்து பங்கெடுத்துக்கொள்ள ஏற்பாடு செய் திருக்கிறார்கள்.

இப்பொருட்காட்சிக்கு காந்தியடிகளின் கொள்கைகளே அடிப்படையாக இருக்கும். பட்டினியினால் போராடிக் கொண்டிருக்கும் கிராமவாசிகள் இவ்வளவு ஆற்ற லுள்ளவர்கள் என்பதை உணர்த்துவதே இப்பொருட் காட்சியின் நோக்கமென்று தெரிகிறது. மேலும், கிராமங் களின் நிலைமைபற்றிய புது அறிவு புகட்டுவதும் இக் காட்சியின் நோக்கமாக இருக்கும். இது ஒரு ஆடம்பரக் காட்சியாயில்லாமல், ஒரு அற்புதக் காட்சியாய் விளங்கும். காந்தியடிகள் சேவாக்கிராமத்தில் குடியிருந்த குடிசை அப்படியே தத்ரூபமாக இப்பொருட்காட்சியில் இருக்கு மென்றும், அவருடைய வாழ்க்கை வரலாற்றை சித்தரித் துக்காட்டும் படக்காட்சி ஒன்றும் வைக்கப்பட்டிருக்கும் என்றும் தெரிகிறது.

அணுகுண்டு யுகத்தில் கதரால் ஆவது என்ன என்று சந்தேகிப்பவர்களுக்கு, அவர்கள் சந்தேகத்தைத் தெளி விக்கவும், நம்பிக்கையை ஊட்டவும், நம்பிக்கை உள்ளவர் களின் நம்பிக்கையை மேலும் வளர்த்து வலுப்பெறச் செய்வதாகவும் இப்பொருட்காட்சி அமையும் என்று தெரி கிறது.

கிராமங்கள்தான் இந்தியாவின் உயிர் என்று காந்தி யடிகள் அடிக்கடி சொல்வதுண்டு. காந்தியடிகள் தமது நிர்மாணத் திட்டங்களில் முக்கியமாகக் குறிப்பிட்டுள்ள இந்தக் கதர்த்திட்டம் ஒரு ஊரில் இல்லையென்றால் அந்த ஊரில் முன்னேற்றம் இல்லை என்று சொல்வது மிகை யாகாது.

ஊரை உயர்த்த உன்னதமான வழி

இன்று வேலையின்றிச் சோம்பிக் கிடக்கும் லட்சக்கணக் கான மக்களின் உழைப்பு சக்தி உருவெடுத்து ஊரை உயர்த்த வேண்டுமென்றால் அது கதரின் மூலமாகத்தான் இயலும் என்ற நம்பிக்கை காந்தியடிகளுக்கு இருந்து வந்தது.

காந்தியடிகள் ஒரு முறை " நான் செய்ததும், செய்யத் தவறியதுமான எத்தனையோ தவறுகளுக்காக பின்னால் வரும் சந்ததியாரின் சாபங்களுக்கு நான் ஆளாக வேண் டியவனாக இருக்கலாம். ஆனால் ராட்டை திரும்பவும் புத்துயிர் பெறவேண்டும் என்று நான் சொன்னதற்காக பிற்கால சந்ததியின் வாழ்த்து எனக்குக் கிடைக்கும் என்ற திட நம்பிக்கை எனக்கு உண்டு. எனக்கு உள்ளது எல்லாவற்றையும் அதற்கே பணயமாக வைத்திருக்கிறேன் ஏனெனில் ராட்டை சுற்றும்போது அதன் ஒவ்வொரு சுழற்சியிலும் சாந்தத்தையும், நல்லெண்ணத்தையும், அன்பையுமே அது நூற்கிறது. அதுவல்லாமல் ராட் டையை இழந்தது எவ்விதம் இந்தியாவின் அடிமைத் தனத்தில் முடிந்ததோ அதே போல ராட்டை மூலம் வலிய புத்துயிர் பெறுவது அதன் முழு விளைவு களின் காரணமாக இந்தியாவின் சுதந்திரமாகவே பொருள் படும். அறிவும் தேசாபிமானமுமுள்ள தன்னலமற்ற இந்தியர் பட்டாளமொன்று ஒரே மனத்தின ராய்க் கிராமங்களில் வேலை செய்து, ராட்டையின் உப தேசத்தைப் பரப்பி, இன்று ஒளியற்றிருக்கும் கிராம வாசிகளின் கண்களில் ஒளியையும், நம்பிக்கை ஒளிக் கதிரையும் உண்டாக்கினாலன்றி ராட்டைக்குப் புத்துயிர் அளித்துவிடுவது என்பது முடியாது. சரியான முறையில் கூட்டுறவும், முதியோர் கல்வியும் ஏற்படுவதற்கான மகத் தான முயற்சி இது. ராட்டை எவ்விதம் அமைதியான, ஆனால், நிச்சயமான ஜீவனளிக்கும் புரட்சியை உண் டாக்குகிறதோ அதேபோல இதுவும் அமைதியான, ஆனால் நிச்சயமான புரட்சியை உண்டாக்குகிறது. இந்தியா இன்னும் ராட்டையைப் பூரணமாகத் தனதாக்கிக்கொண்டு விடவில்லை. இதில் குற்றம் ராட்டையினுடையதல்ல. இந் தியாவும் உலகமும் காக்கப்படுவது ராட்டையில்தான் இருக்கிறது என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை. யந்திரத்திற்கு இந்தியா அடிமையாகிவிடுமானால், பிறகு உலகத்தைக் கடவுள்தான் காக்க வேண்டும் என்று சொல்லுவேன்."

"இந்தியா செய்யவேண்டிய மிகவும் பெருமை வாய்ந்த பணி ஒன்று இருக்கிறது. உலகில் நட்பையும் சமாதானத் தையும் உண்டாக்குவதுதான் அப்பணி. மகா நாடுகளைக் கூட்டுவதனால் மாத்திரம் சமாதானத்தை உண்டாக்கிவிட முடியாது. மகாநாடு கூட்டிப் பேசிக்கொண்டிருக்கும் போதே சமாதானம் சிதைக்கப்பட்டு வருவதை நாம் பார்த்துக்கொண்டுதான் வருகிறோம். இன்று இந்தியா வின் மீது மேற்கத்திய நாடுகளின் யந்திரப் படையெடுப்பு அதிகப் பலமாக இருந்து வருகிறது. அதை வெற்றி கரமாகச் சமாளித்துக் கொண்டு விட இந்தியாவினால் முடியு மானால், அதுவே ஒரு பெரிய அற்புதம் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் இன்றே அதற்குமாறாக உள்ள நிலையிலேயே எல்லாம் இருந்து வருவதாகத் தோன்றுகிறது என்பதையும் நாம் ஒப்புக்கொள்ளவே வேண்டும். கடவுளின் உயிர்ச் சக்தியில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நாம் அறிந்திருப்பதைவிட அதிகமாகவே அவர் நம் முன் இருக்கிறார். அந்த நம்பிகை எனக்கு இருக்கும் வரை நான் நம்பிக்கையை இழந்துவிடமாட்டேன்" என்று சொன்னார். அவர் உள்ளத்திலிருந்து எழுந்த இந்த வார்த்தைகளின் உண்மைப்பொருள் என்ன என்பதை கதர் வேலை நடைபெறும் கிராமங்களுக்குச் சென்று பார்ப்பவர்களுக்கு நன்கு விளங்கும். காந்தியடிகள் சொன்ன இந்த வார்த்தைகளை நாமும் நம்புவோமாக. "நம்பினோர் கெடுவதில்லை என்பது நான்கு மறை தீர்ப்பு."

(வானொலிப் பேச்சு— 19—12—1960.)

தொடக்கக் கல்வி—
பஞ்சாயத்து ஸ்தாபனங்களின் கடமைகள்

கல்வி பொதுச்—சுகாதாரத் துறை

(கல்வி)

[1960-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ம் தேதியுள்ள 2075-வது எண் அரசாங்க ஆணை]

தொடக்கக் கல்வி— பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றின் அலுவல்களும், கடமைகளும்—ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் 65 (ஈ) பிரிவின்படித் தொடக்கப் பள்ளிகளை ஏற்படுத்துவது, நிர்வகிப்பது, விஸ்தரிப்பது அல்லது அபிவிருத்தி செய்வது விஷயமாய் பஞ்சாயத்து யூனியன் தேவைகளை நிறைவேற்றுவதற்காகப் பஞ்சாயத்து யூனியன் மன்றம் தனக்குள்ள நிதி வசதிக்குள் நியாயமான ஏற்பாடு செய்ய வேண்டும். தொடக்கப் பள்ளிகள் விஷயமாய், தனியார் நிர்வாகங்களுக்கு மானியம் அளிப்பதும் இதில் அடங்கும். அச்சட்டத்தின் IV-வது அத்தியாயத்தில் மற்ற விஷயங்களுடன் கூட அடியிற்கண்டதற்காகவும் ஏற்பாடு செய்துள்ளது. பஞ்சாயத்து யூனியன் (கல்வி) நிதி ஒன்று ஏற்படுத்தப்படும். யூனியன் விதித்து வசூலிக்கிற உள்ளூர் வரி வருவாயினங்களும் அரசாங்கத்தார் குறிப்பாக அளிக்கிற மானியங்களும் இந்த நிதியின்கீழ் வரவு வைக்கப்படும். தொடக்கக்கல்வி விஷயமாகச் சட்டத்தின் கீழ்த் தனக்கு வகுத்துக்கொடுத்துள்ள அலுவல்களை நிறைவேற்றுவதற்குப் பஞ்சாயத்து யூனியன் இந்த நிதியைப் பயன் படுத்திக் கொள்ளும். பஞ்சாயத்து யூனியன்களில் முதல் பகுதி 1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதியன்று அமைக்கப்படும். 1961-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதிக்குள் இம் மாநிலம் முழுவதிலும் பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டுவிடும். எனவே தொடக்கக்கல்வி விஷயமாய்ப் பஞ்சாயத்து யூனியன்களுக்கும், பஞ்சாயத்துக்களும் உள்ள அலுவல்களையும், கடமைகளையும், விரிவாகக் குறிப்பிடுவதும் அந்த அலுவல்களையும், கடமைகளையும் நிறைவேற்றுவது பற்றிய விதிமுறைகளை வகுப்பதும் அவசியமாகும். இவ் விஷயத்தை அரசாங்கத்தார் கவனமுடன் ஆராய்ந்து சில கொள்கை முடிவுகளை எடுத்துள்ளனர். அவை இந்த ஆணையில் விவரிக்கப்பட்டுள்ளன.

2. இந்த முடிவுகளை விவரிப்பதற்கு முன், தல நிர்வாக சர்வ கட்சிச் சட்டப் பேரவைக் குழுவின் உள்ளூர் நிதித் துணைக் குழு சிபாரிசு செய்துள்ளதும், புதிய பஞ்சாயத்துச் சட்டத்தில் சட்ட பூர்வமான ஏற்பாடு செய்துள்ளதுமான நிதித் திட்டத்தில் அரசாங்கத்தார் ஏற்றுக் கொண்டுள்ள சில மாறுதல்களைக் குறிப்பிடுவது அவசியமாகும். உள்ளூர் நிதித் துணைக் குழுவின் அறிக்கை வெளியான பிறகு தொடக்கக் கல்விச் செலவு அதிகரித்துள்ளது. ஆசிரியர் ஊதியங்களை அடுத்தடுத்து அதிகரித்திருப்பதே இதற்குக் காரணமாகும். சம்பளக் கமிஷன் விரிவான அடிப்படையில் சம்பள வீதங்களை மாற்றியமைத்ததன் விளைவாக இவர்களுடைய ஊதியங்கள் அண்மையில் உயர்த்தப்பட்டன. இதைக் கருத்தில் கொண்டு இந்த அரசாங்கத்தார் அடியிற்கண்டவற்றைச் செய்ய 1960-ம் ஆண்டு ஆகஸ்டு மீ 16உ தேதியன்று கிராம அபிவிருத்தித் துறையில் பிறந்த 1664-ம் எண் அரசாங்க ஆணையின் மூலம் ஒப்புக் கொண்டுள்ளார்கள் : அவையாவன : (i) ஏற்கனவே உள்ள கல்வி மானியத்திற்கு மேல் பஞ்சாயத்து யூனியன்களுக்குத் துணைக் கல்வி மானியம் அளிப்பது ; (ii) உள்ளூர் நிதித் துணைக் குழுத் திட்டத்தின் கீழ் பஞ்சாயத்து யூனியன் செலவு மூன்று படிகளாக வகுக்கப்பட்டுள்ளன. இதில் இரண்டாவது படிக்கு அப்பாற்பட்டு சமூகக் கல்விக்காகவும், மத்திய உணவு அளிப்பதற்காகவும் செலவு செய்ய நிதி வசதி அளிப்பது. இவை இரண்டும் முக்கிய மாறுதல்களாகும். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் தொடக்கக் கல்வி பற்றிய தனது திட்டத்தைத் தயாரிக்கையில் இம்மாறுதலைக் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இதே ஆணையில் பஞ்சாயத்து அபிவிருத்திக்குரிய திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் ஒன்றையும் அரசாங்கத்தார் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இந்த வரவு செலவுத் திட்டம் வட்டார நிலைத் திட்டத்துக்குக் கிடைக்கிற நிதி வசதியின் மதிப்பீடாக மட்டுமல்லாமல் அரசாங்கத்தார் அளிக்கிற நிதி உதவியின் ஒருங்கிணைந்த அமைப்பாகவும் விளங்கும். பஞ்சாயத்து யூனியனுடைய பஞ்சாயத்து நிதிக்கும் கல்வி நிதிக்கும் வரவு வைக்கத் தக்க இனங்களை இத்திட்டம் விரிவாக எடுத்து கூறுகிறது. எனவே, இதன் அடிப்படையில் தான் தொடக்கக் கல்வித் திட்டத்தைப் பஞ்சாயத்து யூனியன்கள் நிறைவேற்றி வைக்கவேண்டும். பஞ்சாயத்து யூனியன்கள் (சில

விஷயங்களில் பஞ்சாயத்துக்களும் இந்த ஆணையிலும் இதன் இணைப்பிலும் வெளியிட்டுள்ள கொள்கை முடிவுகளையும் விதி முறைகளையும் இந்த வரவு செலவுத் திட்ட வரம்புக்குள்தான் நிறை வேற்றி வைக்க வேண்டும்.

3. கால அட்டவணை.—தொடக்கக் கல்வி விஷயமாய் எந்தக் கால அளவுக்குள் மாறுதலை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்பதே முதலில் செய்ய வேண்டிய முடிவாகும். 1961-ம் ஆண்டு அக்டோபர் மீ 2-ம் தேதியன்றுதான் பஞ்சாயத்து யூனியன்களின் கடைசித் தொகுதி அமைக்கப்படுமாதலால் இத் தேதிக்கு முன் இம் முடிவை நிறைவேற்ற முடியாது என்பது வெளிப்படை. இந்த விஷயத்தை அரசாங்கத்தார் ஆலோசனை செய்து பஞ்சாயத்து யூனியன்கள் இப்புதிய சட்டத்தில் தங்களுக்குக் கொடுத்துள்ள கடமைகளனைத்தையும் யூனியன் அமைக்கப்பட்ட தேதியிலிருந்தே மேற்கொள்ள வேண்டியதில்லையென்றும், சட்டத்தில் கூறியுள்ள அமைப்பை 1962–63-ம் நிதி ஆண்டு முதல் முழுவதுமாகச் செயலாற்ற முடியுமென்றும் முடிவு செய்துள்ளார்கள். மாற்ற இடைக்காலம் ஓரளவு இருக்க வேண்டுமெனவும் அரசாங்கத்தார் கருதுகிறார்கள். இந்த இடைக்கால அளவில் முன்னுல் மாவட்டக் கழகத் தொடக்கப் பள்ளிகள், பஞ்சாயத்துத் தொடக்கப் பள்ளிகள் ஆகியவற்றை மட்டுமே பஞ்சாயத்து யூனியன்கள் எடுத்துக் கொண்டு நிர்வகிக்கும். இந்த இடைக்கால அளவு என்பது முதல் தொகுதி பஞ்சாயத்து யூனியன் வட்டாரங்களுக்கு 1960–61 நிதி ஆண்டில் ஒரு பகுதியும், 1961–62, நிதி ஆண்டு முழுவதுமாக இருக்கும்; இரண்டாவது தொகுதிக்கு இக்கால அளவு 1961–62 நிதி ஆண்டு முழுவதும் பெரும்பாலும் இருக்கும். மூன்றாவது தொகுதிக்கு இக்கால அளவு இந்த ஆண்டில் கிட்டத்தட்ட செம்பாதியாக இருக்கும். இந்த இடைக்கால அளவில் நிதி உதவி பெற்று நடத்தப்படுகிற தொடக்கப் பள்ளிகளுக்கு அளிக்கிற மானியங்களை நிர்ணயிக்கும் பொறுப்பும், அந்தந்தப் பிரதேசத்திலுள்ள மத்திய உணவுக் குழுக்கள் அனைத்தும் செயல்படுவதை மேற்பார்வை செய்யும் பொறுப்பும், அக் குழுக்களுக்கு அளிக்கத்தக்க மானியங்களை நிர்ணயிக்கும் பொறுப்பும் கல்வித் துறையினரிடமே தொடர்ந்து இருந்து வரும். வெவ்வேறு துறைப் பள்ளிகளின் நிர்வாகப் பொறுப்பு அந்தந்த துறையினரிடமே நிலை பெற்றிருக்கும். ஆனுல் பஞ்சாயத்து யூனியனின் பிரதேசத்தில் தொடக்கக் கல்விக்குச் செய்கிற செலவு முழுவதும், பஞ்சாயத்து யூனியன் (கல்வி) நிதியில் பற்றுக எழுதப்பட வேண்டுமென புதிய பஞ்சாயத்துக்கள் சட்டத்தில் ஷரத்து கண்டிருக்கிறது. எனவே, நிதி உதவி பெற்று நடத்தப்படுகிற பள்ளிகளுக்கு ஆசிரிய மானியம், பராமரிப்பு மானியம், மற்ற மானியங்கள் ஆகியவற்றையும் மத்திய உணவுக் குழுக்களுக்கு அளிக்கப்படுகிற மானியங்களையும், பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் மூலமாக, அந்த யூனியனின் கல்வி நிதியிலிருந்து வழங்கவேண்டும். இது பற்றிய விரிவான விதி முறைகளை 1–வது இணைப்பில் காணலாம்.

4. அமைப்பு முறை.—தொடக்கக் கல்வி பற்றிய சகல அலுவல்களையும் பஞ்சாயத்து யூனியன் மேற்கொள்ளும்போது, தொடக்கக் கல்வி பற்றிய அமைப்பு முறை எப்படியிருக்க வேண்டுமென்பதை அரசாங்கத்தார் பரிசீலித்தார்கள். வேளாண்மை, பொதுப்பணி போன்ற மற்ற விஷயங்கள் குறித்து உரிய அரசாங்கத் துறைகளுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் பணி புரிய இப்போது இருந்து வருவதைப் போலவே இனியும் ஒவ்வொரு துறையிலும் வட்டாரத்திற்கு ஒவ்வோர் அதிகாரி இருந்து வருவார். ஆனுல், தொடக்கக் கல்வியைப் பொருத்தவரையில், அந்த வேலையை ஒரே அதிகாரி நிறைவேற்ற முடியாதென அரசாங்கத்தார் கருதுகிறார்கள். ஒன்றுக்கு மேற்பட்ட அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்ற நிலையை ஏற்றுக் கொண்டு பல விஷயங்களையும் கவனித்துப் பார்க்கும் போது கல்வித் துறையின் கீழ்ப் பணியாற்றுகிற அதிகாரி (கல்வி துணை இன்ஸ்பெக்டர்) ஒருவரும் பஞ்சாயத்து யூனியன் கீழ் பணியாற்றுகிற மற்றொரு அதிகாரியுமிருப்பது நலமாயிருக்கும். கல்வி அலுவல்களையும் நிதி நிர்வாக அலுவல்களையும் தனித் தனியே பிரித்து விட்டு, கல்வி அலுவல்களைத் துறை அதிகாரிக்கும் நிதி—நிர்வாக அலுவல்களைப் பஞ்சாயத்து யூனியன் அதிகாரிக்கும் பிரித்துக் கொடுப்பது நல்ல அடிப்படையாகும். துறை அதிகாரி பள்ளிக்கூடங்களைப் பார்வையிடும் வேலையையும் பொதுத் தேர்வுகள் பற்றிய பொறுப்பையும் ஏற்றுக் கொள்வார். பின் சொல்லிய அதிகாரி தொடக்கக் கல்வி நிர்வாகம் பற்றிய மற்ற அம்சங்களைக் கவனித்துக் கொள்வார். தொடக்கக் கல்வி பற்றிய அலுவல்களை மேற்கூறியவாறு கல்வித் துறைக்கும் பஞ்சாயத்துத் துறைக்கும் பிரித்துக் கொடுக்க வேண்டுமென அரசாங்கத்தார் கட்டளையிடுகிறார்கள். துணை இன்ஸ்பெக்டர் கல்வித் துறையில் பீல்ட் ஆபீசராக இருப்பார். பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்தவராய் கல்வி வளர்ச்சி அதிகாரி எனப் பதவிப் பெயர் கொண்ட அதிகாரி பஞ்சாயத்து யூனியனின் பீல்ட் ஆபீசராக இருப்பார். இந்த அலுவல் பிரிவினை 1962–63-ம் ஆண்டில் பூரணமாகச் செயல்படத் தொடங்கும். எனினும், மேலே 3-வது பாராவில் கூறியுள்ள மாற்றக் கால ஏற்பாடுகள் 1962 ஏப்ரல் வரை அமுலிலிருக்கும். எனவே, அக்கால அளவு வரையில் உதவி பெற்று நடத்தப்படுகிற பள்ளிகளுக்கும், மத்திய உணவு நிலையங்களுக்கும் மானியத்தை நிர்ணயிப்பதும் அவற்றை மேல் விசாரணை செய்வதும் கல்வி வளர்ச்சி அதிகாரியின் பொறுப்பாயிருக்காது. துறையினர் பள்ளிகளின் நிர்வாகத்தையும் பராமரிப்பையும் மாற்றும் பிரச்சினையை நாளாவட்டத்தில் மேற்கொண்டு அதை 1962 ஏப்ரலுக்கு முன் தீர்வு காணுவோம்.

5. கல்வி வளர்ச்சி அதிகாரியை நியமிப்பது.—ஒவ்வொரு அபிவிருத்தி வட்டாரத்திலும் சமூகக் கல்வி அமைப்பாளர்களாக, ஒரு ஆண், ஒரு பெண் ஆக இருவரை அமைத்துக் கொள்ள தற்பொழுது அனுமதியிருக்கிறது. சில வட்டாரங்களில் மட்டுமே சமூக நல அமைப்பாளராக மகளிர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். முதல் தொகுதி பஞ்சாயத்து யூனியன் வட்டாரங்களைப் பொறுத்தவரையில் சமூக நல ஆண் அமைப்பாளர் நியமிப்பதற்குக் கொடுத்துள்ள அனுமதியையே கல்வி வளர்ச்சி அதிகாரியை நியமிப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென அரசாங்கத்தார் கட்டளையிடுகிறார்கள். இந்த அதிகாரி இந்த ஆணையிலும் அதன் இணைப்பிலும் கண்டுள்ள அலுவல்களைக் கவனிப்பதுடன் சமூகக் கல்வி அமைப்பாளருக்கு வகுத்துள்ள வேலையையும் தற்பொழுதைக்குச் செய்து வருவார். இவ்வாறு அலுவல்களை இணைக்க முடியுமா அல்லது சமுதாய அபிவிருத்திப் பணியாளர் அமைப்புக்குள் தகுந்த விதத்தில் அலுவல்களை மாற்றியமைக்க முடியுமா என்பது குறித்து கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறையினர் தனியே ஆராய்வார்கள். இம் மாநிலத்தில் இப்போது பணியாற்றி வருகிற ஆண் அமைப்பாளர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கல்வி வளர்ச்சி அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுவர்கள். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிக்கப்படும். இவ்வாறு பயிற்சி அளிக்கும் வேலை மேற்கொள்ளப்பட்டு கல்வி —பொது சுகாதாரத் துறையின் விசேஷ அதிகாரி நடத்திய பயிற்சி வகுப்புக்கள் முடிவடைந்துள்ளன.

6. பள்ளி ஆலோசனைக் குழுக்கள்.—மேலே 4-வது பாராவில் கூறியுள்ள முறையில் பொறுப்பு பங்கிடப்பட்டுள்ளதால், தொடக்கக்கல்வி குறித்த சகல நடவடிக்கைகளையும் வட்டார நிலையில் ஒருங்கிணைப்பதற்கும் துறை அதிகாரியும், பஞ்சாயத்து யூனியன் அதிகாரியும் இணைந்து வேலை செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்வது அவசியமாகும். ஒவ்வொரு வட்டாரத்திலும் இதற்கெனத் தனிப்பட்ட முறையில் பள்ளி ஆலோசனைக் குழு ஒன்றை அமைக்கவேண்டுமென அரசாங்கத்தார் கட்டளையிடுகிறார்கள். பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் இக்குழுவின் தலைவராயிருப்பார். அந்த வட்டாரத்து அதிகார வரம்புள்ள பள்ளித் துணை இன்ஸ்பெக்டரும் பஞ்சாயத்து யூனியன் கல்வி வளர்ச்சி அதிகாரியும் இக் குழுவின் உறுப்பினர்களாயிருப்பார்கள். (இப்போது எந்த வட்டாரத்திலாவது ஒன்றுக்கு மேற்பட்ட பள்ளித் துணை இன்ஸ்பெக்டர் அதிகார வரம்பு கொண்டிருந்தால் ஒரு வட்டாரத்தில் பள்ளித் துணை இன்ஸ்பெக்டர் ஒருவரே அதிகார வரம்பு உள்ளவராயிருக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.) பஞ்சாயத்து யூனியன் அமைக்கப்பட்டவுடன் இக்குழுச் செயலாற்றத் தொடங்கும். மேலே 3-வது பாராவில் குறிப்பிட்டுள்ள மாற்ற இடைக்கால அளவு முடிவடைந்த பிறகும் கூட மேற்கொண்டு ஆணை பிறப்பிக்கும் வரையில் இக்குழு தொடர்ந்து செயலாற்றும். இக்குழு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையேனும்கூடவேண்டும். வட்டாரத்தில் தொடக்கக் கல்வி அபிவிருத்திக்காக மேற்கொண்டுள்ள சகல வேலைத் திட்டங்களையும் பொதுவாகவும், (i) மத்திய உணவுத் திட்டம் (ii) மாணாக்கர்கள் பள்ளிக்கு வந்து பயில்வதை கட்டாயப்படுத்தும் திட்டம் ஆகிய இரண்டையும் சிறப்பாகவும் பரிசீலனை செய்யவேண்டும் இக் குழு அந்த பரிசீலனையின் அடிப்படையில் பஞ்சாயத்து யூனியன் மன்றத்துக்கு ஆலோசனை கூற வேண்டும். தேவைப்படுகிற அறிக்கையை வட்டாரக் கல்வி அதிகாரிக்கு அனுப்பிவைக்கவேண்டும். இக் குழுவில் வேலைத் திட்டம் குறித்து அந்த ஆணையின் இரு இணைப்புகளிலும் பொருத்தமான இடங்களின் மேற்கொண்டும் விவரம் கொடுத்துள்ளது.

7. புதிய பஞ்சாயத்துச் சட்டத்தில் முக்கியமான நிதிக் கொள்கை ஒன்று இடம் பெற்றுள்ளது. தொடக்கக் கல்வி குறித்து ஏற்படும் அதிகச் செலவில் குறிப்பிட்ட பகுதியைச் சரிக்கட்டுவதற்காக அந்தந்தப் பிரதேசத்தில் வரி விதிக்கும் பொறுப்பு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் கொடுக்கப்பட்டிருப்பதே இப் புதுக் கொள்கையாகும். இது சம்பந்தமாக சட்டத்தில் உள்ள ஷரத்தை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு வட்டாரமும் ஓர் ஐந்தாண்டுத் திட்டம் தயாரிப்பதுடன் எல்லாப் பள்ளிகளுக்கும் [பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளும் உதவி பெற்று நடத்தப்படும் தனியார் பள்ளிகளும் உள்பட) வேண்டியிருக்கக்கூடிய புதிய ஆசிரியர்கள் எண்ணிக்கை, அவர்களுக்கு ஆகும் செலவை நிர்ணயிப்பது, அதற்கு "பிரதேச வரி சர்சார்ஜ்" மூலம் பெறவேண்டிய தொகையை நிர்ணயிப்பது, ஆகியவற்றையும் செய்ய வேண்டும். புதிய அமைப்பு பிரதேச "செஸ் சர்சார்ஜ்" விதிப்பதுடன் சேர்ந்தே அமுலுக்கு வரவேண்டும். இது 1962–63-ம் ஆண்டில் தான் அமுலுக்கு வர முடியும். எனவே, பஞ்சாயத்து யூனியன் தொடக்கக் கல்வி நிதிக்கு அளிக்கப்படத்தக்க அரசாங்க மானியங்கள், நிகர செலவு அடிப்படையில் (இந்த அடிப்படையில்தான் இப்பொழுது மாவட்டக் கழகங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது) மொத்த தொகையாக அளிக்கப்பட வேண்டும். இந்த அடிப்படை முதல் தொகுதி வட்டாரங்களுக்கு நடைமுறை ஆண்டில் ஒரு பகுதியிலும் எல்லா வட்டாரங்களுக்கும் 1961–62-ம் ஆண்டிலும் பயன்படும். நிதி மானியம் குறித்து நிலையான முறை எல்லா வட்டாரங்களிலும் 1962–63 முதல் தான் ஒரே தன்மையில் அமுலுக்கு வரும். புதிய முறையை 1962–63 முதல் அமுலுக்குக் கொண்டு வருவதை எளிதாக்குவதற்காக, 1961–62-ல் அளிக்கத்தக்க

நிகர மானியம் (கணக்களவில்) " நிலவரி ஒப்படை பிர தேசக் கல்வி மானியம், துணைக் கல்வி மானியம் " என்ற சிறு தலைப்புகளில் பிரிவினை செய்யப்பட வேண்டும். பற்ருக் குறை மானிய முறையை இடைக்கால ஏற்பாடாக மேற்கொள்வதற்கும் இந்த மானியத்தைக் கணக்களவில் எவ்வாறு பங்கிடுவது என்பதற்கும் கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறையில் தனியே ஆணை பிறப்பிக்கப் படும். ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 1960–61-ம் ஆண்டுக்காக அரசாங்க மானியத் தேவைகளை ஆராய்வது அவசியமாகும். படிக்கிரம முறையின்கீழ் அரசாங்கம் செய்ய வேண்டிய செலவு அளவினைவிட அதிக அளவில் எந்தெந்த வட்டாரங்களில் செலவு செய்யப்பட்டுள்ளதென்பதைக் கண்டு கொள்ளவே இப்படிச் செய்ய வேண்டும். இத்தகைய விஷயங்களில் இடைக்கால சரிகட்டுதல்கள் செய்வது அவசியமென தல நிர்வாக சட்டப் பேரவைக் குழுவின் உள்ளூர் நிதித் துணைக் குழு கூறியுள்ளது. இந்தச் சரிக்கட்டுதல்களை 1962–63 முதல் அமுலுக்குக் கொண்டு வரும் வகையில் உரிய காலத்தில் ஆணை பிறப்பிக்க வேண்டும். புதிய அடிப்படையில் 1962–63 முதல் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் அரசாங்கம் தரும் தொடக்கக் கல்வி செலவுத் தொகை 1961–62-ம் ஆண்டில் நிகரச் செலவு அடிப்படையில் அளித்த தொகைக்குக் குறையாமலிருக்குமாறு இச் சரிக்கட்டுதலைச் செய்ய வேண்டும்.

8. பஞ்சாயத்து யூனியன்களின் அதிகாரிகளும், அரசாங்க அதிகாரிகளும் முறையே செய்ய வேண்டிய அலுவல்களும், பஞ்சாயத்து யூனியனுக்குச் சொந்தமான தொடக்கப் பள்ளிகளை நிர்வகித்துப் பரிபாலிக்க பஞ்சாயத்து யூனியன்களின் அதிகாரிகள் அனுசரிக்க வேண்டிய நடை முறையும் இந்த ஆணையின் 1-ம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. கல்வி வளர்ச்சி அதிகாரிகளின் கடமைகளும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. பஞ்சாயத்து யூனியன்களிடம் வந்து சேரும் தொடக்கப் பள்ளிகளின் நிர்வாகத் திறமையை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதே இம்மாறுதலின் உடனடியான நோக்கமாகும். இதை வலியுறுத்த அரசாங்கத்தார் விரும்புகின்றனர். இணைப்பில் இது பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன்களின் அதிகாரிகள் விசேஷமாக இதைக் கவனிக்க வேண்டும் என்று அரசாங்கத்தார் விரும்புகிறார்கள்.

9. அரசாங்கத்தார் ஏற்கெனவே அங்கீகரித்த திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் கண்டுள்ள வரையறைகளுக்குட்பட்டும் அத்திட்டத்தின் வரம்பிற்குள்ளும் வட்டாரத்தில் தொடக்கக் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கான ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றைத் தீட்டுவது பள்ளி ஆலோசனைக் குழுவின் பொறுப்புகளில் ஒன்ருகும். இக் குழுக்கள் அமைக்கப்பட்டவுடன் இந்த முக்கியமான வேலையை அவை மேற்கொள்வது அவசியம் ஆகும். ஸ்தல ஸ்தாபனங்கள் எழுப்ப வேண்டிய நிதிகள் பற்றியும் தொடக்கக் கல்விச் செலவில் அரசாங்கத்தாரின் பங்கினைப் பற்றியும் அக்குழுக்கள் மதிப்பிடும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட பொது விவரத்தை பஞ்சாயத்து யூனியன் மன்றம் ஆலோசித்து அனுமதிப்பதற்காக அதனிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

10. ஆறு முதல் 11 வயது வரையுள்ள சிறுவர்களை 1 முதல் 5 வரை உள்ள வகுப்புகளில் சேர்த்துக் கல்வி பயில்விப்பதைச் சட்ட பூர்வமாகக் கட்டாயமாக்கும் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதுதான் தொடக்கக் கல்வித் துறையில் செய்ய வேண்டிய பல்வேறு அலுவல்களில் முக்கிய மானதாகும். மூன்ருவது திட்டக் கால முடிவிற்குள் இம் மாநிலத்தில் முதல் ஐந்து வகுப்புகளில் 6 முதல் 11 வயது வரையிலுள்ள எல்லாச் சிறுவர்களுக்கும் கட்டாயத் தொடக்கக் கல்வியளிக்க வேண்டும் என்று அரசாங்கத்தார் தீர்மானித்துள்ளனர். இக் கொள்கையை வெற்றிகரமாக அமுலுக்குக் கொண்டு வருவது பஞ்சாயத்து யூனியன்களைப் பொறுத்துள்ளது. ஒவ்வொரு பஞ்சாயத்தும் தனது வரம்பிற்குள்ளாக இக் காரியத்தைப் பொறுத்தவரை பஞ்சாயத்து யூனியனின் பதிவாளராகப் (ஏஜெண்டாக) பணியாற்றும்படி ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியமாகும். 1920-ம் ஆண்டு தொடக்கக் கல்விச் சட்டத்தில் கட்டாயக் கல்வித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்கான ஷரத்துக்கள் அடங்கியுள்ளன. அத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கான முறையும் அதில் கண்டுள்ளது. எனினும், இந்த ஷரத்துக்கள் போதுமானவையல்ல என்பதும், அதில் கூறியுள்ள முறைகள் தகுந்த முறைகள் அல்ல என்பதும் அனுபவத்தால் அறியப்பட்டுள்ளது. சட்ட பூர்வமாக வகை செய்யப்பட்டுள்ள கட்டாயத் திட்டம் செயல் முறையில் சாத்திய மற்றது என்றும் பலனளிக்கத் தக்கதன்று என்றும் நிரூபணமாகியுள்ளது. ஒவ்வொரு கிராமத்திலும் கிராம மக்களின் தலைவர்கள் தக்க சூழ்நிலையை ஏற்படுத்தினலொழிய மேற்சொன்ன நிலைமைதான் தொடர்ந்து இருக்கும். கிராமத்திலுள்ள ஒவ்வொரு பெற்றேரும் (பாது காவலர் உட்பட) இது விஷயமாகத் தமது பொறுப்பை உணரச் செய்ய இடையருத முயற்சி எடுத்துக் கொள்வது கிராமத் தலைவர்களின் கடமையாகும். ஒவ்வொரு கிராமத்திலுள்ள கிராம மக்களின் மனத்தை மாற்றி அதன் மூலம் கட்டாயத் தொடக்கக் கல்வித் திட்டத்தை ஒவ்வொரு கிராமத்திலும் அமுலுக்குக் கொண்டு வரும் பொறுப்பைப் பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் சார்பாகச் செயலாற்றும் முறையில் கிராமப் பஞ்சாயத்திடமே விட்டு விடவேண்டும் என்பதை அரசாங்கத்தார் ஏற்றுக் கொண்

டுள்ளனர். இக்காரியத்துக்காக, ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஒரு விசேஷக் குழுவினை அமைக்க வேண்டும். பள்ளி வயதுச் சிறுவர்கள் எல்லாரையும் பள்ளிகளில் சேர்த்து அவர்கள் ஒழுங்காகப் பள்ளிக்கு வரும்படி பார்த்துக் கொள்ளும் பொறுப்பு அக்குழுவைச் சாரும். முக்கியமாக இதற்கெனவே அமைக்கப்பட்ட இந்தச் சிறப்புக் குழுவிடம் தேசீய வளர்ச்சித் திட்டத்தைச் சேர்ந்த சமூகக் கல்வி வேலைத் திட்டம் சம்பந்தப்பட்ட இதர அலுவல்களையும் ஒப்படைக்கலாம் என்று அரசாங்கத்தார் விரும்புகிறார்கள். எனவே, அக் குழுவிற்கு "பஞ்சாயத்து (சமூகக் கல்வி) குழு" என்று பெயரிடலாம்.

11. மேலே சொன்ன முடிவை அமுலுக்குக் கொண்டுவர அவசியமான ஏற்பாடுகளும், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து (சமூகக் கல்வி) குழுக்கள், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் இவற்றிற்கு இது விஷயமாக உதவுவதற்கான விதிகளும் இந்த ஆணையின் இரண்டாவது இணைப்பில் கண்டுள்ளன. முக்கியமாக பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து (சமூகக் கல்வி) குழுக்களும், பொதுவாக பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களும் அவற்றின் அதிகாரிகளும் இதைக் கவனமாகப் படித்து அதன்படிக் கட்டாயமாக நடக்க வேண்டும். இந்த இணைப்பில் குறிப்பிட்டுள்ளதைப்போல் இம் முறை மூன்றுவது திட்டக் கால அளவு முழுவதும் தொடர்ந்து நிறைவேற்றப்பட வேண்டியதும் முறையாக அமைக்கப்பட்டதுமான ஒரு சமூகக் கல்வித் திட்டம் என்று கருதப்பட வேண்டும். இந்த இணைப்பில் கண்டுள்ள சில விதிகள் தொடக்கக் கல்வி சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட சட்டபூர்வமான விதிகளை மாற்ற வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தலாம். புதிய திட்டத்தை உடன்டியாக அமுலுக்குக் கொண்டுவர அவசியமான விதிகளின் தொகுப்பைத் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

12. (i) பஞ்சாயத்து யூனியன்களில் தொடக்கக் கல்வி நிர்வாகத்துக்கான பணியாளர்கள் யாவர் என்பது பற்றிய விஷயம் 1961-ம் ஆண்டு பிப்ரவரி, ஆகஸ்ட் மாதங்களில் புனராலோசனைக்கு வரும். அக்கால அளவுக்குள், பஞ்சாயத்து யூனியன்கள் செயலாற்றுவது பற்றியும் தொடக்கக் கல்வி சம்பந்தப்பட்ட யூனியன் அதிகாரிகள் செயலாற்றுவது பற்றியும் ஓரளவு அனுபவம் ஏற்பட்டிருக்கும்.

(ii) கிராமப் பகுதிகளில் உள்ள நூல் நிலையங்களில் நிர்வாகம் போன்ற வேறு சில விஷயங்கள் குறித்துத் தற்போது வெளியிடப்படும் விதிகளில் எதுவும் சொல்லவில்லை. 1962–63-ம் ஆண்டு முதல் முழு மாற்றம் ஏற்படும் பொழுது தற்போது வெளியிடப்பட்டுள்ள விதிகளில் என்ன சேர்க்கைகள் செய்ய வேண்டும், தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளில் என்ன மாறுதல்கள் செய்யவேண்டும் என்பதைப்பற்றி முடிவு செய்வது அவசியமாகும்.

(iii) மேலே குறிப்பிட்டுள்ள இரண்டாவது புனராலோசனை நடந்த பிறகு இந்த விஷயங்கள் எல்லாவற்றின் மீதும் முடிவுகள் செய்யப்பட்டு 1962–63 நிதி ஆண்டின் தொடக்கத்துக்கு முன்பு, விரிவான விதிகள் வெளியிடப்படும்.

(இணைப்பு அடுத்த பக்கம் காண்க)

இணைப்பு I

பஞ்சாயத்து யூனியனின் கல்வி நிர்வாகமும் தொடர்பான விஷயங்களும்.—பஞ்சாயத்து யூனியன் ஆணையராகப் போகிற வட்டார வளர்ச்சி அதிகாரி பஞ்சாயத்து யூனியன் நிர்வாக அதிகாரியாவார். தொடக்கக் கல்வி சம்பந்தப் பட்ட கடமைகளை இவர் நிறைவேற்றுகையில், அக் கல்வி விஷயத்திலேயே முழுமையும் ஈடுபட்டுள்ள அதிகாரியாகிய கல்வி வளர்ச்சி அதிகாரி அவருக்கு உதவியாக இருப்பார். ஒவ்வொரு வட்டாரத்தின் சமூகக் கல்வி அதிகாரியின் (ஆண்) பதவிப் பெயர் கல்வி வளர்ச்சி அதிகாரி என்று மாற்றப்படும். இதுவரை சமூகக் கல்வி அதிகாரி (ஆண்) என்ற முறையில் தாம் செய்துவந்த கடமைகளையும், தற்போது கல்வி வளர்ச்சி அதிகாரி என்ற முறையில் தாம் செய்ய வேண்டிய அதிகப்படியான கடமைகளையும் அவர் நிறைவேற்றுவார்.

2. **அரசாங்க உதவி பெறும் பள்ளிகளும் துறையினர் நடத்தும் பள்ளிகளும்.**—1961–62 நிதி ஆண்டு முடிவு வரையில், அரசாங்க உதவி பெறும் தொடக்கப் பள்ளிகள், துறையினர் நடத்தும் பள்ளிகள் ஆகியவற்றின் மேல் விசாரணை அதிகாரம் தற்போது எந்த அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ, அதே அதிகாரிகளிடம் தொடர்ந்து இருந்து வரும். இந்த அரசாங்க ஆணையிலும் உடனுள்ள இரண்டு இணைப்புகளிலும் கண்டுள்ள விதிகளின்படி இப் பள்ளிகள் சம்பந்தமாகக் குறிப்பாகச் சில கடமைகள் பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. பஞ்சாயத்து யூனியன் நிர்வாகம் இக் கால அளவில் இக் கடமைகள் நீங்கலாக இப் பள்ளிகள் சம்பந்தமாக வேறு கடமைகளை மேற்கொள்ள வேண்டிய தில்லை. அரசாங்க உதவி பெறும் தொடக்கப் பள்ளிகள் செயலாற்றுவதைத் தொடர்ந்து மேல் விசாரணை செய்வ தோடு கல்வித் துறையினர் நடத்தும் பள்ளிகளையும் கல்வித் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் தொடர்ந்து நிர்வகிப்பார்கள். மற்றையத் துறையினரின் பள்ளிகள் அந்தந்தத் துறையினரால் தொடர்ந்து நிர்வகிக்கப்படும். மதிய உணவுக் குழுக்கள் எல்லாவற்றிற்கும் கொடுக்க வேண்டிய மானியங்களை மதிப்பிடும் பொறுப்பினையும் கல்வித் துறை அதிகாரிகளே ஏற்பார்கள். எல்லா நிர் வாகத்தினரின்கீழ் உள்ள எல்லாத் தொடக்கப் பள்ளி களையும் கல்வித் துறையினர் தொடர்ந்து பார்வையிடுவார் கள். தொடக்கக் கல்வியைப் பொறுத்தமட்டில் துறை யினருக்கும், பஞ்சாயத்து யூனியன், அதன் அதிகாரி களுக்கும் இடையே உள்ள உறவு, தற்போது தொடக்கக் கல்வி சம்பந்தமாக துறையினருக்கும் மாவட்டக் கழகங் களுக்கும் இடையே உள்ள உறவு என்னவாக உள்ளதோ அதேபோன்று இருக்கும்.

3. **அரசாங்க உதவி பெறும் தொடக்கப் பள்ளிக்குப் போதனை மானியங்கள் கொடுப்பது சம்பந்தமாக ஏற்படும் செலவும்,,** மதிய உணவுக் குழுக்களுக்கு மானியங்கள் வழங்குவது சம்பந்தமாக ஏற்படும் செலவும் பஞ்சாயத்து யூனியன் கல்வி நிதியின்கீழ்ப் பற்றுக வைக்கப்பட வேண்டும். இம் மானியங்களைக் கொடுக்கும் விஷயத்தில் அடியிற்கண்ட நடைமுறை அனுசரிக்கப்படும். அரசாங்க உதவி பெறும் தொடக்கப் பள்ளிகள் செயலாற்றுவதை துணை இன்ஸ்பெக்டர் பார்வையிட்டு, வழக்கமாகத் தற் போது செய்து வருவதைப்போல் மாவட்டக் கல்வி அதி காரிக்குப் போதனை மானியப் பட்டியை அனுப்புவார். மாவட்டக் கல்வி அதிகாரி, அதைச் சரிபார்த்து, மானியம் பெற அப் பள்ளிக்கு உள்ள தகுதியைப்பற்றித் தாம் திருப்தியடைந்த பிறகு, தற்போது, செய்வதுபோல தாமே மானியத்தை அனுமதிப்பதற்குப் பதிலாக, தொகை செலுத்தும் பொருட்டு பஞ்சாயத்தின் யூனியன் ஆணை யருக்கு அந்தப் பட்டியை அனுப்புவார். மதிய உணவுக் கான மானியம் சம்பந்தமாகவும் இதே நடைமுறை அனுசரிக்கப்படும். ஒவ்வொரு மதிய உணவுக் குழுவும் இயங்கி வருவதைப் பற்றித் துணை இன்ஸ்பெக்டர் திருப்தி யடைந்த பிறகு, மானியத்துக்கான பட்டியை மாவட்டக் கல்வி அதிகாரிக்கு அனுப்புவார். மாவட்டக் கல்வி அதி காரி தொகை செலுத்துவதற்காக அந்தப் பட்டியை பஞ்சாயத்து யூனியன் ஆணையருக்கு அனுப்புவார். அர சாங்க உதவி பெறும் பள்ளிகளுக்குப் பராமரிப்பு மானியம் கொடுப்பதும் இதே முறையில் முறைப்படுத்தப்படும். அதாவது, துணை இன்ஸ்பெக்டர் அதை வழக்கப்படிக் கணக்கிட்டு, பட்டியை மாவட்டக் கல்வி அதிகாரிக்கு அனுப்புவார். மாவட்டக் கல்வி அதிகாரி, தொகைச் செலுத்துவதற்காக அப் பட்டியைப் பஞ்சாயத்து யூனியன் ஆணையருக்கு அனுப்புவார். அந்தந்தக் கல்வி நிறுவனம் அல்லது குழுவிற்குத் தொகையைத் தரும்படி பஞ்சா யத்து யூனியன் ஆணையர் ஆணையிடுவார்.

4. பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்கள் நடத்தும் முதியோர் பள்ளிகளை நடத்தும் பொறுப்பும், விதிகளின்படி அவைகளுக்கு மானியங்கள் வழங்கும் பொறுப்பும் பஞ்சாயத்து யூனியன்களைச் சாரும். இதர பள்ளிகள் விஷயமாக, கல்வித் துறையினர் தொடர்ந்து மேல் விசாரணையதிகாரம் வகிப்பர். அரசாங்க

உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளுக்குப் போதன மானியம் அளிக்கும் விதத்திலேயே இப் பள்ளிகளுக்கு மானியத் தொகைகள் வழங்கப்படும்.

5. பஞ்சாயத்து யூனியனுக்கு உள்ள நிர்வாகப் பொறுப்புகள்.—(i) பஞ்சாயத்து யூனியன் மன்றம் பஞ்சாயத்து யூனியனின் நிர்வாக சபையாக இருக்கும். தொடக்கக் கல்வி சம்பந்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை அது அனுமதிக்கும். செலவினங்களுக்கும் அது அனுமதியளிக்கும்.

(ii) பஞ்சாயத்து யூனியன் (கல்விக்) குழு வரவு செலவுத் திட்ட உத்தேசங்களையும் செலவினங்களையும், அனுமதிப்பதுபற்றி முன்னதாகவே பரிசீலனை செய்வது மூலம் பஞ்சாயத்து யூனியன் மன்றத்துக்கு உதவ வேண்டும். தொடக்கக் கல்வி சம்பந்தப்பட்ட வேலைத் திட்டத்தின் முன்னேற்றத்தைப் பற்றியும் அக் குழு பரிசீலனை செய்யவேண்டும்.

(iii) பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளிகளின் அன்றாட நிரவாகத்துக்குப் பஞ்சாயத்து யூனியன் ஆணையர் பொறுப்பு வகிக்க வேண்டும். அப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்கும், அவர்கள்மேல் ஒழுங்கு மேல் விசாரணை அதிகாரம் வகிக்கவும் அவர் பொறுப்பாளியாவார். பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளிகள் அல்லாத இதர தொடக்கப் பள்ளிகளுக்கும், போதன மானியத்தையும் பராமரிப்பு மானியத்தையும், உள்ளூர் மதிய உணவுக் குழுக்களுக்கு மதிய உணவுக்கான மானியங்களையும் உடனுக்குடன் வழங்க அவரே பொறுப்பாளியாவார். பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களை நியமிப்பது, மாற்றுவது இவற்றிற்கும் பஞ்சாயத்து யூனியன் ஆணையரே பொறுப்பு வகிப்பார்.

மேற்சொன்ன அலுவல்களைச் செய்வதில் கல்வி வளர்ச்சி அதிகாரி பஞ்சாயத்து யூனியன் ஆணையரின் முக்கிய நிர்வாக உதவியாளராக இருக்க வேண்டும். (அவரது கடமைகள் பற்றி மேலும் அறிய, கீழே 10-வது பாராவைப் பார்க்கவும்.)

6. சம்பளம் வழங்குதல்.—பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள் வழங்க அடியிற்கண்ட நடைமுறை அனுசரிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு ஆசிரியரும் தமது ஊதியத்தை ஒரு மாதத்தில் பள்ளி வேலை செய்யும் முதல் மூன்று நாட்களுக்குள் நிச்சயமாகப் பெறும் பொருட்டு அவ்வாறு செய்ய வேண்டும். அடுத்தடுத்துள்ள பகுதியில் உள்ள எல்லா பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளிகளும் ஒரு தொகுதியாகச் சேர்க்கப்பட்டு, அத் தொகுதியில் உள்ள மிகப் பெரிய பள்ளியின் தலைமை ஆசிரியருக்கு அந்தத் தொகுதியில் சம்பளத்தை பட்டுவாடா செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்படும். அத் தொகுதியில் உள்ள பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளிகளின் எல்லா ஆசிரியர்களின் சம்பளங்களும் அடங்குகிற தொகைக்கான உண்டியல் (செக்) ஒவ்வொரு மாதமும் அவருக்கு அனுப்பப்படும். அந்த உண்டியலை மாற்றி (a) ஒவ்வொரு பள்ளிக்குச் சேரவேண்டிய தொகையை அப் பள்ளியின் தலைமை ஆசிரியருக்கு பட்டுவாடா செய்யவும், (b) தனது பள்ளியின் ஆசிரியர்களுக்கு சம்பளங்களைப் பட்டுவாடா செய்யவும் அவர் பொறுப்பாளியாவார். இம் முறை சம்பந்தப்பட்ட விரிவான விதிகள் தனியாக வெளியிடப்பட்டுள்ளன.

7. பள்ளி உணவு.—மதிய உணவுத் திட்டத்தை அமுல் நடத்த நன்கொடை கொடுப்பவர்கள் எல்லாரையும் கொண்ட உள்ளூர்க் குழுக்களையும் சிறிய நிர்வாகக் குழுக்களையும் அமைக்கும் தற்போதைய முறை தொடர்ந்து இருக்கும். பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்தின் யூனியன் போன்ற ஒரு தல அதிகார சபை தனது பொது நிதியிலிருந்து உணவுத் திட்டத்தின் உள்ளூர்ப் பங்காகிய 4 நயா பைசா பங்கிற்கு அளிக்க முன் வந்தால், அது அவ்வாறே செய்யலாம். அதே சமயம், அது அளித்த நன்கொடைத் தொகையின் வீதாச்சாரத்தையொட்டி நன்கொடையாளர்களின் நிர்வாகக் குழுவில் அதற்குத் தக்க விதத்தில் பிரதிநிதித்துவம் அளிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அரசாங்கத்தார் இதுவரை அளித்து வந்த 6 நயா பைசா மானியத்தை, பஞ்சாயத்து யூனியன் ஆணையர், துணை இன்ஸ்பெக்டராலும் மாவட்டக் கல்வி அதிகாரியாலும் அனுமதிக்கப்பட்ட பில்லுகளைப் பெற்றுக் கொண்ட பிறகு, பஞ்சாயத்து யூனியன் (கல்வி) நிதியிலிருந்து உள்ளூர்க் குழுக்களுக்கு அளிக்க வேண்டும். பஞ்சாயத்து அபிவிருத்தி வரவு-செலவுத் திட்டத்தில் பள்ளி உணவு மானியத்துக்காகத் தனி நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. அதிலிருந்து மேலே சொன்னபடி செலுத்தப் பட்ட தொகைகள் ஈடு செய்யப்படும்.

8. ஒழுங்கு மேல் விசாரணை.—மாவட்டக் கழக ஆசிரியர்கள் சம்பந்தமாக, தற்போது மாவட்டக் கழகத் தலைவர் தண்டனை அளிக்கும் அதிகாரியாவார். பள்ளிகளின் டிவிஷனல் இன்ஸ்பெக்டருக்கு ஒரே ஒரு அப்பீல்தான் உண்டு. இனிமேல், பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளிகளின் ஆசிரியர்கள் சம்பந்தமாகத் தண்டனை அளிக்கும் அதிகாரி பஞ்சாயத்து யூனியன் ஆணையர் ஆவார். தற்போதுள்ளதைப் போல், பள்ளிகளின் டிவிஷனல் இன்ஸ்பெக்டருக்கு ஒரு அப்பீல்தான் உண்டு.

9. ஆசிரியா பதவிகளுக்கு அனுமதி அளிப்பதும் ஆசிரியர்களை நியமிப்பதும்.—(i) பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளிகளில் புதிய ஆசிரியர் பதவிகளுக்கு அனுமதி

யளிப்பது அடியிற்கண்ட நடைமுறையால் முறைப்படுத்தப் படும். பள்ளியின் தலைமை ஆசிரியர் புதிய ஆசிரியர் பதவி அல்லது பதவிகள் ஏற்படுத்தவேண்டிய காரணத்தை எடுத்துக்கூறி அப் பதவி அல்லது பதவிகளுக்கு அனுமதியளிக்குமாறு கோரி பஞ்சாயத்து யூனியன் ஆணையருக்கு விண்ணப்பித்துக்கொள்ளவேண்டும். பிறகு, பஞ்சாயத்து யூனியன் ஆணையர், கல்வி வளர்ச்சி அதிகாரி அப் பள்ளியைப் பார்வையிட்டு மேற்கொண்டு பதவியை ஏற்படுத்துவதற்கான அவசியம் பற்றி அறிக்கை சமர்ப்பிக்கும்படி அவருக்கு ஆணையிட வேண்டும். பள்ளிக்கு வரும் மாணவர்களின் சராசரி எண்ணிக்கையின் அடிப்படையில் நோக்குமிடத்து ஒரு புதிய பதவியை (அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளை) ஏற்படுத்துவது அவசியம் என்று கல்வி வளர்ச்சி அதிகாரி திருப்தி அடைந்து அப் பதவி அல்லது பதவிகளுக்கு அனுமதியளிக்கலாம் என்று சிபாரிசு செய்தால், ஆணையர் தமது சிபார்சுடன் அவ் விஷயத்தை பஞ்சாயத்து யூனியன் மன்றத்தைச் சேர்ந்த கல்விக் குழுவிடம் சமர்ப்பிப்பார். அக் குழு அதை அங்கீகரிப்பதன் மேல், அப் பதவி அல்லது பதவிகளுக்கு அனுமதியளிக்கப்படும். பள்ளிகளின் துணை இன்ஸ்பெக்டர் பள்ளிகளை பார்வையிட்டுப் புதிய பதவிகளுக்கான தேவைகளைப் பற்றிச் சான்று கூறுவது தற்போது அவசியமாக உள்ளது. இனிமேல் இவ்வாறு செய் செய்ய வேண்டியது அவசியமில்லை.

(ii) பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் உள்ள காலி இடங்களை நிரப்புவதற்காக நபர்களை நியமனக் குழுவினர் நியமிப்பார். பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் நியமன உத்தரவைப் பிறப்பிப்பார்.

10. கல்வி வளர்ச்சி அதிகாரிகளின் கடமைகள்.—(i) ஒவ்வொரு வட்டாரத்திலும் செய்ய உத்தேசித்துள்ள மாறுதல்களின் நோக்கங்களை மனத்தில் பதிந்து கொள்வது அவசியம். கல்வி வளர்ச்சி அதிகாரியின் நியமனமும் இதில் அடங்குகிறது. முன்னுள் மாவட்டக் கழகப் பள்ளிகளின் திறமையை அபிவிருத்தி செய்வதே இதன் உடனடியான நோக்கமாகும். இதுவரையில் இப் பள்ளிகளின் தேவைகள் என்ன, அவை ஒழுங்காக செயலாற்றுகின்றனவா என்று நிர்வாகத் துறையில் உள்ள எவரும் இப்பள்ளிகளை பார்வையிட்டதில்லை. கல்வித் துறையைச் சேர்ந்த பள்ளித் துணை இன்ஸ்பெக்டர் எப்போதாவது வருகிறார். இதுதான் இப்போது நடக்கும் மேற்பார்வை வேலை. இதைக் கிரமமான மேற்பார்வை என்று சொல்ல முடியாது. நிர்வாக பொறுப்பு வகிப்பவர் அல்லது அவருடைய பிரதிநிதி சரியாக மேல்விசாரணை செய்வதாகவும் கருத முடியாது. நியமிக்கப்படவிருக்கும் கல்வி வளர்ச்சி அதிகாரிகள் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பள்ளியையும் கிரமமாகப் பார்வையிட்டு, அதனுடைய தேவைகளைக் கவனித்து ஆவன செய்வார். ஆசிரியர்கள் ஒழுங்காகப் பள்ளிகளுக்குச் சென்று திருப்திகரமாகப் பாடங்கள் கற்றுக்கொடுக்கின்றார்களா என்பதையும் கவனிப்பார்.

(ii) பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஒவ்வொன்றிலும் எழுதுபொருள், மேசை, நாற்காலி முதலியவை, கையிருப்புகள் ஆகியவற்றையும் சரி பார்ப்பது கல்வி வளர்ச்சி அதிகாரியின் கடமையாகும். இப்படிச் செய்தால்தான் பள்ளியிடம் ஒப்படைக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் சரிவர பயன்படக்கூடிய விதத்தில் உபயோகிக்கப்படுகின்றனவா என்று அவர் பார்க்க முடியும். இது அவரது அலுவல்களில் மிகவும் முக்கியமானதொன்றாகும். எவ்வளவு காலத்துக்கொரு முறை அவர் மேற்படி பள்ளிகளைப் பார்வையிட வேண்டும், பார்வையிடும் முறை என்ன என்பன போன்ற விஷயங்கள் குறித்துப் பின்னர் ஆணை பிறப்பிக்கப்படும்.

(iii) மதிய உணவுத் திட்டங்களை தற்போது கல்வித் துறை அதிகாரிகள் நிர்வகித்து, நிறைவேற்றிவருகின்றனர். அவர்கள் இந்த வேலையைத் தொடர்ந்து செய்வர். கல்வி வளர்ச்சி அதிகாரிகள் இந்தப் பொறுப்பை கல்வித்துறை அதிகாரிகளுடன் பகிர்ந்துகொண்டு கல்வித் துறை அதிகாரிகளுக்கு இது குறித்து உதவி செய்வர்.

(iv) மூன்றாவது, திட்டக் காலத்தில் வயதடைந்த சிறுவர்கள் அனைவரும் பள்ளிக்குச் செல்வது கட்டாயமாக்கப்படும். பெற்றோர்கள் ஐந்து வகுப்பு வரையில் சிறுவர்களைக் கட்டாயமாகப் பள்ளிக்கு அனுப்பியாகக வேண்டும். இதற்கான ஏற்பாடுகள் II-ம் இணைப்பில் விவரிக்கப்பட்டுள்ளன. கல்வி வளர்ச்சி அதிகாரிகள் பள்ளிகளுக்குச் சென்று பார்வையிடும்பொழுது இந்த ஏற்பாடு எவ்வாறு செயல்படுகிறது என்பது குறித்துப் பஞ்சாயத்து (சமூகக் கல்வி) குழுக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்; மேலும், இத் திட்டத்தின் அபிவிருத்தியைப் பற்றி பஞ்சாயத்து யூனியன் ஆணையாளருக்கு அவ்வப் போது அறிவிக்க வேண்டும்.

(v) கல்வி வளர்ச்சி அதிகாரிகளின் கடமைகள் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்யவேண்டிய மொத்த நாட்கள், அவர்கள் கவனிக்க வேண்டிய விஷயங்கள், அவர்கள் அனுப்ப வேண்டிய அறிக்கைகள், நடைமுறை விவரங்கள் ஆகியவை பற்றி விரிவான விதிகள் பின்னர்ப் பிறப்பிக்கப்படும்.

இணைப்பு II

பள்ளிகளில் சிறுவர்களைச் சேர்ப்பதையும் அவர்கள் பள்ளிக்குச் செல்வதையும் சட்டப்படி கட்டாயமாக்குவது.

(1) சிறுவர்கள் தொடக்கப் பள்ளிகளில் "I முதல் V வகுப்புகளில் சேர்ந்து பள்ளிகளுக்குத் தவறுமல் செல்வதைச் சட்டபடிக் கட்டாயமாக அமுல் நடத்தும் வேலையை (இம் முறை எந்தெந்தப் பகுதிகளில் அமுலில் இருந்து வருகிறதோ அங்கங்கு) இப்போது அட்டென் டன்ஸ் கமிட்டிகளும் (Attendance Committees) மாவட்டக் கல்வி அதிகாரியும் செய்து வருகின்றனர். ஒரு பகுதியில், அடுத்தடுத்துள்ள பள்ளிகளுக்காக அட்டென் டன்ஸ் கமிட்டிகள் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு கமிட்டியிலும் அடியிற்கண்டவர் இருப்பர். அந்தப் பகுதி யில் உள்ள எல்லாப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், கிராம முன்சீப் அல்லது முன்சீப்புகள், துணை இன்ஸ் பெக்டரின் சிபாரிசின் பேரில் டிவிஷனல் இன்ஸ்பெக்டர் நியமிக்கும் இரு உறுப்பினர்கள் ஆகியவர்கள். அட் டெண்டன்ஸ் அதிகாரி (Attendance Officer) இருந் தால், அவரே கமிட்டியின் தலைவராவர். மற்ற விஷயங் களில், துணை இன்ஸ்பெக்டர் தலைவராக இருப்பார். இந்த மாநிலத்தில் எந்தப் பகுதியிலும் அட்டெண்டன்ஸ் அதி காரிகள் நியமிக்கப்படவில்லை. நகராட்சிப் பிரதேசங்களில், நகராட்சித் தொடக்க பள்ளி மேற் பார்வையாளர் கமிட்டி யில் ஓர் உறுப்பினராவார்; அவரே அதன் செயலாள ராகவும் இருப்பார். பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், பள்ளிகளில் சேர்க்கப்படாத அல்லது சேர்க்கப்பட்ட பிறகு ஒரு காலாண்டில் 15 தினங்களுக்கு மேல் பள்ளிகளுக்கு வராத மாணவர்களுடைய பெற்றோர்களின் பெயர்கள் அடங் கிய பட்டியல்களை இந்தக் கமிட்டியினருக்கு அனுப்ப வேண்டும். இந்தக் கமிட்டி அந்தப் பட்டியலைப் பரிசீலனை செய்து தண்டனை தருவதா அல்லது விலக்கு அளிப்பதா என்பது பற்றி சிபாரிசு செய்யும். தண்டனை தரவேண் டும் என்று கமிட்டி சிபாரிசு செய்தால், அச் சிபாரிசு மாவட்டக் கல்வி அதிகாரிக்கு அனுப்பப்பட வேண்டும். அவர் சட்டத்தில் வகை செய்துள்ள வண்ணம் தண்டனை அளிப்பார். விலக்கு அளிக்கலாம் என்று கமிட்டியினர் கருதினால், அது விஷயம் பற்றி கல்வித் துறை நெறி யாளரே முடிவு செய்யத் தகுதியுடையவர் ஆவார். இது தான் தற்போதைய விதிகளின் ஷரத்துக்கள். உண்மை யில், இந்த ஏற்பாடு முறைப்படிச் செயல்படவில்லை. ஏற் கெனவே கட்டாயக் கல்வி அமுலிலிருந்து வரும் பகுதி களில் செயலாற்றும் பல்வேறு அதிகாரிகள் தங்களது கடமைகளைச் சரிவரத் தொடர்ந்து நிறைவேற்றவில்லை அலுவல்களைத் தொடர்ந்து செய்வதுமில்லை. உள்ளூர் மக்கள் தலைவர்கள் இக் கட்டாயக் கல்வியின் அவசியத்தை உணர்ந்து இத் திட்டத்தை அமுல் நடத்துவதில் பங்கு கொண்டாலன்றி இந்த ஏற்பாடு சரிவர வேலை செய்யும் என்றும் எதிர்பார்க்க முடியாது.

(2). 1961 ம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் மாநிலம் முழுவதிலும் பஞ்சாயத்து யூனியன்கள் அமைக் கப்பட்டுவிடும். எனவே, 1962-63 ம் கல்வி ஆண்டுதான் மாநிலம் முழுவதிலும் பஞ்சாயத்து யூனியன்கள் அமைக் கப்பட்ட பின்னர் வரும் முதல் கல்வி ஆண்டாகும். இந்த ஆண்டு முதல் கிராமங்களில் தொடக்கக் கல்வியின் நிர்வாகம் முழுவதும் பஞ்சாயத்து யூனியன்களின் பொறுப்பில் இருக்கும். ஆகவே, இத் தொடக்கக் கல்வி யைக் கட்டாயமாக அமுல் நடத்துவது பஞ்சாயத்து யூனி யன்களின் பொறுப்பாகும். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனி யன் மன்றமும் இப்புதிய பொறுப்பின் பொருள் என்ன, அதை ஏன் தீவிரமாய் மேற்கொள்ள வேண்டும் என் பதை உணர வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிகள் இருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் அந்த வசதிகளை மக்கள் முற்றிலும் பயன்படுத்திக் கொள் ளவில்லை. ஒரு பகுதி சிறுவர்களும் பெருவாரியான சிறுமி களும் இன்னும் பள்ளிகளில் சேர்க்கப்படவில்லை. சேர்ந் தவர்களிலும் பலர் ஐந்தாம் வகுப்பு முடிவதற்கு முன் னர் படிப்பை நிறுத்தி விடுகின்றனர். இதனால் அவர் களுக்கு எவ்வித பயனும் கிடைப்பதில்லை. தொடக்கக் கல்விக்காகச் செலவழிக்கப்படும் பொதுப் பணத்தில் பெரும்பகுதி இவ்வாறு வீணாகிறது. தொடக்கக் கல்வி யின் பயனை அடையாதவர்கள் சமுதாயத்தின் எளிய, ஏழை மக்கள், ஹரிஜனங்களேயாவர். இனிமேல் 1956 ம் ஆண்டு ஜூலை மீ 31உயில் அல்லது அதற்குப் பிறகு பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வித் தொடக்கம் சமமாயிருக்க வேண்டும். அவர்கள் பன்னிரண்டு வயது அடையும் முன்பாவது எழுதப் படிக்கத் தெரிந்துகொள்ள வேண்டும். இதற்காக, தொடக்கக் கல்விச் சட்டத்தின் கீழ், ஒவ்வொரு பெற்றோரும் அல்லது பாதுகாவலரும் தமது குழந்தையை முதல் வகுப்பில் சேர்ப்பதுடன் ஐந்து வகுப்பு முடியும் வரையில் அக் குழந்தை பள்ளிக்குத் தொடர்ந்து செல்லும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று வகை செய்துள்ளது. அங்குள்ள சூழ்நிலையும் பெற்றோர்களின் மனப்பான்மையும் மாறினாலன்றி இக்

கட்டாயக் கல்வியை அமுல் செய்வது முடியாது. மதிய உணவுத் திட்டம் இத்தகைய சூழ்நிலையைக் கிராமங்களில் உண்டாக்கவே ஏற்பட்டது. ஆனால் இது மட்டும் போதாது. ஒவ்வொரு பெற்றோரும் ஒவ்வொரு பாதுகாவலரும் தம் கடமையை உணர்ந்து பள்ளி செல்லும் வயதடைந்த சிறுவர்களைப் பள்ளிகளுக்கு அனுப்பும்படிச் செய்வது உள்ளூர் மக்கள் தலைவர்களின் பொறுப்பாகும். பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் கடமையும் இதுவேயாகும். பஞ்சாயத்து யூனியன் மன்றம் தன் கடமையை உணர்ந்துகொள்வது அவசியமாகும். ஆனால் அப்படி உணர்ந்து கொண்டால் மட்டும் போதாது. ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள பஞ்சாயத்து அந்தக் கிராமத்தைப் பொறுத்தவரையில் பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் பிரதிநிதியாக இருந்து கட்டாயக் கல்வி விஷயத்தில் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(3) மேற்கூறிய முறையை அனுசரித்து பள்ளி செல்லும் சிறுவர்கள் ஒழுங்காகப் பள்ளிக்குச் செல்கின்றனரா என்பதைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பு பஞ்சாயத்து (சமூகக் கல்வி) குழுவினுடையதாகும். இக்குழு பஞ்சாயத்தினால் அமைக்கப்படும். பஞ்சாயத்து (சமூகக் கல்வி) குழுவின் அமைப்பையும் அதன் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் பஞ்சாயத்தே முடிவு செய்யும்படி விட்டுவிட வேண்டும். ஆனால், அடியிற்கண்ட அம்சங்கள் எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் பொதுப்படையானவையாகும் :—

(i) ஷை குழுவின் தலைவர் பஞ்சாயத்துத் தலைவராக இருக்க வேண்டும் ;

(ii) பஞ்சாயத்தின் ஹரிஜன உறுப்பினர்களில் ஒருவராவது இக் குழுவில் உறுப்பினராக இருக்க வேண்டும் ;

(iii) இக் குழுவின் பெண் உறுப்பினர் ஒருவராவது இருக்க வேண்டும். அவர் பஞ்சாயத்து உறுப்பினராக இருந்தால் நல்லது ; (அவர் தேர்தல் மூலம் வரா விட்டாலும்) புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் 15 (4) பிரிவின் கீழ் அவரை உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ள வேண்டும் ;

(iv) ஒவ்வொரு பஞ்சாயத்து (சமூகக் கல்வி) குழுவுக்கும் ஒதுக்கப்பட்ட பகுதியில் உள்ள ஒவ்வொரு தொடக்கப் பள்ளியில் பொறுப்பு வகிக்கிற ஆசிரியர் அல்லது அதன் தலைமை ஆசிரியரை அந்தக் குழுவின் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அப் பகுதியைச் சேர்ந்த கிராம முன்சீப்பையும் அக் குழுவில் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஆசிரியர்களும் கிராம முன்சீப்புகளும் இக் குழுவின் நடவடிக்கைகளில் முற்றிலும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் வாக்கெடுப்பில் அவர்கள் கலந்துகொள்ளக்கூடாது ;

(v) குழுவின் ஆசிரிய உறுப்பினர்களில் ஒருவரை குழுவின் உறுப்பினர் செயலாளராக நியமிக்கவேண்டும்.

(4) ஷை பகுதியில் உள்ள ஒவ்வொரு தொடக்கப் பள்ளியில் பொறுப்பு வகிக்கிற ஆசிரியர் அல்லது (தலைமை ஆசிரியர்) பள்ளி வயதடைந்துள்ள ஆனால் பள்ளிகளில் சேர்க்கப்படாத சிறுவர்கள் பட்டியலையும், சேர்க்கப்பட்ட பிறகும் ஒரு கால் ஆண்டில் 15 தினங்கள் பள்ளிக்கு வராத சிறுவர்கள் பட்டியலையும், அவர்களது பெற்றோர்கள், பாதுகாவலர்கள் பட்டியலையும் தயார் செய்யவேண்டும். இக் குழு, இந்தப் பட்டியலைப் பரிசீலனை செய்து, சிறுவர்களை அனுப்பத் தவறிய பெற்றோர்களுக்கு குழுவின் தலைவர் மூலம் அறிவிப்புகள் அனுப்பி, அவர்கள் தரும் விளக்கத்தைப் பரிசீலனை செய்யும். தனிப்பட்டவர்கள் தங்கள் சிறுவர் அல்லது சிறுவர்களைப் பள்ளியில் சேர்ப்பதிலிருந்து விலக்கு அளிக்கும்படி கேட்டால் அதையும் இக் குழு பரிசீலனை செய்து ஷை விலக்கு அளிக்கலாமா, வேண்டாமா என்பது பற்றி பஞ்சாயத்துக்குச் சிபாரிசு செய்யும். விலக்களிப்பது பற்றிப் பஞ்சாயத்தே முடிவு செய்ய வேண்டும். குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பும்படித் தூண்டுவதால் மட்டும் பலன் ஏற்படவில்லையென்று இக் குழுவிற்குத் தெரிந்தால், அது அபராதம் விதிக்க வேண்டுமென நிச்சயிக்கலாம். தற்போதைய விதிகளின் பிரகாரம், தங்கள் குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்க்கத் தவறிய பெற்றோர்களின் மீதும் அல்லது பாதுகாவலர்களின் மீதும் இந்த அபராதம் விதிக்கலாம். தங்கள் சிறுவர்கள், கால் ஆண்டில் பதினைந்து தினங்களுக்கு மேல் பள்ளிகளுக்குப் போகத் தவறியது இல்லை என்பதைக் கவனித்துக்கொள்ளாத பெற்றோர்களின் மேலும் பாதுகாவலர்களின் மேலும் இந்த அபராதம் விதிக்கலாம். இந்த அபராதங்களை விதிக்க பஞ்சாயத்து (சமூகக் கல்வி) குழுவினருக்கு அதிகாரம் அளிக்கும்பொழுதும் இந்த விதிகளில் எந்த மாறுதல்களும் இரா. ஆயினும், பள்ளிகளில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் பள்ளிக்குத் தவருமல் செல்வதைப் பார்த்துக்கொள்வதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியது அவசியம். இது விஷயத்தில் கட்டுப்பாடிருப்பதும் மிகவும் அவசியமாகும். தம் சிறுவர்களைப் பள்ளிகளில் சேர்க்காத பெற்றோர்களிடம் பன்முறை வற்புறுத்தி அச்சிறுவர்களைப் பள்ளிக்கு அனுப்பும்படிச் சொல்லியும் அது பலனளிக்காமல் போனால்தான் தண்டனை விதிக்க வேண்டும். பெற்றோர்கள் தம் சிறுவர்களைப் பள்ளிக்கு அனுப்பாமல் இருப்பதற்கு பல காரணங்கள் உண்டு. இவை எல்லாவற்றையும் ஒரே விதியில் தீர்த்து விட முடியாது. ஒவ்வொன்றிற்கும் தனித்தனி முயற்சியை மேற்கொள்ள வேண்டும். பள்ளி செல்லும் வயதடைந்த ஒவ்வொரு சிறுவரும் பள்ளியில் சேர்க்கப்படுகின்றனரா என்று பார்த்துக்கொள்வது பஞ்சாயத்து (சமூகக் கல்வி) குழுவின் கடமை என்பது உண்மைதான். ஆனால், தம் சிறுவர்

களைப் பள்ளியில் சேர்க்கத் தவறுகிற பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் மீது உடனடியாக அபராதம் விதிக்க வேண்டும் என்பது அவசியமில்லை. பள்ளியில் சேர்த்த பிறகு சிறுவர்கள் பள்ளிக்கு வரத் தவறுவது என்பது வேறு விஷயம். பள்ளியில் சேர்த்தபிறகு, பள்ளிப்படிப்பை முடிக்குமுன் சிறுவரைப் பள்ளியிலிருந்து நிறுத்தி விடுவதற்கு எந்தப் பெற்றோரும் சாக்கு சொல்ல முடியாது. சிறுவன் பள்ளி செல்லத் தவறுவதால் பொதுப் பணம் விரயமாகின்றது. சிறுவனை பள்ளியில் சேர்க்காமலிருந்தால்கூட இவ்வளவு பணம் விரயமாவது இல்லை. ஆகவே, பள்ளியில் சேர்க்கப்பட்ட பிறகு பள்ளிக்கு வராத சிறுவர்களுக்காக அபராதம் விதிக்கும் விதிகள் தொடக்கத்திலிருந்தே அமுல் நடத்தப்பட வேண்டும் என்றும், பள்ளியில் மாணவர்களைச் சேர்க்கத் தவறுகிற பெற்றோர்களின் மீது அபராதம் விதிக்கும் விதியைப் பின்னர் அறிவிக்கப்படுகிற தேதி வரையில் அமுல் நடத்தாமல் ஒத்திப் போட வேண்டும் என்றும் அரசாங்கம் நிச்சயித்துள்ளது. அதாவது, தம் சிறுவர்களைப் பள்ளிகளில் சேர்த்துவிட்ட பிறகு, கால் ஆண்டில் 15 தினங்களுக்கு மேல் அவர்களைப் பள்ளிக்கு அனுப்பத் தவறுகிற பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் மட்டுமே அபராதத் தண்டனை விதிக்கப்பெறுவதற்குட்பட்டவராவர். இந்த அபராதத்தைக் கிராம முன்சீப் வசூல் செய்து பஞ்சாயத்து யூனியன் நிதியில் வரவு வைக்க வேண்டும்.

(குறிப்பு.—நகரப் பஞ்சாயத்துப் பகுதிகளில், நகரப் பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி, இந்தப் பாராவிலும் இதற்கு முந்திய பாராவிலும் கிராம முன்சீப்புக்கு ஒதுக்கியுள்ள கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.)

(5) மேற்கண்ட அலுவல்களைத் திருப்திகரமாகச் செய்வதற்காக மேற்படி குழு ஓர் ஆண்டில் ஆறு முறை கூட வேண்டும். மே மாதத்தில் ஒரு கூட்டம் கூட வேண்டும். இந்தக் கூட்டத்தில் பள்ளி செல்லும் வயதடைந்துள்ள சிறுவர்களின் பட்டியலைப் பரிசீலனை செய்து, சிறுவர்களைப் பள்ளிகளில் சேர்ப்பதில் பெற்றோர்களுக்குள்ள கடமைகளைப் பற்றி அவர்களுக்குத் தெரிவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஜூன் மாத மத்தியிலே இன்னொரு கூட்டம் கூட வேண்டும். இது வரை சேர்ந்த பிள்ளைகள் எத்தனை பேர் என்பதையும், சிறுவர்களைச் சேர்க்காமலுள்ள பெற்றோர்களுக்கு அறிவிப்புகள் அனுப்புவதையும் இக்கூட்டத்தில் ஆராய வேண்டும். ஜூலை மாதத்தில் மற்றொரு கூட்டம் கூடி, தமது சிறுவர்களைப் பள்ளிகளில் சேர்க்கத் தவறிய பெற்றோர்கள் தாங்கள் அவ்வாறு தவறியதற்குக் காரணம் காட்டி அனுப்பும் விளக்கங்களைப் பரிசீலனை செய்யவும், விலக்கு கோரி அனுப்பப்படும் விண்ணப்பங்களையும் பரிசீலனை செய்யவும் வேண்டும். விலக்கு பற்றி குழுவினர் எடுக்கும் முடிவு இந்தக் கூட்டத்தில் உறுதி செய்யப்பட வேண்டும். விஜயதசமிக்கு 15 நாட்களுக்கு முன் அடுத்த கூட்டம் கூட வேண்டும். இந்தக் கூட்டத்தில் சிறுவர்களைப் பள்ளிகளில் சேர்க்கத் தவறிய பெற்றோர்கள் குறித்து முடிவாகப் பரிசீலனை செய்ய வேண்டும். இதற்குப் பிறகு, பள்ளி செல்லும் வயதடைந்த மாணவர்கள் அனைவரையும் விஜயதசமிக்குள் பள்ளியில் சேர்ப்பதற்கு தீவிர முயற்சி எடுக்க வேண்டும். விஜயதசமியன்றுதான் 1-வது வகுப்பில் சிறுவர்களைச் சேர்ப்பதற்கான கடைசி தினம். அதற்குப் பிறகு மேற்படி குழு இரண்டு முறை கூட வேண்டும். ஒன்று டிசம்பர் 31-ம் தேதி முன்பும், மற்றொன்று மார்ச்சு 31-ம் தேதிக்கு முன்பும். இக் கூட்டங்களில் பள்ளியில் சேர்ந்த பிறகு பள்ளிக்கு வராத சிறுவர்கள் பற்றி பரிசிலனை செய்ய வேண்டும்.

(6) கல்வி வளர்ச்சி அதிகாரி தமது வட்டாரத்தில் உள்ள பஞ்சாயத்து (சமூகக் கல்வி) குழுக்களுடன் தொடர்பு கொண்டு, அவர்கள் தங்கள் கடமைகளை சரிவர நிறைவேற்ற ஆலோசனையும் உதவியும் அளிக்க வேண்டும். மேலும், அவற்றின் அலுவல்கள் பற்றிப் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளருக்கு அவ்வப்போது அறிவிக்க வேண்டும். பள்ளித் துணை இன்ஸ்பெக்டர்களும் இதே கடமைகளைச் செய்ய வேண்டும். பஞ்சாயத்து யூனியனின் பள்ளி ஆலோசனைத் தனிக் குழு, பஞ்சாயத்து (சமூகக் கல்வி) குழுக்களின் வேலையைப் பரிசீலனை செய்யும். குறிப்பிட்ட எந்த ஒரு குழுவாவது தனது கடமையை நிறைவேற்றுவதில் முழு முயற்சி எடுக்கத் தவறியுள்ளதா என்று பரிசீலனை செய்யும். மேற்படி பள்ளி ஆலோசனைக் குழு அரை ஆண்டுக்கு ஒரு முறை, பஞ்சாயத்து (சமூகக் கல்வி) குழுக்களின் வேலை பற்றி விமரிசை செய்து ஓர் அறிக்கையை தயார் செய்யும். இந்த அறிக்கைகளைப் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் முதலில் பஞ்சாயத்து யூனியன் (கல்விக் குழுவினர்) முன்னரும் பிறகு பஞ்சாயத்து யூனியன் மன்றம் முன்னரும் வைப்பார். இந்த அறிக்கைகளை மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கும் அனுப்ப வேண்டும். அவர்கள் மாவட்டத்தில் உள்ள எல்லா வட்டாரங்களுக்குமாக அதே மாதிரியான அறிக்கைகளைத் தயார்செய்து, சம்பந்தப்பட்ட மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் முன்னர் வைக்க வேண்டும்.

(7) தனிப்பட்ட நபர்களின் மீது விதிக்கப்பட்ட அபராதத் தொகையோ அல்லது அபராதம் விதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கையோ இந்தத் திட்டம் வெற்றிகரமாக அமுலாவதைக் காட்டும் அளவுக்கோல் அல்ல. ஆனாலும் இத்தகைய அபராதம் விதிக்க வேண்டியது அவசியமானதுதான். இத்திட்டத்தின் முக்கிய அம்சம் என்னவென்றால், **முதலாவதாக,** கிராமத் தலைவர்கள் இதில் அக்கரை எடுத்துக்கொண்டு சிறுவர்களைப் பள்ளிக்கு அனுப்பும்படிப் பெற்றோர்களை இடைவிடாமல் தூண்டுவதற்கு அவர்களுக்கு இத்திட்டம் வாய்ப்பளிக்கிறது.

இரண்டாவதாக, பின்னடைந்த கிராமங்களின் தலைவர்கள் அதே வட்டாரங்களில் உள்ள மற்ற முன்னேற்ற கிராமங்களின் சாதனைகளைப் பார்த்து அவற்றைப் போல் நாமும் முன்னேற்றமடைய வேண்டும் என்று உற்சாகம் அடையத் தூண்டுகிறது மூன்றுவதாக, பின்னடைந்துள்ள வட்டாரங்களின் தலைவர்கள் அதே அபிவிருத்தி மாவட்டத்தில் உள்ள முன்னேற்ற வட்டாரங்களின் சாதனைகளைக் கண்டு அவற்றைப் போல் நம் வட்டாரங்களும் முன்னேற்றமடைய வேண்டும் என்று உற்சாகம் அடைய அவர்களைத் தூண்டுகிறது. இத்திட்டத்தை மூன்றுவது திட்டக் கால அளவு முழுவதிலும் தொடர்ந்து இடைவிடாமல் நிறைவேற்ற வேண்டிய ஒரு திட்டமிட்ட சமூகக் கல்வி ஏற்பாடாகவே கருத வேண்டும்.

—(::)—

எழுத்தாளர்களின் கவனத்திற்கு

பிறர் எழுதிய கதைகளையும், நாடகங்களையும், கட்டுரைகளையும் தழுவாமலும், மொழிபெயர்க்காமலும் சொந்த கற்பனை அல்லது அனுபவத்தையொட்டி, எழுதியனுப்பப்படும் சிறு கதைகள், ஓரங்க நாடகங்கள். நாட்டுப் பாடல்கள், கிராம நலம் பற்றிய கட்டுரைகள் முதலியவற்றைத் தேர்ந்தெடுத்து கிராம நலத்தில் வெளியிடுவதற்காக ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. கிராம நலத்தில் பிரசுரிக்கப்பட்ட பிறகு, அவைகளில், சிறந்தவற்றிற்கு ஒவ்வொரு மாதமும் கீழ்க்கண்டவாறு சன்மானம் வழங்கப்படும் :—

சிறு கதை.—("கிராம நலத்தில்" வெளியிட்டால், இது 5 பக்கங்களுக்குட்பட்டு இருக்கவேண்டும்)—ரூ. 25.

ஓரங்க நாடகம்.—("கிராம நலத்தில்" வெளியிட்டால், 6 பக்கங்களுள் அடங்கவேண்டும்)—ரூ. 25.

பாடல்கள்.—("கிராம நலத்தில்" வெளியிட்டால், இவை ஒரு பக்கத்துக்குள் அடங்கவேண்டும்)—ரூ. 10–லிருந்து 20 வரை (தரத்திற்கேற்றவாறு.)

கிராம வளம், காந்திய நிர்மாணத் திட்டங்கள் பற்றிய கட்டுரைகள்.—(இவை "கிராம நலத்தில்" வெளியிட்டால், இரண்டு பக்கங்களுள் அடங்கவேண்டும்)—ரூ. 10-லிருந்து 20 வரை (தரத்திற்கேற்றவாறு)

முக்கிய குறிப்பு—சிறு கதைகள், ஓரங்க நாடகங்கள், நாட்டுப் பாடல்கள் முதலியவை பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், காந்திய தத்துவம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுவதுடன், விவசாயம் பற்றியோ சமுதாய நலத் திட்ட வட்டாரங்களில் தமக்கு ஏற்பட்டுள்ள அனுபவங்களை யொட்டியோ எழுதப்பட்டவையாக இருத்தல் வேண்டும். சிறந்த கதைகளுக்கும், நாடகங்களுக்கும், நாட்டுப் பாடல்களுக்கும், கட்டுரைகளுக்கும் சன்மானமளிப்பது பற்றி ஆசிரியர் செய்யும் முடிவே இறுதியானது. "கிராம நலத்தில்" பிரசுரிக்கப்படாத கதைகள், கட்டுரைகள் முதலியவற்றைத் திருப்பி அனுப்புவது சாத்தியமல்ல. எனவே, தங்கள் எழுத்தோவியங்களின் மூலத்தை அனுப்பாமல், நகல்களை மட்டும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அரசாங்க உத்தியோகச் சார்புள்ளவர்களும், இந்தப்பணியில் நேரடியாகக் கலந்துகொள்ளலாம். அரசாங்கப் பத்திரிகையான "கிராம நலத்திற்கு" எழுத, அவர்களுக்கு எந்த விதத் தடையும் இல்லை. சன்மானம் பெற அவர்களும் உரிமை உள்ளவர் ஆவர்.

சிறப்பாக, புதிய எழுத்தாளர்கள்—கிராம சேவையில் ஊறியவர்கள்—தாம் பெற்ற அனுபவங்களை மற்றவருடன் பகிர்ந்துகொள்ளும் தொண்டுள்ளமும் கலை ஆர்வமும் படைத்தவர்கள்—இந்த வாய்ப்பை உடனடியாகப் பயன்படுத்திக் கொண்டு, திறமை மிக்க எழுத்தோவியங்களை உடனடியாக அனுப்புவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

ஆசிரியர்,
"கிராம நலம்"
கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை, சென்னை-9.

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras . Edited by the Public Relations Officer and published by the Development Commissioner, Government of Madras.



சென்னை மாநில அபிவிருத்திக் கவுன்சிலின் கூட்டம் 21-12-60-ல் முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் அவர்கள் தலைமையில நடைபெற்றது.

பிரிட்டன், மேற்கு ஜெர்மெனி ஆகிய நாடுகளிலிருந்து வந்திருந்த பத்திரிகாசிரியர்கள், பொருளாதார விற்பன்னர்கள் குழுவினர் 12-12-60-ல் நிதி அமைச்சர் ஸ்ரீ சி. சுப்பிரமணியத்தைச் சந்தித்தனர்.

Regd. No. M. 7277,

©
GOVERNMENT OF MADRAS
1961

மேல்படம் :—செங்கல்பட்டு வீடுகள் கட்டும் சங்கத்தின் புது அலுவலகக்கட்டிடத்தை முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் அவர்கள் 30-12-60-ல் திறந்து வைத்தார்.

நடுவில் :—சென்னையில் 20-12-60-ல் நடைபெற்ற டால்ஸ்டாயின் 50-வது சிரார்த்த வருடக் கொண்டாட்டத்தில் ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் பேசினார்.

கீழ் படம் :—டால்ஸ்டாயின் 50-வது சிரார்த்த வருடக் கொண்டாட்டத்தை ஒட்டி நடைபெற்ற மாணவர் கருத்தரங்கு நிதி அமைச்சர் ஸ்ரீ சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

*